Koviloor Acadamy

309

புஷ்பக் கூடை

The Basket of Flowers

A Story By

G. T. Bedall

Price 5 Annas

1428

AN LITERATURE SOCIETY FOR INDIA
ted Society for Christian Literature)
BANGALORE SECUNDERABAD COLOMBO

Koviloor Acadamy

THIS book tells us the story of the life of Mary, a pious and amiable daughter of Mr. James Rhode. The trials and difficulties she and her father had to undergo and her faith in the midst of troubles are vividly told in this book. Important Christian virtues are taught through the pages of this inspiring book.

Koviloor Acadamy

6.4.43

புஷ்பக் கூடை

The Basket of Flowers

R. Vittal. Singh

A Story

by

G. T. Bedall

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)

MADRAS BANGALORE SECUNDFRABAD COLOMBO

1940

Koviloor Acadamy

'உன்னதங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமானமானவன் யார்? அவர் வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும், உட்காரப்பண்ணுகிறார். மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா.' சங். 113: 5–9.

'நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.' சங். 37: 37.

Koviloor Academy

முகவுரை

இச்சிறு புஸ்தகம் புஷ்பக்கூடை என்னும் பெயரைப்பெற்றது யாது காரணத்தினுல் என்ருல், இதில் சொல்லப்பட்டிருக்கிற சரிதைக்குரிய பெண் பிள்ளைக்கு முந்திச் சம்பவித்த துன்பங்களுக்கும் பிந்திச் சம்பவித்த மேன்மைகளுக்கும் ஒரு புஷ்பக்கூடையே காரணமாக இருந்தது.

இச்சரித்திரம் வழக்க பழக்கங்கள் உடைபாவனை முதலியவைகளுக்கு மிகவும் வித்தியாசப்பட்ட ஒரு தூரதேசத்திலே ஏறக்குறைய நூறு வருஷங்களுக்குமுன் நடந்தது.

தேசத்துக்குத்தேசம் ஜாதிக்குஜாதி எந்தெந்தக் காலத்தில் எதெதிலே வித்தியாசப்பட்டபோதிலும் இரண்டு விஷயங்கள் எங்கும் எவர்களுக்குள்ளும் எக்காலத்திலும் ஒருகண்டசீராய் இருக்கிறது. அதாவது: சொல்லிமுடியாக துன்பத்துக்குட்படுத்துகிற மாம்சத்தின் கிரியைகளும், குறைவற்ற சந்தோஷத்துக்கும் சமாதானத்துக்கும் காரணமான ஆவியின் கனிகளுமே (கலா. 5: 19–22). முந்தினது, பசாசுக்கு ஊழியமாக தங்கள் அவயவங்களைக் கீழ்ப்படுத்தின பாவ மாம்ச இருதயம். பிந்தினதோ, கர்த்தருக்கு ஊழியமாக தங்கள் அவயவங்களை நிலைநிறுத்துகிற பரிசுத்த ஆவியினுல் புதுப்பிக்கப்பட்ட இருதயம். இவ்விரண்டையும் பின்னுல் வருகிற சரிதையில் காணலாம்.

நாமும் பாவமாம்ச இருதயமுடையவர்கள். ஆதலால் மற்றவர்களுடைய ஜீவிய விருத்தாந்தங்களைப் படிப்பதில் பரிசுத்த ஆவியானவர் பாவமாம்ச இருதயத்தில் எப்படிக் கிரியையை நடப்பிக்கிருர் என்பதை அறியலாம்.

இதில் விசேஷமாய்ப் பின்வருஞ் சத்தியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ. 3: 12). நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாய் இருக்கும்; கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் (சங். 34: 19). ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கி இருங்கள் (1 பேது. 5: 6). அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன் (சங். 91: 15). நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது (தானி. 9: 23). ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாய் இருக்கிறது (மாற். 10: 23). நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் (மத். 7: 2). நீதிமானை என்றைக்கும் தள்ளாடவொட்டார் (சங். 56: 22). அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்மார்க்

Koviloor Acadamy

இந்தப் பிரயாணங்களில் ஜேம்ஸ் என்பவன் பற்பல விஷயங்களைக் கற்றறிந்து தேர்ச்சி அடைந்ததுந்தவிர கர்த்தருடைய கிருபையால் அவன் உட்படக்கூடிய சோதனைகளுக்கெல்லாம் அவன் இருதயம் தற்காக்கப்பட்டது. அவன் நாளுக்குநாள் தன் எஜமானுக்கு மிகப் பிரீதியுள்ள அன்பன் ஆனதினால் ஊருக்குத் திரும்பினவுடனே கவுண்ட் பிரபு வியன்னுபுரியிலுள்ள தன் அலங்கார அரமனையிலே கனமுள்ளதும் வருமானத்தைத் தரத்தக்கதுமான ஒரு உத்தியோகத்தைக் கொடுத்தான்.

ஜேம்ஸ் என்பவன் லோத்தைப்போல் கண்களுக்குச் செழிப்பாய்த் தோன்றிய அவ்வுத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள பலவந்தம் பண்ணப்பட்டான்; ஆனால் மேற்படி பிரபுவின் அரமனையிலே கர்த்தருடைய நாமம் மகிமைப்படாததைக் கண்டு, தன் மனச்சாட்சிக்கு விரோதமான அநேக காரியங்கள் பின்னுக்கு நடப்பிக்கப்படவேண்டியதாய் இருக்கும் என்று எண்ணி அந்த நல்ல உத்தியோகத்தை வேண்டாம் என்று தள்ளி தான் முன்னிருந்த தாழ்ந்த நிலைமையே தெரிந்துகொண்டான். அதின்பேரில் பிரபு சொற்பக் குத்தகைக்கு ஐஸ்பர்க் ஊருக்கு அடுத்திருந்த ஒரு துண்டு நிலத்தைக் கொடுத்தார். அதில் ஒரு சிறுவீடும் கனிவர்க்கத் தோட்டம் ஒன்றும் ஒரு பெரிய மரக்கறி கோட்டமும் இருந்தது.

இவைகளைத் தன் சொந்தமாய் அனுபவித்துக்கொள்ள ஆரம்பித்த பிற்பாடு, தன் மனதுக்கு இசைந்த ஒரு மனைவியைத் தேடி விவாகஞ் செய்துகொண்டு அநேக வருஷங்களாய் இவைகளின் வருமானங்களைக்கொண்டு மிகுந்த ஆறுதலோடு ஜீவனம்பண்ணிக் காலங்கழித்து வந்தான். புத்திரபாக்கியமும் அவனுக்கு உண்டாய் இருந்தது. இப்படி பூமிக்கு அடுத்த நன்மைகளை அதிக வருத்தமில்லாமல் அனுபவித்துக்கொண்டிருக்கையில் மிகப் பிரியமான பிள்ளைகளையும் தண்டிக்கிற கர்த்தர் அவர்களையும், அவர்கள் பூமிக்கடுத்த சுகநலங்களிலேயே பற்றுதல்கொண்டுபோகாதபடிக்கும், இப்பூமி அவர்கள் இளைப்பாறும் தலம் அல்லவென்பதை உணர்த்தும்படிக்கும், பூமிக்கு அடுத்ததுகளை மறந்து மேலானவைகளில் அதிக நாட்டம் ஆகும்படிக்கும், அவன் பிள்ளைகளை ஒன்றின்பின் ஒன்றாய்த் தம்மண்டைக்கு அழைத்துக்கொண்டதுமன்றி, கடைசியாய் அவன் மனைவியையும் சொற்ப வியாதியின் வழியாய் அவனைவிட்டு எடுத்துக்கொண்டு இப்படிப் படிப்படியாய் அவனில் உள்ள பூமியின் கட்டை அவிழ்க்கச் சித்தமானர். ஒரே ஒரு பெண் குழந்தைமட்டும் அவனுக்கு மீத்துவிடப்பட்டது. மேரி என்பது அந்தக் குழந்தையின் பேர். அவள் அழகிய பிள்ளையும் வளரவளர சுறுசுறுப்புள்ள நல்ல குடித்தனக்காரியும் ஆனள். அவள் தகப்பன் அவளுக்குப் புத்திபோதனைகளைச் சொல்லி

Koviloor Acadamy

ஜெபத்திலே பழக்கிவந்தான். அவள் பதினைந்து வயதானமாத்திரத்தில் தன் தகப்பன் வீட்டின் முழுக்கவலையையும் தன்மேல் சுமந்து கொண்டாள். அவளைப்போலொத்த பிரயோஜனமான பெண் எங்கும் காணப்பட்டதில்லை. அவர்களுடைய சிறு வாசஸ்தலம் மிகச் சுத்தமும் அதிலுள்ள தட்டுமுட்டு சாமான்கள் அப்போதுதான் ஷாப்பிலிருந்து வாங்கிவந்தவைகள்போலும் இருந்தன. அவள் தகப்பனின் போஜனபதார்த்தங்கள் எப்போதும் ருசிகரமாய்ச் செய்யப்பட்டு நேரா நேரத்துக்கு வேண்டியவைகள் எப்போதும் ஆயத்தமாய் இருந்தன. இவைகளையன்றித் தோட்டவேலைக்கும் தன் தகப்பனுக்குக் கைக்குதவியாய் இருந்தாள். தோட்டத்திலுள்ள புஷ்பஜாதிகளே அவளுக்குச் சிநேகிதிகளும் தோழமாருமாய் இருந்தன.

புஷ்பஜாதிகளின் பேரில் மகள் பிரீதியாய் இருக்கிறாள் என்று தகப்பன் அறிந்து, நல்ல புஷ்பஜாதி வித்துவகைகளை அதிகமாய் வாங்கி விதைத்து அவைகளை அதிகமாய் விருத்திசெய்து தன் மகளின் சந்தோஷத்தை அதிகப்படுத்தினதோடுகூட அவைகளில் விளங்கும் ஞான அர்த்தங்களையும் அந்தந்த வேளைகளில் விஸ்தரித்துச் சொல்லி இப்படி அவள் மனதில் ஞானகாரியங்களையும் பதித்துவர அழகிய சிருஷ்டிப்புகள் நமது புறம்பான பிரயோஜனத்திற்கும் இன்பத்துக்கும் மட்டுமல்ல, உள்ளான சந்தோஷத்துக்கும் நன்மைகளுக்கும் படிப்பினையாக உண்டாக்கப்பட்டிருக்கிறதென்றும், சிருஷ்டிகரை அவர் கிரியைகளில் காணும்படி ஞானக்கண்களும், அவர் தமது பிள்ளைகளுக்குச் சொல்லும் செய்திகளை அவைகளில் வாசிக்கும் ஞான உணர்வும் நமக்குண்டாக அவரை நோக்கி ஓயாமல் கெஞ்சிவரவேண்டும் என்றும் சொல்லிவருவான். அவன் தானே இவ்விதக் கிருபையைப் பெற்றவனாய்க் கர்த்தரோடு சஞ்சரித்து, நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அவருக்குள் பிழைப்போமானால் அவர் சிருஷ்டிப்பின் கிரியைகள் ஒவ்வொன்றிலும் நாம் கர்த்தருக்கு எவ்வளவு சமீபமாய் இருக்கிறோம் என்பதை அறிவோம் என்றும் சொல்லுவான்.

மேலும் ஜேம்ஸ் விடியுமுன் எழுந்து ஒவ்வொரு நாளின் முதல் மணி நேரங்களை ஜெபத்தியானத்தில் செலவிடுவது வழக்கமாய் இருந்தது. நாளின் முதல்நேரத்தில் அரைமணி வேளையையாவது கர்த்தரோடு சஞ்சரிப்பதில் போக்காதேபோனால் தான் கிறிஸ்தவனாய்ப் பிழைக்கக்கூடாது என்பதைப் பூர்த்தியாய் அறிந்திருந்தான். மிக நேர்த்தியான கோடைகால காலை நேரங்களில் தோட்டத்தின் சிறந்த காட்சியையும் சுற்றியிருந்த ஊரின் சிறப்பையும் காண்பிக்கத்தக்க ஓர் இடத்திற்கு மேரி என்பவள் தன் தகப்பனோடுபோய் வருவது வழக்கமாய் இருந்தது. அந்த இடத்தில் தன் மகளுக்கு அவன் புத்திமதி

Koviloor Acadamy

களைச்சொல்லி ஜெபம்பண்ணி, சுற்றிலும் இருக்கிற பொருட்களில் ஒவ்வொன்றைக் காட்டி அதை அவளுக்கு விஸ்தரிக்கும் முகவுரையாக எடுத்துக்கொண்டு அவளைப் போதித்து வருவான். திருஷ்டாந்தமாக: உதிக்கிற சூரியனுடைய கிரணங்களைக் காட்டி, இது எப்படி இருளையெல்லாம் நீக்கி தன் பிரகாசத்தை எல்லாவற்றின்பேரிலும் வீசுகிறதோ, அப்படியே நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்து சுபாவக் கெடுதியினால் அந்தகாரப்பட்ட இருதயங்களைப் பிரகாசிப்பிக்கிறார், அவரே ஜீவனுக்கும் வெளிச்சத்துக்கும் ஊற்றானவர் என்றும், பனித்துளியைக் காண்பித்து, பரிசுத்த ஆவியானவர் பனித்துளிக்கு ஒப்பாய் இருதயத்தில் இறங்கி அதை நனைத்து விதைக்கப்பட்ட விதையாகிய போதனைகளை இருதயத்தில் வேரூன்றிக் கனிதரப்பண்ணுகிறார் என்றும், பட்சிகள் அதிகாலையில் எழுந்து அவைகள் பாடிக் கர்த்தரைத் துதிக்கிறதைக் கவனிக்கச்சொல்லி, அப்படியே அவளும் அதிகாலையில் எழுந்து கர்த்தரை முந்தித் துதிக்கவேண்டும் என்றும், பட்சிகளையும் லீலிப்புஷ்பங்களையும் காட்டி, ஆண்டவர் அவைகளை உவமையாக எடுத்துரைத்த போதனைகளை அவளுக்கு நினைப்பூட்டி, பூமிக்குரியவைகளுக்காக அவள் கவலைப்படவொண்ணாதென்றும் விதைக்கிறவனையும் விதையையும் கோதுமையையும் களைகளையும் கனிகொடாத அத்திமரத்தையும் திராட்சத் தோட்டத்தையும் பற்றிய உவமைகளை அவளுக்கு வாசித்துக் காண்பித்து, அவைகளின் அர்த்தங்களை அவள் இருதயத்தில் தைக்கும்படியான வார்த்தைகளை உபயோகித்தும், மனிதன் வைக்கப்பட்ட ஆதித்தோட்டத்தையும், அவன் அதிலிருந்து தூரத்துண்டதையும் நினைப்பூட்டி, அத்தோட்டம் அவள் இருதயத்துக்கும், கர்த்தருடைய சபைக்கும் குறிப்பானது என்றும், சரீர உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை அவளில் உண்டாக்க 1 கொரிந்தியர் 15. 35, 38-ல் சொல்லப்பட்ட வித்துவகைகளின் வளர்த்தியின்பேரில் விஸ்தரித்து நமது ரட்சகரே தாவீதின் வேரும் (வெளி. 22. 16), நித்திரையடைந்தவர்களில் முதற்பலபாகமானவரும் (1 கொரி. 15. 20), கீர்த்தியான நாற்றும் (எசே. 34. 29), சாரோன் வெளியின் பூவும் (உன்னத. 2. 1) ஆகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறார் என்றும் இப்படியாகப் பலவிதமாய்த் தினந்தோறும் அவள் இருதயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஞானப் பொக்கிஷங்களால் நிரப்பிவைத்தான். அவள் தன் தகப்பன் பக்கத்தில் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணக் கற்றுக்கொண்டாள். உப்புச்சப்பில்லாத வெளிவேஷ ஜெபம் அல்ல, அவள் தன் தகப்பன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்ட வார்த்தைகளின்படியே அனலாய் ஜெபம் பண்ணக் கற்றுக்கொண்டாள். இப்படியாய்க் கையாடப்பட்ட ஒவ்வொருநாளின் முதல்மணி நேரங்கள் கர்த்தருடைய கிருபையால் சிறு

Koviloor Acadamy

பெண்ணுக்குப் பொன் மணி நேரங்களாய் அவள் மனதுக்கும் இருதயத்துக்கும் ஞானவளர்த்தியைக் கொடுத்துக்கொண்டு வந்தன.

மேரி என்பவளுக்கு, லீலி, ரோஜா முதலிய புஷ்பங்கள் மிகப் பிரீதியானவைகள். இவைகளில் ஒவ்வொரு வருஷங்களிலும் முந்த முந்தப் பூக்கிற பூக்களைத் தன் தகப்பனண்டைக்குக் கொண்டுவந்து கொடுத்து மிகச் சந்தோஷப்படுவாள். அப்போது அவன் அவைகளின் நிறங்களின்படியே விசேஷமாய் லீலிபுஷ்பத்தைக் காண்பித்து, அதின் வெண்மை பரிசுத்தத்துக்கு அடையாளம்; அதின் இதழ்களைத் தொட்டமாத்திரத்தில் வதங்கிக் கெட ஏதுவாகிறது; அப்படியே தீய தன்மை ஆத்துமத்தைத் தொட்டமாத்திரத்தில் அது கறைப்பட்டுக் கெடுகிறது. அது சுபாவமாய்க் கறைப்பட்டிருந்தாலும் அக்கறையை நீக்குவதற்குத் திறக்கப்பட்ட பக்கவிலாவின் ஊற்றிலே அது தாராளமாய்க் கழுவப்படலாம். அதினால் நமது பாவங்கள் இரத்தாம்பரச் சிவப்பாய் இருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மை ஆகும். இருதயத்தில் பரிசுத்தம் இல்லாத ஒருவனும் கர்த்தரைத் தரிசிக்கக் கூடாது. கிறிஸ்துவின் நீதி என்னும் கறையற்ற வெண்வஸ்திரத்தில் உடுத்தப்படாத ஒருவனும் ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்தின் பந்தியில் உட்காரக்கூடாது என்றும், ரோஜாபுஷ்பத்தைக் காட்டி, அதின் அழகிய நிறம் ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய நாணயத்தையும் மரியாதையையும் காட்டுகிறதோடுகூட, அது வாடி வதங்கி அதின் இதழ்கள் சிதறுண்டுபோனாலும் அதின் மணமுங் குணமும் அதிகமாகவே இருக்கிறதுபோல, பிரியமுள்ள மகளே ஒரு மெய்யான கிறிஸ்தவனும் இருக்கிறான்; அப்படியே நீயும் இருக்கவேண்டும். பாலிய ரூபம் குன்றி வெளி அழகு கெட்டாலும் கர்த்தருடைய பார்வையில் உயர்ந்த விலையான அமைதியும் மெத்தெனவுமான ஆவியின் அலங்காரத்தை, ஆம் அழியாததும் குன்றிப்போகாததுமான மனதின் கிருபைகளை அடைந்துகொள்ளப் பிரயாசப்படு என்றும் புத்திமதியாகச் சொல்லுவான்.

ஜேம்ஸ் என்பவனுடைய தோட்டத்தில் அலங்காரமான கனி விருட்சங்களில் குட்டையும், வருஷந்தோறும் அதிக வரத்துள்ள பலனைத் தந்ததும், மேரி என்பவள் பிறந்த அன்று தினத்தில் நடப்பட்டதுமான ஒரு அத்திமரம் இருந்தது. ஒரு வசந்தகாலத்தில் அந்த மரம் பூக்களால் நிறைந்திருந்தது. அது பார்வைக்கு ஒரு பூச்செண்டு போல் இருந்தது; ஆனால் ஐயோ, மறுகாலையில் அதின் பூவெல்லாம் உதிர்ந்து மொட்டையாய் நின்றது. மேரி அதைப் பார்த்துக் கண்ணீர் விட்டாள். இதைத் தகப்பன் கண்டு, இது வெளிவேஷ குணங்களுக்கு அடையாளம். ஓ, பிரியமுள்ள மேரிப்பிள்ளையே, நீ இப்போது பக்தியுள்ள நற்குணசாலியாய்க் காணப்பட்டாலும் பிற்காலத்தில் இந்த

Koviloor Acadamy

மரத்தைப்போல் ஆவாயானல் நானும் உன்னைப்பார்த்துக் கண்ணீர் விடவேண்டும்; அப்போது என் நரை துக்கத்தோடு குழியில் இறங்கும் என்று சொன்னன். இவ்வார்த்தைகளோ மேரியின் இருதயத்தில் ஆழமாய்த் தைத்தது.

மேரி என்பவள் நாளுக்குநாள் இப்படித் தகப்பனல் போதிக்கப் பட்டு சிருஷ்டிப்பின் கிரியைகளில் தன் மனதின் கண்ணைச் செலுத்தி அநேக பிரயோஜனமான விஷயங்களைக் கற்று அறிந்துகொண்டாள்.

இதை வாசிக்கிற நேசா! நீயும் உன் கண்களை இப்படி உபயோகப் படுத்தி வருகிருயா? உன் மனதின் கண்கள் சுபாவமாய் இருள் அடைந்துகிடக்கிறதென்றும், அதினல் சிருஷ்டிப்பென்னும் புஸ்தகத்தை அல்லது பரிசுத்த வேதாகமங்களைத் தகுதியான பிரகாரமாய் வாசிக்க அறியமாட்டாய் என்பதையும் உணருகிருயா? தாவீது அரசன்: உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் என்று கர்த்தரை நோக்கி ஜெபித்தபோது, வேதாகமங்களைச் சரியாய் அறிந்துகொள்ள மனதின் கண்கள் முந்தத் திறக்கப்படவேண்டும் என்பதைக் காட்டுகிருர். உன் கண்கள் இன்னும் திறக்கப்படாவிட்டால் கர்த்தரை நோக்கி ஜெபித்து வேதாகமத்தை எடுத்துக்கொண்டு ஆகாயவெளியில் போய் மேரி என்பவள் வாசித்த பாடங்களை வாசி. பட்சிகள், புஷ்பங்கள் பேசுகிற இன்பமான அமர்ந்த சத்தத்தைக் கவனி. அப்போது நீ உன் முந்தின குருட்டாட்டத்துக்காக ஆச்சரியப்பட்டுப் பின்னும் பின்னும் அதையே நாடும் ஆசையைக் கொள்வாய்.

2. அதிகாரம்

பிறந்தநாள் இனம்
மேரிக்குண்டான துன்பத்துக்கு வழி

மேரி என்பவள் மே மாத ஆரம்பத்தின் ஒரு காலையில் தன் தகப்பனுடைய வேலைக்கு வேண்டிய சில அலரி மிலாறுகளும் பின்னும் சில கொம்புகளும் வெட்டிக்கொண்டுவரக் காட்டுக்குப் போனள். அவள் தகப்பன் வேலையில்லாத நேரங்களில் பலவித அலங்காரமான கூடைகள் பின்னுவது வழக்கமாய் இருந்தது. அவன் சுறுசுறுப்புள்ளவன் ஆனதால் எப்போதும் வேலை செய்துகொண்டிருப்பதே அவனுக்குப் பிரியம். காலத்தைத் தப்பாமல் பிடிக்கவேண்டும் என்பது வேத உத்தரவு என்பதை அவன் அறிந்திருந்தான். மேரி தான் போன வேலையை முடித்துக்கொண்ட பிற்பாடு பள்ளத்தாக்கிலே லீலிபுஷ்பங்கள் பூத்திருப்பதைக்கண்டு சில பெருங்கொத்து

Koviloor Acadamy

களை அறுத்து ஒன்று தன் தகப்பனுக்கும் ஒன்று தனக்குமாக இரண்டு செண்டுகளை அழகாய்க் கட்டிக்கொண்டு ஒரு ஒற்றையடிப் பாதையாய்த் திரும்பினுள். கொஞ்சதூரம் செல்லுகையில் ஐஸ்பர்க் ஊரின் அரமனைக்கு வந்திருந்த ஐஸ்பர்க் சீமாட்டியையும் அவள் புத்திரியையும் வழியில் சந்தித்து, தன் நிலைமைக்குத்தக்க மரியாதையோடு அவர்களை மினவி வழிவிலகிப் பக்கமாய் நின்ருள். புஷ்பங்களின் பேரில் பிரீதியுள்ள சீமாட்டியின் புத்திரி மேரி கையில் இருந்த பூச்செண்டைப் பார்த்து, 'ஓ எத்தனை நேர்த்தியான லீலிபுஷ்பங்கள்!' என்ருள். இதைக் கேட்டமாத்திரத்தில் மேரி அவ்விருவருக்கும் ஒவ்வொரு செண்டைக் கொடுக்க அவர்கள் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு பிறகு புத்திரியானவள் பொற்சரிகைப் பட்டுப்பை ஒன்றை எடுத்து மேரிக்குக் கொஞ்சம் பணங் கொடுக்கவந்தாள். அதை அவள் வாங்காமல், 'ஓ ஓ சீமாட்டியாரே, இந்த அற்பப் பூச்செண்டுக்காக நான் பணம் வாங்கமாட்டேன். கவுண்ட் பிரபுவாகிய என் ஆண்டவனிடத்திலிருந்து நானும் என் தகப்பனும் எத்தனையோ உபகாரங்களைப் பெற்றிருக்கிரேம். இந்தச் சொற்ப ஈவைத் தாங்கள் கிரயமில்லாமல் அங்கீகரித்துக்கொள்ளும் பாக்கியத்தை இந்த ஏழைப் பெண் அடையலாகாதா' என்ருள். சீமாட்டி சந்தோஷ புன்சிரிப்புக் கொண்டு, 'நல்லது பிள்ளையே, நீ என் புத்திரிக்கு சில வேளாவேளைகளில் இந்த லீலிபுஷ்பங்களை அரமனைக்குக் கொண்டுவந்து கொடுப்பாயா?' என, மேரி: 'நல்லது' என்று வாக்குக் கொடுக்கவே புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

மேரி தான் ஒப்புக்கொண்டபடியே ஒவ்வொரு காலையிலும் லீலி புஷ்பங்கள் கொண்டுபோய்க் கொடுத்ததில் புத்திரியானவள் இவள் பேரில் மிகப் பிரியங்கொண்டு லீலிபுஷ்பங்கள் பூத்து மாறிப்போன காலத்திலும் இவளைத் தன் அரமனைக்கு அடிக்கடி அழைப்பித்து, புஷ்பங்களைக்குறித்துச் சம்பாஷித்துக்கொண்டிருப்பாள். இப்படி இருக்கும் காலையில், எமிலியா என்று பேருள்ள சீமாட்டி புத்திரியின் பிறப்பின் வருஷ உற்சவதினம் சமீபித்தது. ஜேம்ஸ் என்பவன் அநேக அலங்காரமான கூடைகளைச் செய்து வைத்திருந்தான். அவைகளில் மிகவும் நேர்த்தியான கூடையொன்றைத் தன் மகளுக்குக் கொடுத்தான். அதை அவள் சீமாட்டி புத்திரிக்குக் கொடுக்க தகப்பனிடத்தில் உத்தரவுபெற்றுக்கொள்ள, அவனே திரும்ப அதில் சீமாட்டிப் புத்திரிபேரின் எழுத்துக்களையும் குடும்பப்பேரின் எழுத்துக்களையும் மிக விநோதமான வேலைப்பாடாகப் பின்னி, பின்னும் அதிகமாய் அதை அலங்கரித்துக் கொடுத்தான்.

எமிலியாவின் பிறப்புநாளைக் கொண்டாடும் அன்று காலையில் ரோஜாபுஷ்பங்களையும் வெண்மை சிவப்பு முதலிய நிறங்களுள்ள

Koviloor Acadamy

பலவித சிறந்த விநோதமான பூக்களையும் கூட்டிச் சேர்த்து கண்ணுக்கு அலங்கிருதமாக பச்சை இலைகளையும் இடைக்கிடையே அவைகளோடு சேர்த்துச் செண்டுகளாகக்கட்டி அக்கூடையில் வைத்து அதின் ஓரங்களில் ரோஜா முதலிய மொக்குகளால் அழகிய மாலையொன்றைச் செய்து தொடுத்து எமிலியா என்ற பேரின் எழுத்துக்களைச் சுற்றி பர்கெட் மீ நாட் (forget me not) என்ற பூக்களால் சோடித்து இப்படி அந்தச் சுத்த வெண்ணிறக்கூடையைக் கண்பார்வைக்கு ஒரு அபூர்வமான காட்சியாய்ச் சிறப்பித்து எடுத்துக்கொண்டு போகப் புறப்பட்டாள். தகப்பன்: 'இன்னும் சில நிமிஷங்கள் அது இங்கே இருக்கட்டும், அதை நான் பார்க்க விரும்புகிறேன்' என்றான். அது அவ்வளவு அலங்காரமாய்ச் சோடிக்கப்பட்டிருந்தது.

அப்பால் மேரி அதை எடுத்துக்கொண்டு அரமனைக்குச் சென்று அநேக உபசார வார்த்தைகளால் சீமாட்டிப் புத்திரியை மிக வணக்கமாய் மினவி அதைக் கொடுத்தாள். எமிலியா அதைப் பார்த்தமாத்திரத்தில் பிரமைகொண்டு தன் பிரமிப்பையும் அதின்பேரிலுள்ள தன் பிரியத்தையும் விவரிக்க வார்த்தை அற்றுப்போய்ச் சொன்னது: 'என் பிரியமுள்ள மேரிப்பெண்ணே, நீ மிக வாஞ்சையுள்ளவள், இத்தனை ஏராளமான புஷ்பங்களை எனக்குக் கொண்டுவர உன் சிறு பூந்தோட்டத்தை வெறுமையாக்கி இருப்பாய், உன் தகப்பனுடைய வேலைத் திறமையையும் இது காண்பிக்கிறது; யாதொன்றை இத்தனை அழகிய ரூபமுள்ளதாக நான் பார்த்ததில்லை, வா, நாம் இதைச் சீமாட்டி அம்மாளுக்குக் காண்பிப்போம்' என்று சொல்லி கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சீமாட்டியின் காமரைக்குள் தீவிரித்துப்போய், 'ஓ அம்மா, அம்மா, மேரி எனக்குக் கொண்டுவந்த ஈவைப் பாருங்கள். நீங்கள் இப்படிப்பட்ட அழகிய கூடையையாவது, இத்தனை நேர்த்தியான புஷ்பங்களையாவது பார்த்திருக்கிறீர்களா?' என, சீமாட்டியும் அதைப் பார்த்து மிக ஆச்சரியப்பட்டு: 'மெய்யாகவே இது பார்வையை மயக்குகிறது, இதைப்போல் ஒரு சித்திரப்படம் எழுதச் சொன்னால் தாவிலை' என்று சொல்லி மேரியை நிற்கவைத்து தன் மகளை சாடைகாட்டி மறு அறைக்குள் அழைத்துப்போய், 'இந்தப் பெண்ணை யாதொரு இனங்கொடாமல் சும்மா அனுப்பப்படாது. நீ என்ன கொடுக்க நினைக்கிறாய்?' என்று கேட்டாள். சற்றுநேரம் பொறுத்து எமிலியா சொன்னது: 'சிவப்பும் வெள்ளையுமான பூவேலைப்பாடான என் பச்சைப்பட்டு உடுப்பு எனக்குச் சரிப்படவில்லை, அதை நான் இரண்டொருமுறைதான் உடுத்தியிருக்கிறேன். அது மேரிக்குச் சரியாய் இருக்கும், கோயில் உடையாக அதை உடுத்திக்கொள்வாள், நீங்கள் உத்தரவு கொடுத்தால் அதைத் தந்துவிடுகிறேன்' என்றாள். 'நல்லது மகளே, எப்போதும் பிரயோஜனமான

Koviloor Academy

தையே பிறருக்குக் கொடுப்பது நலம், நீ சொல்லுகிறது தகுதியான இனுமாகவும் இருக்கிறது, அதையே கொடு' என்று சொல்லி தன் மற்றப் பிள்ளைகளைப் பார்த்து: 'நீங்கள் இந்தச் சிங்காரக் கூடையைக் கொண்டுபோய் பகல் அசனம் பண்ணுமுன்னே அதின் பூக்கள் வாடிப்போகாதபடிக்குப் பதனம் பண்ணுங்கள், பகல் தீனிக்கு வெகு பேர் வருவார்கள், அது மேஜையில் அலங்காரக் காட்சியாய் இருக்கட்டும்' என்றுரைத்து, மேரிப்பெண்ணை மினவிக்கொண்டு, எமிலியா உனக்கு நன்றிவந்தனஞ் செலுத்துவாள் என்று சொல்லிப் போய்விட்டாள்.

எமிலியா திரும்பித் தன் அறைக்குள் சென்று மார்கரெட் என்று பேருள்ள தன் தாதிப் பெண்ணை அழைத்து, 'என் பச்சைப்பட்டு உடுப்பைக் கொண்டுவா' என்றாள். அவள் சற்றே தாமதித்து, 'தாங்கள் அதை உடுத்திக்கொள்ளப் போகிறீர்களோ?' என்று கேட்க, 'இல்லை, மேரிக்கு அதைக் கொடுக்கப்போகிறேன்' என, தாதி 'என்ன, மேரிக்கு கொடுக்கவா! சீமாட்டி அவர்கள் அப்படி உத்தரவு பண்ணினார்களா?' எனத் தடுத்துக் கேட்கவே, எமிலியா: 'நீ உன்னை மறந்து பேசுகிறாய், மறுபேச்சில்லாமல் நான் உனக்குச் சொன்னபடி செய், உடுப்பை உடனே கொண்டுவா' என்று சொல்லவே, தாதி மிகுந்த எரிச்சலோடே போய் மேற்படி உடுப்பை எடுக்குமுன் மற்ற உடுப்புகளையும் கலைத்துக் கசக்கிவிட்டு, 'ஓ நான் இதைத் துண்டு துண்டாகக் கிழித்துப்போட்டால் தாவிளை, அந்தப் பூக்காரப் பெண்ணை எவ்வளவாய்ப் பகைக்கிறேன், எனக்கு முந்தி சீமாட்டித் தயவைப் பெற்றுக்கொண்டதுமல்லாமல், இப்போது இந்த உடுப்பையும் என்னிடத்தில் இருந்து திருடிக்கொள்ளுகிறார்கள். சீமாட்டிமார் கழித்துப்போடுகிற உடுப்பெல்லாம் என்னைச் சேரவேண்டும், நல்லது, எப்படியும் நான் அவளைப் பழிவாங்குவேன்' என்று இப்படியாய் முணுமுணுத்தும் அது சீமாட்டிக்குத் தெரியாதபடிக்குச் சிரித்த முகத்தோடு உடுப்பைக் கொண்டுவந்து கொடுத்தாள். அப்போது எமிலியா மேரியுடனே: 'இன்றைக்கு எனக்கு அநேக விலையுயர்ந்த பொருட்கள் வந்திருந்தும் அவைகளில் ஒன்றும் நீ கொண்டுவந்த பொருளைப்போல் எனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்ததில்லை. இந்த உடுப்பில் இருக்கிற பூவேலை நீ கொண்டுவந்ததைப்போல் இல்லை ஆயினும், இதை என் நிமித்தமாக ஏற்றுக்கொண்டு, இதை உடுத்திக் கொள்ளும்போதெல்லாம் என்னை நினைவுகூர். என் மினவுதலையும் நன்றிவந்தனத்தையும் உன் தகப்பனுக்கு அறிவி' என்று சொல்லி உடுப்பை அவள் கையில் கொடுத்தாள்.

மேரி உடுப்பை வாங்கிக்கொண்டு எமிலியாவுக்கு நன்றிவந்தனஞ் செலுத்தி விடைபெற்றுக்கொண்டு தன் வளவுக்குத் திரும்பினாள்.

Koviloor Acadamy

எமிலியா தாதியைத் தனக்கு உடுத்த வரவழைத்தபோது அவள் தனது அடக்கக்கூடாத ஆங்காரத்தினால் உடுத்துகையில் அவள் தலைமயிரைக் கவலையற்றவிதமாய் இழுத்தாள். இதை அவள் ஆங்காரத்தினால் செய்கிறாள் என்று அறிந்து அவளை நோக்கி: 'மேரி அந்த உடுப்பை வாங்கிக்கொண்டு போய்விட்டாள் என்ற எரிச்சலினால் இப்படிச் செய்கிறாயோ?' என்று கேட்க, தாதி: 'தாங்கள் தங்கள் தயாளகுணத்தினால் அவளுக்கு இரங்கி அதைக் கொடுத்திருக்க, நான் கோபப்படுவது புத்தியீனம் அல்லவோ?' என்றாள். எமிலியா 'இது மெத்தக் கெட்டிக்காரப் பேச்சு, ஆகிலும் நீ சொல்லுகிறபடியே நிஜமானால் நல்லதுதான்' என்றாள்.

இங்கே இப்படியிருக்க, மேரி வீடுசேர்ந்து தகப்பனுக்கு அந்த உடுப்பைக் காண்பித்தாள். இந்த விலைபெற்ற உடுப்பை ஜேம்ஸ் பார்த்தவுடனே அதன்பேரில் சந்தோஷப்படாமல் தன் தலையை அசைத்துக்கொண்டு சொன்னது: 'நீ அந்தக் கூடையைக்கொண்டு போகாதிருந்தால் நலமாய் இருந்திருக்கும்; ஏனெனில் அதின் நிமித்தம் உனக்குக் கிடைத்தது உயர்ந்த உடை ஆனதால் பிறர் அதைப் பார்த்து நமது பேரில் பொறாமை அடைவார்கள். பின்னும் அது உன் மனதை வீண் ஆடம்பரத்துக்கு ஏவிவிடும் என்ற பயம் எனக்கு உண்டாகிறது. பிரியமுள்ள பிள்ளையே, நீ உன்னை அதற்குக் காத்துக் கொள். நீ உடுபாவனைகளின்பேரில் பிரியப்படமாட்டாய் என்று நம்புகிறேன். ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய ஆபரண ஆடைகள் எதென்று வேதாகமம் சொல்லுகிறதை நினைவுகூர்' என்றான்.

இதை வாசிக்கிற நேசா! நீ வீண் ஆடம்பர உடுபாவனைகளை விரும்புகிறவனோ? அது ஞான உணர்வில்லாத அற்ப மனதின் தன்மை. மிகுதியான ஆடை ஆபரணங்களை அணிந்துகொள்ளுகிற ஸ்திரீ தன் உள்ளத்தின் அந்தக்கேட்டைக் காண்பிக்கிறாள். கர்த்தர் தமது சிருஷ்டிப்பின் கிரியைகளை உடுத்தியிருக்கிற உடையை நீ கவனிப்பாயானால் உன்னை உடுத்தியிருக்கிற உடையும் போதும் என்று எண்ணுவாய். அலங்கார ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு திரிகிறவர்கள் எத்தனையோ சோதனையான கண்ணிகளில் விழுகிறார்கள் என்பதை நீ உன்னைச் சுற்றிலும் அன்றாடகம் கவனித்தால் அதை நீ எவ்வளவேனும் ஆசிக்கமாட்டாய். இந்த மாயையான உடையைத் தரித்திருந்த ஏரோதேயின் முடிவைக் கவனி. பெற்றார்களே, உங்கள் பிள்ளைகள் தங்கள் இளமைவயதிலே தெய்வ பக்தியின் மெய்யான அலங்கார ஆடையை அணிந்துகொள்ள அவர்களைப் பழக்குவியுங்கள். நீங்களும் அப்படி அவர்களுக்கு மாதிரி காட்டுங்கள்.

Koviloor Acadamy

3. அதிகாரம்

காணமல்போன மோதிரம்

மேரி என்பவளுடைய துன்பத்துக்குக் காரணம்

மேரி என்பவள் அரமனையை விட்டுப் போனவுடனே அவள் சற்றுநேரம் தரித்திருந்த அறையிலுள்ள மேஜையின்மேல் இருந்த சீமாட்டியின் வயிரக்கல் மோதிரம் ஒன்று காணுதேபோய்விட்டது. மேரியைத்தவிர அந்த அறையில் ஒருவரும் இல்லாதபடியால் அவள் பேரிலே சமுசயம் உண்டாயிற்று. அப்போது சீமாட்டி மகள் மிகுந்த துக்கம் அடைந்து மேரிக்கு உண்டாகும் துன்பத்தையும் அவமானத்தையும் விலக்கி அவளைக் காப்பாற்ற தன் தாயை நோக்கி: 'நான் மேரியண்டை போய் அவள் மோதிரத்தை எடுத்துப்போகும் படியான சோதனைக்கு உட்பட்டிருப்பாளானல் அதைத் திரும்ப வாங்கி வந்துவிடுகிறேன், நான் வருகிறவரையில் இதை யாவருக்கும் வெளிப்படுத்தாதேயுங்கள்' என்று சொல்லி மேரியண்டைக்குத் தலைவிரி கோலமாய் ஓடினுள். மனக்கவலையும் மன இடுக்கமுமுடைய முகத்தோடு இளைக்க இளைக்கத் தோட்டத்துக்குள் ஓடி வருகையில் மேரி தான் இனுமாக வாங்கிவந்த உடுப்பை மடித்து பெட்டியில் வைக்கிறவளாய் இருந்தாள்.

எமிலியா வந்தவுடனே: 'ஓ மேரிப்பெண்ணே, என் தாயினுடைய வயிரக்கல் மோதிரத்தைக் காணேம்; அது இருந்த அறையில் உன்னைத்தவிர வேறொருவரும் இருந்ததில்லை. அவர்கள் உன்பேரில் சமுசயப்பட்டு நீ எடுத்ததாக நினைக்கிறார்கள். நீ அப்படிச் செய்ததுண்டா? செய்ததுண்டானல், பிரியமுள்ள மேரியே, அதை என்னிடத்தில் கொடுத்துவிடு; நான் அம்மாளுக்குச் சொல்லிச் சரிப்படுத்திப் போடுகிறேன்' என்று சொல்லவே, மேரி பிரமித்து: 'என்ன சீமாட்டி அவர்களே, மோதிரமா? என்னிடத்தில் மோதிரம் இல்லை. நான் இருந்த அறையில் மோதிரத்தைக் கண்டதும் இல்லை, அறையில் இருந்த ஒன்றையும் நான் தொட்டதும் இல்லை, நான் இருந்த இடத்தைவிட்டு அசைந்ததும் இல்லை' என, எமிலியா 'மேரி, மேரி, உண்மையைச் சொல்லு; இது எத்தனை பெரிய மோசமான காரியம் என்று நீ அறியவில்லை, மோதிரத்தின் வயிரமட்டும் 1,000 ரூபாய் விலைபெற்றது. நீ இதை அறிந்தால் நீ தொட்டே இருக்கமாட்டாய், ஒருவேளை நீ இதை அற்பம் என்று எண்ணி எடுத்திருப்பாய், உண்மையை எனக்கு அறிவி. சிறு பிள்ளைத்தனமாய்ச் செய்துபோட்டாய் என்று உனக்கு மன்னிக்கப்பட்டுப்போகும்' என்று இவ்வாறுய்

Koviloor Acadamy

மிருந்த அங்கலாய்ப்போடு அவளைக் கேட்டபோது, அவள் முழு சமுசயமும் தன்பேரிலேயே பொருத்திருக்கிறதென்பதைப் பூர்த்தியாய் அறிந்துகொள்ளவே, அவள் முகம் வெளுத்து டயமேலாடி நடுக்கத்தோடு சொன்னது: 'மோதிரத்தைக் குறித்து எனக்கு யாதொன்றும் தெரியாது, இதுவரையில் என்னுடையதல்லாததை நான் எடுத்ததே இல்லை, அற்பமானாலும் நான் அதை எடுப்பேன் என்று தாங்கள் எப்படி எண்ணலாம்? என் தகப்பன், மற்றவர்களுக்குச் சொந்தமான ஒரு குண்டூசியைத்தானும் நான் எடுக்கக்கூடாது என்று எனக்குப் போதித்திருக்கிறாரே' என்றாள்.

இச்சமயத்தில், சீமாட்டி மகள் வெகு தீவிரமாய்த் தோட்டத்துக்குள் தனியே ஓடிவந்ததைப் பார்த்த ஜேம்ஸ் என்பவன் அறைக்குள் பிரவேசித்து, ஒருபோதும் வராத சீமாட்டி மகள் வரவையும் அவள் நடுக்கத்தையும் மனோவிதனத்தையும் கண்டு, ஏதோ சில தப்பிதங்கள் நடந்திருக்கிறது என்று அறிந்துகொண்டு, உட்பிரவேசிக்கும்போதே நடந்தது என்னவென்று கேட்க, அதற்கு மறுஉத்தரவைக் கேட்ட மாத்திரத்தில் அந்தக் கனமுள்ள விருத்தாப்பியன் கலக்கமடைந்து மேஜையின்மேல் சாய்ந்துகொண்டு சொன்னது: 'மேரி, என் பிரியமுள்ள பிள்ளையே, இவ்வளவு விலைபெற்ற மோதிரம் களவுபோனால் தேசப் பிரமாணத்தின்படி மரணமே அதற்கு முடிவு. இதிலும் அதிகமாக, "களவு செய்யாதிருப்பாயாக" என்கிற கர்த்தரின் கற்பனையை நினைவுகூர். திருட்டு முதலிய குற்றங்கள் மனுஷப் பிரமாணங்களின்படி தண்டனைக்குள்ளாவதுந் தவிர சர்வவல்லவரும் எல்லாவற்றையும் அறிந்தவரும் இருதயங்களை அணுவணுவாய் ஆராய்ந்து பார்க்கிறவருமான கர்த்தருடைய பயங்கரமான சாபத்துக்கும் ஏதுவாகும். இவ்விதமான சாக்குபோக்குகளாலும் அவரை வஞ்சிக்கக்கூடாது. நீ உன்பேரில் சாட்டப்படும் குற்றத்தைச் செய்ய அவ்வளவாய்க் கர்த்தரை மறந்து சோதனைக்கு உட்பட்டிருப்பாயானால் அதை இல்லை என்று மறுப்பதிலே குற்றத்தை அதிகரிக்கப் பண்ணாதே. குற்றத்தை அறிக்கையிட்டு மோதிரத்தைக் கொடுத்துவிடு. இப்படிச் செய்வது குற்றத்துக்குரிய ஓர் பாகத் தண்டனை நெளிதமாகும். ஐயோ! இப்படியும் நான் உன்னோடு பேச காலம் நேரிட்டதோ!' என்று புலம்பினான். தகப்பனுடைய இந்த வார்த்தைகள் மேரியுடைய மனோசஞ்சலத்தை அதிகப்படுத்திற்று. அவள் 'ஆ, என் தகப்பனே, என் தகப்பனே, நான் இதில் குற்றமுள்ளவள் என்பதை நீர் நம்புகிறீரோ? நான் அந்த மோதிரத்தைக் கண்டதில்லை என்று உமக்குச் சொல்வது அவசியமோ? நான் இவ்விலைபெற்ற மோதிரத்தை சாலைப் பாட்டையில் கண்டெடுத்தாலும் சொந்தக்காரரைத் தேடி அதைக் கொடுக்கும்வரையில் இளைப்பாறமாட்டேன்

Koviloor Acadamy

என்று உமக்குத் தெரியாதா? மெய்யாகவே, மெய்யாகவே, நான் மோதிரத்தை எடுத்ததில்லை' என்றாள். ஜேம்ஸ், 'நீ சொல்லுகிறது உண்மை என்று நம்புகிறேன்; இந்த நல்ல சீமாட்டி உன்னைக் குற்றஞ் சாட்ட மனதற்றிருந்தும் உனக்கு விரோதமான சாட்சியும் பலமாய் இருப்பதால் உன்னை அவமானத்தினின்று விலக்கிக் காக்க வந்திருக் கிறார்கள்; ஓ, மேரி! உண்மையைச் சொல்லு' என்றான். ஆ, என் தகப்பனே! என் வயதுக்கு இதுவரையில் ஒரு காசையாவது நான் திருடினதில்லையே, உம்முடையதல்லாத ஒரு மரத்திலிருந்து நான் ஒரு பழத்தையாவது அடுத்தவர்களுடைய தோட்டத்தில் ஒரு பூவை யாவது உத்தரவில்லாமல் பிடுங்கினதில்லை என்பதை நீர் அறிவீரே. நான் அந்த மோதிரத்தைக் கண்டதே இல்லை, இது உண்மை; என் அருமைத் தகப்பனே, என் ஜீவகாலத்தில் எப்போதாவது நான் ஒரு பொய் சொல்லி இருக்கிறேனா? 'இப்போது என் இப்படி என்பேரில் சமுசயப்படுகிறீர்' என்றாள்.

ஜேம்ஸ் என்பவன், இன்னும் அவள் மனதை அறிய விரும்பி 'என் பிள்ளையே, என் நரைமயிரை சஞ்சலத்தோடே குழியில் இறக்காதே; நீ பாவத்தில் ஊன்றி நிற்கிறதை நான் பார்த்து கஸ்திப் பட வைக்காதே; இப்போது உன் இருதயத்தைப் பார்க்கிற கர்த்த ருடைய சமுகத்தில் நீ ஒருநாள் நிற்கவேண்டியதாயிருக்கிறதே, இப் போதும் நீ அவர் சமுகத்தில் நிற்கிறதாக எண்ணி பயபக்தியுடனே, நீ மோதிரத்தை வைத்திருக்கிறாயோ, நன்றாய் யோசித்து உண்மை யைச் சொல்லு' என்று கேட்டான். மேரி தன் கைகளைக் குவித்து கண்ணீர் பிரவாகமாய் ஓடுகிற தன் கண்களை வானத்துக்கு நேராய் ஏறெடுத்துச் சொன்னது: 'மோதிரத்தை நான் எடுத்ததில்லை என்ப தற்குக் கர்த்தரே என்க்குச் சாட்சி, அவர் என் இருதயத்தைப் பார்க் கிறார், அவர் சமுகத்தில் உண்மையைப் பேசுகிறேன் என்று உமக்குச் சொல்லுகிறேன், மோதிரம் என்னிடத்தில் இல்லை, அதைப் பார்த்த தும் இல்லை' என்றாள். தகப்பன் 'நல்லது, இப்போது உன்னை நான் முழுமையும் நம்புகிறேன். பிள்ளையே, நீ மோதிரத்தைத் திருடின தில்லை, நீ வைத்திருந்தால் இவ்வளவாய் மறுதலிக்கமாட்டாய், நீ உண்மையைப் பேசுகிறாய் என்பதை நான் அறிகிறேன்; நீ இதற்குக் குற்றமற்றவளாய் இருப்பதினாலே நான் உன்னைக் குறித்துச் சஞ்சலப் படவில்லை, நீ ஒன்றுக்கும் இனி பயப்படாதே, அமர்ந்திரு, உலகத்தில் நாம் பயப்படத்தக்கது பாவம் ஒன்றே ஒழிய வேறில்லை. குற்ற முள்ள மனச்சாட்சியை அடைந்திருப்பதைவிடக் காவலும் மரணமும் தாவிளை. நாம் அநியாயமாய்ப் பாடனுபவித்தாலும் உலகமெல்லாம் நம்மைக் கைவிட்டாலும் கர்த்தர் நம்மைக் கைவிடமாட்டார். அவரே சமயத்தில் நமக்குச் சிநேகிதரும் நம்மை ஆறுதல்படுத்துகிறவருமாய்

Koviloor Acadamy

இருப்பார். சீக்கிரத்தில் நமது குற்றமின்மையை அவர் வெளியாக்கு வார்' என்ருன்.

இந்த நடபடிகளேப் பார்த்துக்கொண்டு நின்ற சீமாட்டிமகள், கண்ணீர் தாரைதாரையாய் ஓட அழுதுகொண்டு சொன்னது: 'உங்கள் பக்தியுள்ள வார்த்தைகளே நான் கேட்கிறபோதும் மேரிப் பெண்ணுடைய குற்றமின்மையை நான் பார்க்கிறபோதும் நீங்கள் உண்மையைப் பேசுகிறீர்கள், இந்தச் சாபத்தீட்டான மோதிரத்தை நீங்கள் பார்த்ததே இல்லே என்பதை நான் முழு நிச்சயமாய் நம்பு கிறேன். ஆனல் நடந்திருக்கிற சம்பவங்களேப் பார்த்தாலோ என்ன சொல்லுவேன்? மேரி இருந்த அறையிலேயே மோதிரம் இருந்தது, என்னேயும் அம்மாளேயும் மேரியையும் தவிர வேருரும் அந்த அறை யில் இருந்ததில்லே, நானே மேஜை கிட்டவே போனதில்லே என்று மேரிக்குத் தெரியும். அம்மாளுடைய அறைக்குள் புகுந்துதான் அந்த அறைக்குச் செல்லவேண்டுமே ஒழிய வேறு வழி அதற்கு இல்லே. மோதிரம் காணுமல்போனபோது அம்மாள் அறையிலேயே இருந்தார்கள், அவர்கள் வேலேக்காரியைக் கூப்பிடாமல் தானே அறை முழுதும் பலதடவைத் தேடிப்பார்த்தார்கள்' என்ருள். இதைக் கேட்டு மேரியின் தகப்பன்: 'அது என்னமோ மறைபொருளாய் இருக்கிறது, கர்த்தர் எங்களுக்குக் கடுமையான சோதனேயை வர விட்டிருக்கிருர். அது நன்மையாகவே இருக்கும், அவர் சித்தம் ஆவதாக' என்று சொல்லி தன் கண்களே வானத்துக்கு நேராய் உயர்த்தி, 'ஆ கர்த்தாவே! நாங்கள் உம்முடையவர்கள், உமக்குச் சித்தமானபடி எங்களுக்குச் செய்யும், எங்களுக்கு நீர் அனுப்பப் போகிற துன்பங்களேப் பொறுமையாய்ச் சகிக்க எங்களுக்குக் கிருபை யையும் பலத்தையும் தாரும்' என்று ஜெபித்தான்.

எமிலியா மனக்கசப்பாய் அழுதுகொண்டு: 'மோதிரம் இல்லாமல் எப்படித் திரும்பிப்போவேன்! அம்மாள் இதை ஒருவருக்கும் இன்னம் வெளிப்படுத்தவில்லே, ஆனல் இதை அவர்கள் மூடிவைக்கக்கூடாது. தகப்பனர் பகல் அசனத்துக்கு வருவார்கள், மோதிரம் அம்மாள் கையில் இல்லாததைப் பார்த்துக் கேட்பார்கள். அது அவர்களுக்கு நான் பிறந்த நாளில் கொடுக்கப்பட்டது, அதை நான் பிறந்த நாளிலேதான் விசேஷமாய்த் தரித்துக்கொள்வார்கள். அகத்தியம் அவர்கள் தகப்பனருக்குச் சொல்லவேண்டும். நான் உங்களேக் குற்றமற்றவர்கள் என்று நம்புகிறேன், அதை அவர்களுக்கும் சொல்லுவேன்; ஆனல் அவர்கள் என்னே நம்பும்படி நான் செய்யக் கூடியது என்னவென்று தெரியவில்லேயே' என்று சொல்லி துக்க முள்ள இருதயத்தோடும் கண்ணீரோடும் அரமனேக்குத் திரும் பினள்.

Koviloor Acadamy

மேரி துக்கசாகரத்தில் ஆழ்ந்தபடியால் எமிலியாவை அனுப்பிக் கொள்ள மெய்மறந்துபோனுள். ஜேம்ஸ் என்ற விருத்தாப்பியன் மேஜையின் பக்கத்தில் உட்கார்ந்து தன் தலையை தன் கைகளின் பேரில் சாய்த்துக்கொண்டு ஜெபத்திலே தரித்திருந்தான். நெடு நேரமாக இருவரும் பேச்சுமூச்சில்லாமல் இருந்தார்கள். கடைசியாய் மேரி எழுந்து தன் தகப்பன் பாதங்களில் விழுந்து கண்ணீரோடு சொன்னது: 'நான் குற்றமற்றவள் என்பதை நீர் உண்மையாய் நம்பும், நான் குற்றமற்றவள்தான் என்பதை நீர் நம்புகிறீர் என்று எனக்கு உமது வாயைத் திறந்து சொல்லும்' என்ருள். தகப்பன் அவளை மிகுந்த கரிசனமாய் வாரியெடுத்து தன் கண்களை உண்மை ஜொலிக்கிற அவள் முகத்தில் ஊன்றி, 'என் பிள்ளையே, நான் உன்னைக் குற்றமற்றவள்தான் என்று நம்புகிறேன், இப்படிப்பட்ட இருதயத்தில் இக்குற்றமும் அணுவேனும் அணுகாது' என்று சொல்லி மகளை ஆறுதல்படுத்தினுன். மேரி, 'இதினுடைய முடிவு என்னவாய் இருக்கும்? நமக்கு என்ன சம்பவிக்கும்? இதினுல் உண்டாகும் துன்பம் என் மட்டில் நின்ருல் நான் நல்ல மனதோடே சகித்துக்கொள்ளுவேன், ஆனுல் என் நிமித்தம் நீரும் பாடனுபவிக்க வேண்டுமானுல் அதை நான் சகிக்கக்கூடாதே' என, தகப்பன், 'கர்த்தரில் நம்பிக்கையாய் இரு, பயப்படாதே. நமது தலையின் மயிர் எல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய உத்தரவில்லாமல் நமக்கு ஒன்றும் சம்பவியாது, சம்பவிப்பதெல்லாம் நமக்கு நன்மையாய் இருக்கும். பயப்படாமல் நீ கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் தைரியமாய் உத்தரவு சொல்லு. அவர்கள் எதை வாக்குத்தத்தம் பண்ணினுலும் எவ்வித பயமுறுத்தலைக் காட்டினுலும் உண்மையைவிட்டு ஒரு மயிர்க் கடையாவது பிறழாதே, சுத்த மனச்சாட்சியைக் காத்துக்கொள். களங்கமற்ற இருதயம் சிறையிலும் நாம் சுகமாய்த் தூங்கும் தலையணை. ஒருவேளை நாம் இருவரும் பிரிந்துபோவோம், நீ உன் துக்கசாகரத்தில் இருக்கையில் நான் உன்னோடு இருக்க இடம் இராது. பரமண்டலத்திலுள்ள உன் பிதாவைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். அவரை உன்னைவிட்டுப் பிரிக்க ஒருவராலும் ஆகாது. கிறிஸ்துவின் அன்பினின்று ஒரு மனுஷ அதிகாரமும் பிரிக்கமாட்டாதென்பதை நினைத்துக்கொள்' என்று இவ்வாருய் அவளைப் பலப்படுத்திக்கொண்டிருக்கும் சமயத்தில் போலீஸ் உத்தியோகஸ்தர் உட்பிரவேசித்தார்கள். மேரி அலறிக்கொண்டு தன் தகப்பன் இடுப்பைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். தலைமை உத்தியோகஸ்தன் கோபத்தொனியாய், 'அவர்களைப் பிரித்து அவள் கைகளைக் கட்டி, சிறைச்சாலைக்குக் கொண்டுபோங்கள், அவள் தகப்பனையும் வேண்டியபோது கொண்டுவர ஒரு இடத்தில் பத்திரப்படுத்தி வையுங்கள், ஒருவரும் என் உத்தர

Koviloor Acadamy

வில்லாமல் உட்பிரவேசியாதபடிக்குத் தோட்டத்தையும் வீட்டையும் காவல்பண்ணுங்கள், அவைகளைத் திட்டமாய்ப் பரிசோதனை பண்ண வேண்டும்' எனவே, மேரியைத் தகப்பனிடத்தில் இருந்து பிரித்து அவள் கைகளைக் கட்டி அவள் சோர்ந்து போனதால் அவளைச் சுமந்து கொண்டு அவள் தகப்பனை அவளுக்குப் பின்னால் கெட்டியாய் பாராபோட்டு நடத்திக்கொண்டு போனார்கள்.

ஊரின் தெருவழியே அவர்களைக் கொண்டுபோகும்போது வேடிக் கைபார்த்த ஜனங்களில் சிலர் பரிதபித்தும் வேறு சிலர் நிந்தையாயும் பேசினார்கள். மேரி நற்குணசாலி ஆயினும் அதிகமாய் அடுத்தவர்க ளோடு கலந்து சகவாசம்பண்ணி வீண்காலம் போக்காதவள் ஆனபடி யால் சில துஷ்டர் அவளைப் பகைத்து நிந்தனையாய்ப் பேசினார்கள். இவர்களை யோக்கியர்கள் என்று எண்ணி இருந்த பேர்களும் இவர்கள் பேரில் சமுசயப்பட்டார்கள். கெட்டுப்போன மனுஷீக இருதயத் துக்கு மற்றவர்களின் நன்மையை அல்ல தீமையை அதிகமாய் நம்பு வது இயல்பு. சிலரோ, 'ஒருவேளை அவர்கள் அநியாயமாய்க் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பார்கள், யாருக்குத் தெரியும், கர்த்தர்தான் அவர்கள் குற்றமின்மையை வெளிப்படுத்தவேண்டும், அவர்கள் குற்றவாளிக ளானாலும் அவர்களுக்கு மன்னிப்புக் கிடைக்க மெய்யான குணப்படு தலைக் கர்த்தர் கட்டளையிட்டு அவர்கள் அனுபவிக்கவேண்டிய துன்பத் திலே அவர்களுக்கு ஆதரவாய் இருப்பாராக' என்று சொன்னார்கள். ஊரில் இருந்த பிள்ளைகள் சிறு சிறு கூட்டங்களாக நின்று அவர்கள் போவதைப் பார்த்து பிரலாபித்து: 'அவர்கள் நல்ல ஜனங்கள் அல்லவோ? அவர்கள் அப்படிப்பட்ட ஆகாமியத்தைச் செய்திருக்க மாட்டார்களே, அவர்களைச் சிறைச்சாலையில் போடுவது அநியாயம். இனிமேல் யார் நமக்குப் பழங்களையும் பூக்களையும் கொடுத்து மேரி யைப்போல் சந்தோஷமாய் நம்மோடு பேசுவார்கள்?' என்றார்கள்.

இதை வாசிக்கிற நேசா, உலகம் பலவிதம் என்பதை நீ அறிவாயா? நீ மனுஷருடைய வார்த்தைகளைக் கவனியாமல் அநியாயமாய்க் குற்றஞ் சாட்டப்படுகிறபோது சகோதரனைவிட அதிக நெருக்கமாய் இருக்கிற பரமண்டலத்தின் சிநேகிதரை நோக்கிப் பார்த்து அவரிடத்தில் ஆறு தலைத் தேடு, அப்போது நீ திகைத்துக் கலங்கமாட்டாய்.

4. அதிகாரம்

மேரி சிறைச்சாலையில் வைக்கப்பட்டது
துன்பத்தின் துவக்கம்

மேரி என்பவள் சிறைச்சாலையில் ஒரு வைக்கோல் படுக்கையின் பேரில் கிடத்தப்பட்டாள். அவள் அப்போது ஸ்மரணையற்றிருந்த

Koviloor Acadamy

படியால் கொஞ்சம் கொஞ்சமாய்த் தெளிந்து தன் சுயபுத்தியை அடைந்தபோது தான் சிறையில் இருக்கிறதைக் கண்டு தான் அசந்து போகிறவரையில் விம்மி விம்மி அழுது, விம்மலோடே அந்த நிர்ப் பந்தப் படுக்கையில் படுத்துக் கொஞ்சநேரம் நித்திரைபண்ணினுள். விழித்தவுடனே எல்லாம் இருளாய் இருந்தது, தான் எங்கே இருக் கிருள் என்பதை முதல் அறியவில்லை. தன் கைகளில் இருக்கிற விலங்கை உணர்ந்துகொள்ளுகிறவரையில் நடந்தவைகள் எல்லாம் அவளுக்கு ஒரு சொப்பனம்போல் கண்டது. அவள் தன் கைகளில் உள்ள கட்டுகளை நினைத்தமாத்திரத்தில் அழுது முழங்கால்படியிட்டு ஜெபித்த ஜெபமாவது: ஆ, என் கர்த்தரே, நான் யாரண்டைக்குப் போவேன், உம்மிடத்திலே அல்லாமல் யாரிடத்தில் சகாயம் தேடு வேன், இந்தக் காவற்கூடத்தில் இருக்கிற என்னை நீர் கேட்கக்கூடிய வர், நான் எல்லாராலும் இப்படித் தனித்துவிடப்பட்டிருப்பதைப் பார்க்கிறவர் நீரே, எல்லா நன்மைகளின் கடவுளே, என்பேரில் இரங் கும், நான் இந்தக் காவற்கூடத்தில் அடைபடுவதற்கு நான் யாதொன் றும் செய்ததில்லை என்பதை நீர் அறிவீரே; என் ஏழை விருத்தாப்பிய தகப்பன்பேரிலும் இரங்கும், பரிசுத்தமும் இரக்கமுமுள்ள இரட்சகரே, எனக்கு இரங்கி, என் குற்றமின்மையை எல்லாருக்கும் வெளிப்படுத் தும், என் ஏழைத் தகப்பனை ஆறுதல்படுத்தி, அவரை யாதொரு துன் பத்துக்குட்படுத்தாமல் விடுதலை யாக்கியருளும், அவர்பேரில் இரக்க மாய் இருந்து அவரை இரட்சியும், நான் ஒருத்தியே பாடனுபவிக் கட்டும் என்று முடித்தாள்.

அவள் தன் தகப்பனை நினைத்தமாத்திரத்தில் ஏழை மேரியுடைய கண்களில் கண்ணீர் ஆறுய்ப் பெருகி, விம்மல் அவள் சத்தத்தை அடைத்துப்போட்டது. இப்படியிருக்க அவள் இருந்த காவற்கூடத் தின் இருளில் ஒரு வெளிச்சம் உதித்தது. சந்திரன் தன் ஒளியை அவள் இருந்த அறையின் சிறு பலகணி வழியாய் அறையில் வீசிற்று. இவ்வொளியினுல் மேரி தான் இருந்த நெருக்கமான காவல் அறையின் நாலு பக்கத்து சுவர்கள் கட்டப்பட்டிருந்த கரடுமுரடான செங்கல்லு களையும் அதில் ஒரு மூலையில் இருந்த கல்மேஜையையும் அதின்மேல் இருந்த மண்பாத்திரத்தையும் தண்ணீர்க் கூசாவையும் அவள் படுத் திருந்த வைக்கோல் படுக்கையையும் பார்க்கக்கூடியதாயிற்று. இம்மட் டும் இருளினுல் சூழப்பட்டிருந்த அவள் இவ்வெளிச்சத்தினுல் சற்று ஆறுதல் அடைந்தும், தான் முன் தன் சொந்த வீட்டின் சிறு அறை ஜன்னல் வழியாய் வெளிப்பக்கத்தில் இருந்த ரோஜாச்செடியின் கிளைகள் நிலா வெளிச்சத்தில் அசைவாடிக்கொண்டிருந்த நிழலை மிகவும் சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த ஞாபகம் இப்போது இதைப் பார்த்தவுடனே துக்கத்தை உண்டுபண்ணிற்று. நிலாவெளிச்

Koviloor Acadamy

சத்தைக் கவனித்துக்கொண்டிருந்த மேரி தான் இருக்கும் அறையில் புஷ்பவாசனை வீசினதைக்கண்டு அது எதென்று பார்க்கும் அளவில் தான் அன்று காலை அரமனைக்குப்போகையில் தன் உடுப்பில் கட்டிக் கொண்டுபோன புஷ்பங்கள் என்று அறிந்து அவைகளை ஒவ்வொன் றாய் நிலவு வெளிச்சத்தில் அவிழ்த்துப்பார்த்துச் சொன்னதாவது: 'இந்தப் புஷ்பங்கள் நான் இன்று காலை அறுத்தபோதிருந்த மதுர வாசனையோடு இன்னும் இருக்கிறதே, நான் இவைகளை அறுத்த போதிருந்த சந்தோஷம் எனக்கு இப்பொழுது இல்லையே, நான் காலமே இவைகளை அறுத்தபோது சாயங்காலத்தில் இவைகளோடு காவல் அறையில் அடைபட்டிருப்பேன் என்று எண்ணினது ஆர்? நான் இன்று காலை ரோஜாபுஷ்பமாலையைச் செய்து அந்தக் கூடை யைச்சுற்றிக் கட்டினபோது இன்று சாயங்காலமே அப்படிச்செய்த என் கைகள் சங்கிலிகளால் கட்டப்படும் என்று அறிந்தது ஆர்? ஒன்றும் நிலைவரமுள்ளதல்ல, உலகத்தில் ஒன்றும் தங்குதரிப்புள்ள தல்ல. எத்தனை சீக்கிரமாய் ஒருவனுக்கு அவன் நிலமை சூரியன் அஸ்தமிக்குமுன் மாறிப்போகிறது. நேற்று கப்பற்காரன் இன்று பிச்சைக்காரன் என்பது உண்மை. குற்றமில்லாத செய்கைகளும் நிர்ப்பந்தமான முடிவை அடைகிறதே. ஆதலால் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தேடுவது எத்தனை அவசியமான காரியம். கர்த்தர்தான் நாம் அறியாமலே நமக்கு நேரிடும் துன்பங் களினின்று இரட்சித்து, அவைகளில் எல்லாம் நம்மைப் பலப்படுத்திப் பாதுகாக்கிறவர்' என்று தனக்குள்ளே வசனித்துக்கொண்டபின் தனக்கிருந்த பாக்கியமான காலம் எத்தனை ஜல்தியாய்த் துக்கமாய் மாறிப்போயிற்று என்பதை நினைத்து அழுதுகொண்டாள். அவள் கண்ணீர்கள் அவள் மடியில் இருந்த பூக்களின்மேல் உதிர்ந்து நிலவு வெளிச்சத்தில் பனித்துளிகளைப்போல் பளீரிட்டதைப் பார்த்துச் சொன்னது: 'புஷ்பங்களை மறவாமல் அவைகள் தவனத்துக்கு மழையை அனுப்புகிறவர் என்னையும் மறக்கமாட்டார். ஆ, என் கர்த்தரே, தவனமாய் இருக்கும் புஷ்பச்செடிகளுக்குத் தண்ணீர் இறைக்கிறவரே, என் தவனத்தையும் என் தகப்பன் தவனத்தையும் பார்த்து எங்கள் இருதயத்துக்கு ஆறுதலை அனுப்பும் என்று உண்மை வேண்டுகிறேன்' என்றாள். பின்னும் அவள் தனக்குள்ளே வசனித்த தாவது: 'முட்களின் நடுவிலே இந்த ரோஜா புஷ்பங்களை வளர்த் தவர் என்னையும் என் தகப்பனையும் இந்தத் துன்பங்களின் நடுவிலே ஆற்றித் தேற்றுவார். இந்தப் புஷ்பங்கள் மலர்வதற்குமுன் நான் அவைகளின் இதழ்களைப் பிரித்தால் கெட்டுப்போகக்கூடியதைப் போல் நான் தாங்குவதற்கு மேலான துன்பங்களை எனக்கு வரவிட் டால் நான் கெட்டுப்போவேன் என்பதை அறிந்த கர்த்தாவே, எனக்கு

Koviloor Acadamy

இந்தத் துன்பங்கள் நன்மையாகப் பலிக்கும்மட்டில் எனக்கு அவைகளைப் பொறுமையாய்ச் சகிக்கப் பெலன் தாரும். நான் உமது காலத்துக்குப் பொறுமையுடன் காத்திருக்கப்பண்ணும். "என்னை மறந்துவிடாதே" என்கிற புஷ்பங்களை இத்தனை அழகாய் உண்டுபண்ணி இருக்கிற உம்மை நான் நினைக்கிறதுபோல் என்னையும் உமது திருவுளத்தில் நினைத்தருளும். இந்தச் சிறு புஷ்பங்கள் ஆகாயவிரிவைப்போல் நீலவர்ணமாய் இருக்கிறதே, இந்த என் துன்பத்தில் மேலான வானராஜ்யத்தின் இன்பங்கள் என்னைத் தாங்கித் தேற்றுவதாக. இந்தப் புஷ்பங்களின் காம்புகள் அவைகளின் செடிகளில் பொருந்தியிருந்ததுபோல நானும் என் தீவிதிராக்ஷச்செடியாகிய உம்மிலே பொருந்தி இருப்பேனாக. மென்மையான பூக்களே, உங்களை உங்கள் செடியினின்று பிடுங்கி இந்த நிர்ப்பந்த இருட்டறைக்குள் கொண்டுவந்த என்னையும் இந்த அறையையும் மணக்கவைக்கிறீர்களே; நானும் உங்களுக்கு ஒப்பாய் என் ஆண்டவரை மகிமைப்படுத்துவேனாக. என் பாக்கிய நிலையிலிருந்து என்னைப்பிரித்து என்னை இந்த இருட்டுக் காவல் அறைக்குள் கொண்டுவரக் காரணமாய் இருந்தவர்களுக்கு நான் மன்னித்து அவர்களுக்காக மன்றாடுகிறேன். வாடி வதங்கியும் இன்னும் நிறம் மாறாதிருக்கிற பச்சையான இலைகளே, இப்பூமியில் தங்கள் ஆண்டவரோடு துன்பங்களைப் பொறுமையாய்ச் சகித்துக் கொண்டவர்களுக்கு மோட்சத்தில் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற வாடி அழியாத ஜீவகிரீடத்தை எனக்கு நினைப்பூட்டுகிறீர்கள். புஷ்பங்களே, நீங்கள் கொஞ்சப்போதிருந்து அப்புறம் உங்கள் நற்கந்தத்தோடு அழிந்துபோகிறீர்கள். நாங்களோ இத்துன்பங்களில் அழிந்து போகிறவர்களாய்க் காணப்பட்டாலும் சீக்கிரம் திகட்டாத பேரின்ப மகிமைக்குள் ஆவோம்' என்றாள்.

இத்தருணத்தில் ஒரு இருண்ட மேகம் நிலாவெளிச்சத்தை மறைத்ததினால் மேரி இம்மட்டும் வசனித்துக்கொண்டு வந்த புஷ்பங்களையாவது அறையிலுள்ள மற்றெதையாவது பார்க்கக் கூடாமல் போயிற்று. இதின்பேரில் அவள் எடுத்துரைத்ததாவது: 'இப்படியே என் குற்றமின்மை கொஞ்சநேரம் மறைந்து பிறகு எல்லாருக்கும் முன்னும் பிரகாசமாய்த் தோன்றும். சந்தேகம் என்னும் கார்மேகம் என்னைச் சுற்றி நெருக்கி மறைத்திருக்கிறது; ஆனால் கர்த்தர் அதை விலக்கிப்போட்டு நான் குற்றமற்றவள் என்பதைப் பட்டப்பகலைப் போல் வெளிப்படுத்தும் நாள் வரும்' என்று சொல்லி முழங்கால் படியிட்டுக் கர்த்தரை நோக்கி மிகக் கருத்தாய் ஜெபம்பண்ணி, தன் படுக்கையில் படுத்துக்கொண்டு தன் ஞாபகத்தில் இருந்த அநேக வேதவாக்கியங்களை ஒவ்வொன்றாய்ச் சொல்லிக்கொண்டிருக்கவே தன் வீட்டறையில் இருந்ததுபோல சமாதானமாய் நித்திரைபோனாள்.

Koviloor Academy

நித்திரைபோகையில், தான் முன் பார்த்திராத ஒரு தோட்டத்தில் நிலாவெளிச்சத்தில் உலாவுகிறதாகவும், அந்தத் தோட்டம் பாழ்வனாந் தரத்தின் நடுவில் இருண்ட மரங்களால் சூழப்பட்டிருந்ததாகவும், அதின் நடுவில் தன் தகப்பனை மிகுந்த சந்தோஷமுடைய முகத்தோடு கண்டு கழுத்திறுக்க கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொறிந்ததாக வும் கண்டு விழித்துக்கொண்டாள். இவள் கன்னங்கள் அப்போது கண்ணீரால் நனைந்திருந்தது கண்டு அது சொப்பனம் என்று அறிந்து அமர்ந்திருந்தாள்.

நேசா, நீ காவல் அறையில் அடைபட்டிருக்கிறாயோ? நீ சரீரப் பிரகாரமாய்க் காவலில் அடைபட்டிராவிட்டாலும் ஆத்துமப்பிரகார மாக அடைபட்டிருப்பாயோ என்று பயப்படுகிறேன். சரீரச்சிறையை விட ஆத்துமச்சிறை மிக அஞ்சப்படத்தக்கது. ஏனெனில் சரீரச் சிறை ஆத்துமச்சிறையை மீட்டுவிட ஏதுவானது, ஆத்துமச்சிறையோ சாத்தானுக்கே ஜீவனுள்ள காலமட்டும் ஊழியஞ்செய்து எரிநரகத் துக்கு என்றென்றைக்கும் ஏதுவாகிறது. ஆதலால் அடி, காவல், மரணம் முதலியவை கசக்கிற அவிழ்தமானாலும், அதின் பலம் சுகத் தைத் தருகிறதாய் இருக்கிறதினால் நீ சரீரதுன்பங்களை அதிகமாய் விரும்பி ஆத்துமச்சிறையை நஞ்சாகப் பகைத்து அதினின்று வெளிப் பட வகைபார்ப்பாயாக! மேரிக்குக் காவல் எவ்வளவு நல்லுணர்வைக் கொடுத்ததென்பதைக் கவனி.

5. அதிகாரம்

குற்றவிசாரணை—மேரிக்கு உண்டான துன்பம்

அப்போது ஒருவன் அவளை நியாயாதிபதிக்கு முன் கொண்டு போக வந்தான். அவள் நியாயாதிபதிக்கு முன் கொண்டுபோகப் பட்டவுடனே நடுக்கம் அவளைப் பிடித்தது. நியாயாதிபதி இரத்தாம் பரத்தால் மூடப்பட்ட ஒரு உயர்ந்த ஆசனத்தின்மேலும் தாழ அவ ருடைய ரைட்டர் ஒருவன் ஒரு பழைய மேஜையின் அருகிலும் இருக்கக்கண்டாள். நியாயாதிபதி மேரியை அநேகம் கேள்விகள் கேட்டார். அவைகளுக்கெல்லாம் அவள் உண்மையாய் உத்தரவு சொல்லி கண்ணீரோடு தன் குற்றமில்லாமையை வெளிப்படுத்தி னாள். ஆனால் நியாயாதிபதி: 'உன்னைத்தவிர அறையில் ஒருவரும் இருந்ததில்லை; நீதான் மோதிரத்தை எடுத்திருக்கவேண்டும், உண்மை யைச் சொல்' என, மேரி, 'நான் இப்போது சொன்னதை அன்றி வேறொன்றும் சொல்ல ஏதுவில்லை, மோதிரம் என்னிடத்தில் இல்லை' என, நியாயாதிபதி, 'மோதிரம் உன் கையில் இருந்ததைப் பார்த்திருக்

Koviloor Acadamy

கிறார்கள், இதற்கென்ன சொல்லுகிறாய்?' என்று கேட்க, அவள், 'இது சுத்த அபத்தம்' எனவே, அவர் மார்கரெட் என்ற தாதியை வரவழைக்கச் சொன்னார். சீமாட்டியின் பணிவிடைக்காரியாகிய மார்கரெட், பட்டுடையை மேரி வாங்கிக் கொண்டுபோனது முதல் அவளைப் பழிவாங்கவேண்டும் என்று அடஞ்சாதித்ததின் நிமித்தம் இச்சமயத்தில் அரமனையிலுள்ள வேலைக்காரரிடத்தில் எல்லாம் 'அந்தப் பூக்காரப்பெண்தான் மோதிரத்தை எடுத்திருக்கிறாள்; அவள் அரமனையைவிட்டுப் புறப்பட்ட உடனே அதை அவள் கையில் கண்டேன். அவள் என்னைப் பார்த்தமாத்திரத்தில் அதை மறைத்துக் கொண்டாள். அது எனக்குச் சந்தேகத்துக்கு இடமாய் இருந்தும் சீமாட்டியவர்களுக்கு அவள் மிகுந்த பிரியமுள்ளவளாயும் அநேக மான பொருட்களை அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிற வளாயும் இருந்தபடியால் அதைப்பற்றி நான் ஒருவருக்கும் சொல்ல வில்லை. நான் அப்போது சீமாட்டி அறைக்குள் போகாதிருந்ததற் காகச் சந்தோஷப்படுகிறேன். மேரியைப்போலொத்த கொடிய வஞ்ச கர்கள் யோக்கியர்களையும் சமுசயம் நினைக்க ஏதுவாக்கிப்போடுவார் கள்' என்று இப்படிப் பலவித வார்த்தைகளை ஏற்கனவே அவளுக்கு விரோதமாய் அலப்பி இருந்ததால், அவளை இப்போது சாட்சியாக அழைத்து உண்மையைச் சொல்லக் கண்டிப்பாய்க் கேட்க, அவள் மனம் பதைபதைத்தும் முழங்கால் நடுங்கியும் மனச்சாட்சியின் சத்தத் தையும் நியாயாதிபதியின் பயமுறுத்தலையும் சட்டைசெய்யாமல் தான் முன் சொன்னது பொய் என்று இப்போது பின்வாங்கினால் தனக்கே நஷ்டம் நேரிடும் என்று எண்ணி மேரியைப் பார்த்து, 'மோதிரம் உன்னிடத்தில் இருக்கிறது, அதை உன் கையில் கண்டேன்' என் றாள். மேரி இந்த படாந்தரமான வார்த்தையைக் கேட்டவுடனே நடுக்கமடைந்தும் பொறுமையாய் அவளை நோக்கி, 'மார்கரெட்டே! நீ சொல்லுகிறது உண்மை அல்ல என்று நீயே அறிவாய், என் கையில் அந்த மோதிரத்தை நீ கண்டதே இல்லை. நான் உனக்கு யாதொரு பொல்லாப்பைச் செய்யாதிருந்தும் நீ என்னைக் கெடுக்க ஏன் இந்தப் பொய் வார்த்தைகளைப் பேசுகிறாய்?' என்றாள். அவ மானப்படுவாள் என்ற பயத்தின் நிமித்தமும் மேரியைப் பழிவாங்க வேண்டும் என்ற கெருவத்தின் நிமித்தமும் மார்கரெட் என்றவள் தன் பொய்யாணை வார்த்தையிலேயே நிலைநின்றாள். நியாயாதிபதி சொன்னது: 'மேரியே, உன் குற்றம் இப்போது வெளியரங்கமாய் இருக்கிறது. சீமாட்டியின் பணிவிடைக்காரி மோதிரத்தை உன் கையில் கண்டதாகச் சொல்லுகிறாளே, நீ அதை எங்கே ஒளித்துவைத் திருக்கிறாய் என்று எனக்குச் சொல்' என்றார். மேரி, 'அது என் னிடத்தில் இல்லை, அதை நான் பார்த்ததே இல்லை' என, அக்

Koviloor Acadamy

காலத்து மூடத்தனமான வழக்கத்தின்படி உண்மையைச் சொல்லும் படியாக அவளை இரத்தம் புறப்பட சவுக்கினால் அடிக்க உத்தரவு பண்ணினார். மேரி கத்திக் கதறி அழுதும் தன் உண்மையிலே நிலை நின்றாள். அப்புறம் அவளைக் காவல் அறைக்கே இரத்தத்தோடும் காயங்களோடும் ஒட்டிவிட்டார்கள். வைக்கோல் படுக்கையின் மேல் காயங்களுடைய உபத்திரவத்தோடு கிடந்து தகப்பனை தான் விட்டுப் பிரியும்போது, நீ என்னைவிட்டுத் தனியே இருக்கும்போது ஒரு மனுஷவல்லமையும் பிரிக்க ஒண்ணாத உன் இரட்சகரைக் கெட்டி யாய்ப் பிடித்துக்கொள் என்று சொன்ன வார்த்தைகளை நினைத்து ஜெபத்தைக் கேட்கிறவரும் அதற்குப் பதில் அளிக்கிறவருமான கர்த் தரை நோக்கி ஜெபித்து நல்ல நித்திரைபோனாள்.

மறுநாள் மேரியை மறுபடியும் விசாரணைக்கு அழைத்தபோது கடினமான வார்த்தையாவது செய்கையாவது அவள் உண்மையை வெளிப்படுத்தாதென்று எண்ணி நியாயாதிபதி சாந்தமான வார்த்தை களையும் வாக்குத்தத்தங்களையும் கொண்டு அவளைக்கேட்க ஆரம் பித்தார். அவர் சொன்னது: 'மோதிரம் எங்கே இருக்கிறதென்று அறிவித்துப்போட்டால் நீ மரண தண்டனைக்கு நீங்கி விடுதலையாய்ப் போவதுந்தவிர வேறொரு ஆக்கினையையும் அடையமாட்டாய்' என, மேரி, தான் முன் சொன்ன வார்த்தைகளையே சொல்ல, நியாயாதி பதி, அவள் தன் தகப்பன்பேரில் மிக உருக்கமாய் இருக்கிறதைக் கண்டறிந்து சொன்னது: 'நீ உன் பிடிவாதத்தினாலே நிலைநின்றால் உன் தகப்பனும் ஆக்கினையை அடைவான், அந்தக் கிழவன்பேரில் இரங்கு, அவன் தலை கோடாரியால் துண்டித்துப் போடப்படுவதை நீ பார்க்கச் சகிப்பாயா? அவன் உன்னை இந்தக் குற்றத்தைச் செய்ய ஏவிவிட்டிருப்பான். நீ உண்மையை அறிவிக்காதே போனால் அவ னும் சாகவேண்டும். மோதிரத்தை எடுத்தேன் என்று சொல்லிப் போடு, அந்த ஒரு வார்த்தை உன் தகப்பனின் ஜீவனைக் காப்பாற்றும்' என்றான்.

மேரிக்கு இது மெத்தக் கடினமான சோதனையாய் இருந்தது. அவள் நெடுநேரம் பேசாதிருந்தாள். அப்புறம் அவள் தன் தகப் பனைத் தப்புவிக்கும்படி, 'நான்தான் மோதிரத்தை எடுத்தேன், அது ரஸ்தாவில் விழுந்துபோய்விட்டது' என்று சொல்ல மனதில் எண் ணியும், அக்கெட்ட எண்ணத்தை மேற்கொண்டு, அவள், 'பாவஞ் செய்கிறதைவிடச் சாகிறது தாவிளை, ஆ, கர்த்தாவே! நான் உம்மை நம்பிக்கொண்டிருக்கிறேன், நீர் எங்களை இரட்சிப்பீர்' என்று சொல் லிக்கொண்டு நியாயாதிபதியை நோக்கி உரத்த சத்தமாய்ச் சொன் னது: 'நான் மோதிரத்தை எடுத்தேன் என்று சொல்வேனாகில் அது பொய்யாய் இருக்கும், மரணத்துக்குத் தப்பிப்போக பொய் சொல்லத்

Koviloor Acadamy

துணியேன். நீர் என் ஜீவனை எடுப்பதிலேமட்டும் திருப்தியடைய உம்மைக் கெஞ்சுகிறேன். என் தகப்பனை இரட்சிக்க என் ஜீவனைச் சந்தோஷமாய்க் கொடுக்கிறேன்' என்றாள். நியாயாதிபதி ஒன்றும் பேசாமல் தனக்குள் அதிக ஆலோசனையாகி மேரியைத் திரும்பக் காவற்கூடத்துக்குக் கொண்டுபோக சேவகர்களுக்குக் கற்பித்தான்.

நேசா! சின்ன மேரியின் தைரியத்தைப் பார்த்தாயா? ஒரு பொய்யைச் சொல்லி தன் ஜீவனைத் தப்புவித்துக்கொள்ள விரும்பாமல், பாவஞ்செய்கிறதைவிடச் சாகிறதைத் தெரிந்துகொண்டாளே. நீ இப்படிப்பட்ட சோதனைக்குள் அகப்பட்டு போனாய் என்று வைத்துக் கொள்; அச்சோதனையை மேற்கொள்ள நீ மேரியைப்போல் ஜீவனை விட மரணத்தைத் தெரிந்துகொள்வாயா? 'தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; அதை இழந்துபோக விரும்புகிறவனே அதைக் கண்டடைவான்' என்ற நமது இயேசு சுவாமியின் ஜீவவார்த்தைகள் எவ்வளவு உண்மையாய்ப் பிரகாசிக்கிறது என்று மேரியின் பின்வரும் சரித்திரத்தால் அறிந்துகொள்வாய்.

6. அதிகாரம்

காவற்கூடத்தின் சந்திப்பு

மேரிக்கு உண்டான துன்பத்தில் கொஞ்ச ஆறுதல்

நியாயாதிபதிக்குக் கலக்கம் உண்டாகி அவர் தன் றைட்டரைப் பார்த்துச் சொன்னது 'நாம் இதின் உண்மையைக் கண்டுபிடிக்க ஆரம்பித்து இன்று மூன்றுநாளாகியும் அதில் கொஞ்சமேனும் கண்டு பிடிக்க இல்லையே. வேறே யாதொருவர் மோதிரத்தை எடுத்ததாக ருஜுவானல் இந்தச் சிறுபெண்ணைக் குற்றமற்றவளாக விட்டுவிடலாம்; இவள் வயதைப் பார்த்தாலுமோ இவ்வளவு பிடிவாதம் பண்ணத்தக்கவள் அல்ல, ஆனல் அவளுக்கு விரோதமான சாட்சியோ பலமாயிருக்கிறது' என்றார்.

மேலும் அவர் சீமாட்டி அண்டைக்குப் போய் அவர்களிடத்தில் காரியங்களை மிக நுட்பமாய்த் திரும்பவும் விசாரித்துக்கொண்டு, மார்கரெட் என்பவளைத் திரும்பவும் கேட்டறிந்து, இப்படியாய் நாள் முழுதும் விசாரணையான நடபடிக்கைகளைத் திரும்பத் திரும்ப ஆராய்ந்து பார்த்து, கடைசியாய் ஜேம்ஸ் என்பவனைக் கொண்டுவரும்படியாய்க் கற்பிக்க, ஜேம்ஸ் வரவே, நியாயாதிபதி அவனை நோக்கி: 'நான் இந்தச் சங்கதியை விசாரிக்கத் துவக்கினதுமுதலே மிகக் கண்டிப்பாய் இருந்தேன். கண்டிப்பாய் இருந்தும் கொடுமையையாவது அநியாயத்தையாவது நான் நடப்பித்தது இல்லை. நான் உன் மகள் பாடனுபவிப்

Koviloor Acadamy

பதை விரும்பவில்லை; ஆனால் அவளுக்கு விரோதமாய்ச் சொல்லப் படுகிற சாட்சி தெளிவும் பலமுமாய் இருக்கிறது. அதினால் தேசப் பிரமாணம் அவள் சாவுக்குப் பாத்திரமானவள் என்கிறது. ஆகிலும் அவள் அறிக்கையிட்டு மோதிரத்தைக் கொடுத்துவிட்டால் அவள் வயதின் நிமித்தம் அவளுக்கு மன்னிக்கப்படும்; மறுதலித்தால் தப்ப மாட்டாள். ஆதலால் ஜேம்ஸே, நீ அவளண்டைக்குப் போய் அவ ளுக்குப் புத்திசொல்லி மோதிரத்தைக் கொடுத்துவிடப் பிரயாசப்படு; அவளுக்கு யாதொரு பொல்லாப்பும் அணுகாது என்பதற்கு என் வார்த்தையை நம்பு. நீ அவள் தகப்பன், அவள் முழுமையும் உனக்கு உட்பட்டவள். நீ அவள் உண்மையை அறிவிக்கச் செய்யாதே போனால் நீயும் அந்தக் குற்றத்துக்கு உடந்தையானவன் என்று எண்ண ஏதுவிருக்கும்' என்று சொல்ல, ஜேம்ஸ்: 'நான் சந்தோஷ மாய் அவளண்டைக்குப் போய் அவளோடு பேசுவேன். ஆனால் அவள் மோதிரத்தைத் திருடினதில்லை; ஆதலால் அவள் இம்மட்டும் சொன்னதை அன்றி அவள் அறிக்கையிட வேறொன்றும் இல்லை. என்றாலும் உமது சொற்படி அவளிடத்தில் போய் பேசுவேன்' எனவே, சிறைச்சாலைக்காரன் அவனை அவன் மகளண்டைக்குக் கூட்டிக்கொண்டுபோய் கல்மேஜையில் ஒரு விளக்கை வைத்துவிட்டு, கதவைத் தனக்குப் பின்னால் பூட்டிக்கொண்டு போய்விட்டான். விளக்குக்குப் பக்கத்தில் ஒரு மட்டி ரொட்டியும் தண்ணீர்க்கூசாவும் மேரியுடைய இரா அசனத்துக்காக வைக்கப்பட்டிருந்தது. அவள் தன் முகத்தைச் சுவருக்கு நேராய்த் திருப்பிக்கொண்டு தூங்கினதாகத் தோன்றிற்று. காலடி சத்தமும் விளக்கு வெளிச்சமும் அவளை எழுப்பிவிட்டது. அவள் திரும்பவே, தகப்பனைக் கண்டு அவன்மேல் விழுந்து அழுதாள். அவர்கள் இருவரும் கொஞ்சநேரம் அழுதார் கள். பிறகு தகப்பன் மகளுக்குத் தான் வந்த சங்கதியை அறிவிக்க மேரி, 'ஆ, என் அருமைத்தகப்பனே! மெய்யாகவே நீர் என் வார்த் தையை நம்பவே இல்லை. என்னைக் குற்றமற்றவள் என்று ஒருவரும் நம்பாதேபோனாலும் என் தகப்பன்கூட என்னை நம்பக்கூடாதா? மெய்யாகவே, மெய்யாகவே, நான் திருடி அல்ல என்று என்னை நம்ப உம்மைக் கெஞ்சுகிறேன்' என்றாள். 'அமர்ந்திரு, என் அருமை மகளே! நான் உன்னை முழுதும் அப்படியே நிச்சயமாய் நம்பியிருக் கிறேன், நான் சந்தேகிக்கவே இல்லை. நியாயாதிபதி கற்பித்ததற்குக் கீழ்ப்படிந்து அதை உனக்கு அறிவிக்க வந்தேன்' என்று சொல்லி, தன் மகள் இரண்டு மூன்று தினங்களில் கன்னமொட்டி கண்கள் சிவந்து தலைமயிர் சன்னல்பின்னலாய் முகத்திலும் கழுத்திலும் விழுந்து புரள, எத்தனையாய் மெலிவடைந்து உருமாறிப்போனாள் என்பதைப் பார்த்து மிகுந்த துக்கம் அடைந்து சொன்னது: 'கர்த்தர்

Koviloor Acadamy

உனக்குக் கடுமையான சோதனையை வரவிட்டார். நீ மிக பாடுபட்டிருக்கிறாய், பின்னும் அதிகமான பாடு வரும் என்று பயப்படுகிறேன். அவர்கள் உன் குற்றமில்லாமையை நம்பவேமாட்டார்கள். அவர்கள் தங்கள் கொடுமையையே கொண்டு செலுத்தப் பார்ப்பார்கள். தைரியத்துடன் நீ இதற்கு ஆயத்தப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் உன் ஜீவனை வாங்கிப்போடுவார்கள் என்பதை அறிவாயோ' என்றான். மேரி 'எனக்காக நான் பயப்படவே இல்லை. உம்மை மட்டும் தப்ப விடுவார்களானால் அவர்கள் என்னைப் படுத்திவைக்கும் பாடுகளையெல்லாம் பொறுமையாய்ச் சகிப்பேன். ஆனால் நியாயாதிபதி, உம்மைக் கொன்றுபோடுவார்கள் என்று சொன்ன வார்த்தையைமட்டும் சகிக்கக்கூடவில்லையே' என, தகப்பன்: 'எனக்காக பயம் இல்லை, உன்னைப் பயமுறுத்தச் சொல்லியிருப்பார். எனக்கு ஜீவமோசம் வராது, ஆனால் உனக்கோ அப்படி அல்ல மகளே' எனவே, மேரிக்குச் சந்தோஷம் மனதில் பொங்கி அவள்: 'அப்படியானால் என்னிருதயம் இப்போ பெரிய பாரத்துக்கு நீங்கலாகிறது. நீர் சுகமாய் இருப்பீரானால் எல்லாம் நன்றாயிற்று. நான் மரணத்துக்குப் பயப்படவே இல்லை, என் இரட்சகராகிய கர்த்தரண்டைக்குப் போய் அங்கே என் அருமைத்தாயைப் பார்ப்பேன். ஆ, இதென்ன பாக்கியம்!' என்று மிகக் களிப்போடு சொன்னாள்.

இந்த வார்த்தைகள் ஜேம்ஸ் என்பவனுடைய இருதயத்தில் வாள் உருவிச் சென்றதுபோல் இருந்தது. அவன் ஒரு சிறுபிள்ளையைப் போல் அழுதான். பிறகு, அவன் தன்னை அடக்கிக்கொண்டு சொன்னது: 'இப்படிப்பட்ட பாக்கியமான மனதை நீ பெற்றிருப்பதற்காகக் கர்த்தர் துதிக்கப்படுவாராக! ஒரு விருத்தாப்பிய தகப்பனுக்கு ஒன்றான ஆறுதலும், பூமியின் எல்லாப் பொக்கிஷமும், சந்தோஷக் கிரீடமுமான இப்படிப்பட்ட பாக்கியமான பிள்ளையை இழந்துவிடுவது கொடுமை. ஆம், எத்தனை பெரிய கொடுமை! ஆனாலும் கர்த்தாவே, உமது சித்தம் செய்யப்படுவதாக! என்னிடத்தில் பெரிய பலியைக் கேட்கிறீர். நான் அதை மனதாரத் தருகிறேன். என் மகளை எடுத்துக்கொள்ள உமக்குப் பிரியமானால் உமது சித்தத்துக்கே ஒப்படைக்கிறேன். எங்களுக்கு நலமானது எது என்பது உமக்குத்தான் தெரியும்' என்று ஜெபித்து, மேரியைப் பார்த்து 'நீயும் உன்னை அப்படியே கர்த்தருக்குக் கையளித்துப்போடு. நீ குற்றமற்றவளாய்ச் சாவது மெத்த உத்தமம்; பின்னும் அதிகமான உபத்திரவங்களுக்கு உள்ளாகி அவஸ்தைப்படுவதைவிடக் காலம் ஏற்கனவே இந்த அநியாய உலகை விட்டுப் பரமண்டலத்துக்குப் போய்விடுவது மெத்த நலம். கர்த்தர் உன்னைப் பலப்படுத்துவாராக, என் நேசமே!' என்றான். இவ்வார்த்தைகளை அவன் பேசிக்கொள்ளவே அவன் கண்கள் தாரைதாரையாய்க் கண்

Koviloor Academy

ணீரைச் சொரிந்தன. சற்றுநேரம் பொறுத்து அவன்: 'பிள்ளேயே, இன்னொரு காரியம் இருக்கிறது. மார்கரெட் உனக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லியிருக்கிருளே. நீ ஆக்கினே அடைவது அவள் சொல்லின் பேரிலேதானே, அவளே உன் மரணத்துக்குக் காரணம். நீ அவளுக்கு அதை மன்னிக்கிருய் அல்லவா என் பிள்ளேயே? நீ அவளேப் பகைக்கவேமாட்டாய். அவள் சந்தோஷமும் செல்வமும் நிறைந்த அரமனேயில் வசித்தாலும் இந்த இருட்டறையின் வைக்கோல்படுக்கையில் கிடக்கிற நீயே அவளேவிட பாக்கியவதி. வாதையுள்ள மனச்சாட்சியோடு இருப்பதைவிடச் சாவது நலம். உன் இரட்சகர் தம்மைக் கொன்றவர்களுக்கு மன்னித்தது போல் நீயும் அவளுக்கு மன்னி. அப்படியே செய்தாய் அல்லவா பிள்ளேயே?' என 'ஆம் என் பிரிய தகப்பனே, அவளுக்கு மன்னிக்கிறேன், அவள்பேரில் மனதுருகுகிறேன். அவள் தான் செய்ததைக் குறித்து நினேக்கும்போது எத்தனேயாய் வாதிக்கப்படுவாள். கர்த்தர் அவளுக்கு மெய்யான குணப்படுதலேயும் நவமான இருதயத்தையும் தந்தருளுவாராக!' என்ருள். அப்போது சிறைச்சாலேக்காரன் வந்தான். ஜேம்ஸ் சொன்னது: 'என் நேசிக்கப்பட்ட பிள்ளேயே, இப்போ நான் உன்னேவிட்டுப் பிரியவேண்டும். நான் உன்னே உன் கர்த்தரும் இரட்சகருமானவருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். அவரையே நம்பி இரு. அவர் உன்னேப் பலப்படுத்துவார். என் பிரியமே, நான் உன்னே இனிப் பார்க்க இடம் பெருமல் பூமியில் இது நமது கடைசி சந்திப்பாய் இருந்தால் நாம் மோட்சத்தில் சந்தித்துக்கொள்ளுவோம். நான் உனக்குப் பின் அதிகக்காலம் இருக்கமாட்டேன்' என்று சொல்லவே, சிறைச்சாலேக்காரன், 'நீ திரும்பிப்போக நேரம் ஆயிற்று' என்று சொல்ல, மேரி அவனே விடாமல் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். அவள் கைகளே மெதுவாய் எடுத்துவிட்டுக் கடைசியாய் அவளே முத்திசெய்து சீக்கிரம் வெளிப் புறப்பட்டான். அவளோ சோர்ந்து தன் படுக்கையின்மேலே விழுந்தாள்.

ஜேம்ஸ் திரும்ப நியாயாதிபதியண்டைக்கு நடத்தப்பட்டு, அவருக்குமுன் தன் கைகளே வானத்துக்கு நேராய் உயர்த்தி, பயபக்தியுடனே சொன்னது: 'என் மகள் குற்றமற்றவள். அதை நான் பிரமாணத்தின்பேரில் உறுதிசொல்ல தயாராய் இருக்கிறேன்' என, நியாயாதிபதி, 'அதை நானும் நம்பக்கூடியதுதான். ஆனல் நீயும் உன் மகளும் சொல்லுகிறபடி அல்ல, விசாரணேயில் சாட்சியத்தின் படியும் கண்டிப்பான தேசப்பிரமாணத்தின்படியும் நான் தீர்மானம் சொல்லவேண்டியது' என்ருர்.

நேசா! இவ்வுலகம் நமக்குச் சிறையிருப்பும் சஞ்சலமும் நிறைந்த பள்ளத்தாக்குமாய் இருக்கிறது. நாம் ஒருநாள் தப்பிப் பிழைக்

Koviloor Acadamy

கிறது மகா அரிது. கர்த்தருடைய சகாயமும் அருளும் நமக்கு இல்லாதிருந்தால் நாம் எப்படி நமது பெரிய மூன்று சத்துருக்களுக் குத் தப்பிக் கரையேறுவோம்? ஜேம்ஸ், மேரி என்றவர்களைப்போல் நாம் நமக்கு விரோதம் செய்கிறவர்களுக்கு மனப்பூர்வமாய் மன்னித்து நமக்கு நமது இக்கட்டுகளிலெல்லாம் கர்த்தர் இரக்கம் பாராட்ட அவரை நோக்கி ஓயாமல் பஞ்சரித்துக் கெஞ்சுவோமாக. அப்போது காவலானாலும் மரணமானாலும் பட்டயமானாலும் பஞ்சமானாலும் ஒன்றும் நம்மைக் கலங்கப்படுத்தமாட்டாது. நாம் தைரியமாய், கர்த்தர் எனக்கு இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லி நமது உண்மையில் நிலைத்திருப் போம்.

7. அதிகாரம்

தீர்மானம்

மேரிக்கு உண்டான துன்பம் அதிகரித்தது

அரமனையில் உள்ளவர்களும் ஊரில் உள்ளவர்களும் மேரிக்கு என்ன முடிவு உண்டாகும் என்று அறிய ஆவலோடே காத்திருந்தார் கள். அவள் ஜீவனுக்காகப் பயந்திருந்தார்கள். ஏனெனில் அக் காலத்தில் திருட்டுக் குற்றம் வெகு கடுமையாய்த் தண்டிக்கப்பட்டது. மோதிரத்துக்குக் கீழ்த்தரமான விலையுள்ளவைகளைத் திருடின குற்றத் துக்கெல்லாம் மரண ஆக்கினை இடப்பட்டது. கவுண்ட் பிரபு மேரி யின் குற்றமின்மை எவ்விதத்திலாகிலும் வெளிப்படக்கூடுமோ என்று வாக்குமூலங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து வெகுவாய் நியாயாதி பதியோடு ஆலோசித்தார். அப்படிப்பட்டது ஒன்றும் காணக்கூடிய தாய் இல்லை. சீமாட்டியும் அவள் மகளும் மேரிக்கு மன்னிக்கவே வெகுவாய்ப் பரிந்துபேசினார்கள். கண்ணீரோடேயும் கெஞ்சினார் கள். ஏழை விருத்தாப்பியனான மேரியின் தகப்பன் தன்னால் செய்யக் கூடியது ஒன்றும் இல்லாமல் ஓயாமல் ஜெபம்மாத்திரம் பண்ணிக் கொண்டிருந்தான். மேரி சிறைச்சாலைக்காரனுடைய காலடி சத்தத் தைக் கேட்கும்போதெல்லாம் தான் கொலைக்களத்துக்குப் போகும் நேரம் சமீபித்தது என்று எண்ணினாள். சிறைச்சாலை வேலைக்காரரும் அதற்கென்று காரியங்களை முஸ்திப்புப் பண்ணினார்கள். மார்கரெட் என்பவள் ஒருநாள் அந்த வழியாய்ச் செல்லும்போது இந்தப் பிரயத் தனங்களைப் பார்த்து அதிக மனவேதனை அடைந்தாள். அன்று சாயங் காலம் அரமனை ஊழியர் எல்லாம் அவள் ஏதோ மனவேதனை உள்ள வளாய் இருக்கிறாள் என்று அறிந்தார்கள். அன்றிரவு மேரியின்

Koviloor Academy

துக்க முகரூபம் அவளுக்குக் காணப்பட்டது. ஆகிலும் அவள் மேரியை இரட்சிக்கும்படி தன் குற்றத்தை அறிக்கையிட்டு அதற்குப் பரிகாரமாக யாதொன்றை நடப்பிக்க தைரியமற்றுப் போனுள்.

கடைசியாக நியாயாதிபதியானவர், மேரி மரண தண்டனைக்கு ஏதுவாய் இருந்தும் அவள் முந்தின மேன்மையான நன்னடக்கையைப் பற்றியும் அவள் இளமை வயதைப்பற்றியும் ஊரைவிட்டு புறதேசத்துக்கு ஓடிப்போகும்படியாய்த் தீர்மானித்தார். ஜேம்ஸ் என்ற அவள் தகப்பனுக்கும் அவன் அவள் குற்றத்துக்கு உடந்தையாய் இருப்பான், அவன் கெட்டமாதிரியால் அவள் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்ய ஏவப்பட்டிருப்பாள் என்ற எண்ணத்தைக்கொண்டு அந்தப்படியே தீர்ப்பிட்டார். அவனுக்கு உள்ள சொத்துக்கள் எல்லாம் பறிமுதலாய்ப் போயின. கவுண்ட் பிரபுவும் அவன் வீட்டாரும் மேரிக்காகப் பரிந்துபேசாதேபோனுல் அவளுக்குக் கொடிய ஆக்கினை உண்டாய் இருக்கும். ஜேம்ஸும் மேரியும் மறுநாளே போலீஸ் உத்தியோகஸ்தரால் ஊருக்கு வெளியே கொண்டுபோகப்பட்டார்கள்.

சில தினங்களுக்குமுன் மேரி என்பவள் (சீமாட்டி புத்திரிக்குக்) கொடுத்த புஷ்பக்கூடையை எமிலியா கண்டு, 'இதை என் பார்வையில் இல்லாமல் எடுத்துக்கொண்டு போ, நான் சகிக்கக்கூடாத துக்கத்தை இது எனக்கு உண்டுபண்ணுகிறது' என்று சொல்லவே, மார்கரெட் அதைத் தன் அறையில் கொண்டுபோய் வைத்திருந்தாள். இப்போது அதிகாலமே அவர்கள் அரமனைவாசல் பக்கமாய் நடத்திக் கொண்டு போகப்பட்டபோது, மார்கரெட் வெளியே வந்து அதை மேரிக்கு முன்பாகக் கொண்டுவந்து, 'உன்னைப்போலொத்த திருடியிடத்தில் இருந்து இப்படிப்பட்டதைப் பெற்றுக்கொள்ள சீமாட்டி அவர்களுக்குப் பிரியம் இல்லை; நீ அவர்கள் தயவைப் பெற்றுக்கொண்டாய் என்று நினைத்தாய்; உன் எண்ணம் நீ கொண்டுவந்த புஷ்பத்தைப்போல் வாடிப்போயிற்று. அந்தக் கூடையை உனக்கே கொடுத்துவிடுகிறேன்' என்று சொல்லி, அதை அவள் காலில் எறிந்து போட்டு வீரிட்டுக்கொண்டு ஓடிப்போய்க் கேற்று வாசற்படி கதவைச் சாத்திக்கொண்டாள். கண்ணீரோடு மேரி அந்தக் கூடையை எடுத்துக்கொண்டு தன் துக்கப் பிரயாணத்தை நடத்தினுள். அவள் தகப்பனுடைய தத்தளிப்பான நடைக்கு ஒரு தடியும் இல்லாமல் போயிற்று. புஷ்பக்கூடைதான் அவர்கள் ஒன்றுன ஆஸ்தி. கண்களில் கண்ணீர் மறைக்க மறைக்க அவர்களுக்குப் பழக்கமான ஒவ்வொரு இடத்தையும் பார்த்துக்கொண்டு சென்ருர்கள். முந்தி அவர்கள் பாக்கியமாய்க் காலம் கழித்த தங்கள் குச்சையும் பிறகு அரமனையையும் கடைசியாக கோவில் கோபுரத்தையும் பார்த்துக்கொண்டு செல்லவே ஒரு பாம்பு அவைகளை எல்லாம் அவர்கள் கண்களுக்கு

Koviloor Acadamy

மறைத்துப்போட்டது. ஒரு அடர்ந்த காட்டின் நடுவே போலீஸ் சேவகர் அவர்களை விட்டு விட்டுத் திரும்பினார்கள்.

விருத்தாப்பிய ஜேம்ஸ் என்பவன் துக்கத்தினாலும் பசியினாலும் சோர்வடைந்து அதிகமாய் நடக்கக்கூடாமல் ஒரு பெரிய கருவாலி மரத்தின் நிழலின்கீழ் இருந்த பாசியினால் மூடப்பட்ட ஒரு கல்லின் மேல் உட்கார்ந்தான். கொஞ்சநேரம் இளைப்பாறி, மேரியைத் தன் பக்கத்தில் அழைத்து, 'வா என் பிள்ளையே, நாம் நமது ஜநநபூமியை விட்டுத் தூரப்போகுமுன் முழங்காற்படியிட்டுக் கர்த்தரை நோக்கி உன்னை மரணத்தினின்று மீட்டுவிட்டதற்காக ஸ்தோத்திரித்து, நாம் எங்கேயாவது போகும்படியான தம் இஷ்டத்தைக் கொடுத்ததற்காக அவரைப் பணிந்துகொள்ளுவோம்' என்று சொல்லித் தன் கண்களை வானத்துக்கு நேராய் உயர்த்தி ஜெபித்ததாவது: 'பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே! பூமியிலுள்ள உமது பிள்ளைகளின் ஒன்றான நம்பிக்கையே! நெருக்கப்படுகிறவர்களின் ஆதரவே, விலங்கு மரணம் காவல் என்றவைகளினின்று எங்களை மீட்டுவிட்டதற்காகவும் எங்கள் ஆயுளின் காலங்களில் நீர் எங்களுக்கு அருளின எல்லா ஆசீர் வாதங்களுக்காகவும் நாங்கள் இருவரும் கூடி எங்கேயாவது போகும் படிக்கு இடம்பெற்ற உமது கிருபைக்காகவும் நீர் எங்களுக்கு ஆதர வாகக்கொடுத்த உமது திவ்விய வார்த்தை வாக்குத்தத்தங்களுக்காகவும் மரணத்திற்குப்பின் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அழியாமையை உடுத்திக்கொள்ளுவோம் என்கிற மகிமையான நம்பிக் கைக்காகவும் உம்மைத் துதித்து, ஸ்தோத்திரித்து, புகழ்ந்து போற்றி, அத்தியந்த பணிவாய் வணங்கி நமஸ்கரிக்கிறோம். நாங்கள் துரத்தப் பட்டுப்போகும் அந்நிய தேசத்தில் உம்மால் காப்பாற்றப்படும்படிக்கு உம்முடைய ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் கேட்டு வாங்குமுன்னே எங்கள் ஜநநதேசத்தை விட்டுப் புறப்படக்கூடாது. மிகுந்த சஞ்ச லத்தை அடைந்திருக்கிற விருத்தாப்பியனான என்பேரிலும் என் பிள்ளையின்பேரிலும் இரங்கி எங்களை உமது பட்சமுள்ள அடைக் கலத்தில் ஏற்றுக்கொண்டு நாங்கள் எங்கே போவோம் என்று அறி யாமல்போகிற வழிகளில் உண்டாகும் மோசங்களுக்கெல்லாம் எங்க ளைக் கிருபையாய்க் காத்தருள வேண்டும் என்று உம்மைக் கெஞ்சு கிறோம். எங்கள் வழிகளை உமது பிள்ளைகள் இருக்கிற இடத்துக்கு நேராய் நடத்தி அவர்கள் எங்கள்பேரில் இரக்கங்கொள்ளும்படி அவர்கள் மனதை அசைத்தருளும். கர்த்தாவே, இந்த உமது பூமியில் எங்கள் பரதேசப் பயணநாட்களை அமைதியாய் நடத்திச் சமாதான மாய் மரிக்கும்படிக்கு எங்களுக்கு ஓர் சிறிய இடத்தைக் கட்டளை யிட்டருளும். எங்களுக்கு ஓர் இடத்தை ஏற்கனவே ஆயத்தப்படுத்தி யிருக்கிறீர் என்று அறிந்திருக்கிறோம்; ஆனால் எங்கே என்று அறி

Koviloor Academy

யோம். நாங்கள் குடியிருந்து காலங்கழிக்க நீர் குறித்திருக்கிற இடத்துக்கு நாங்கள் போய்ச்சேருமவரையில் உம்மிலே விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவர்களாய் நடந்துபோகப்பண்ணும். எங்கள் பிரயாணத்துக்கு எங்களைப் பலப்படுத்தி கர்த்தராகிய இயேசு சுவாமியின் மூலமாய் உமது சமாதானத்தை எங்களுக்குக் கட்டளையிட்டருளும்' என்று ஜெபித்தெழுந்தபோது மிகுந்த பலத்தையும் தைரியத்தையும் ஆறுதலையும் அடைந்து சந்தோஷமாய்த் தங்கள் வழியே போகப் புறப்பட்டார்கள்.

இதை வாசிக்கிற நேசா! கருத்தான ஜெபம் எவ்வித இக்கட்டிலும் ஆறுதலைத் தந்து ஆத்துமாவைப் பலப்படுத்துகிற தென்பதை நீ உன் அநுபவப் பரீட்சையால் அறிந்திருக்கிறாயா? மனுஷ ஒத்தாசை எல்லாம் அற்றுப்போயிருக்கும் கடை இக்கட்டிலேதான் சலிப்பின் ராத்திரி முகிந்து களிப்பின் பகல் உதிக்கும். மனுஷன் படும் துன்பத்தைப் பார்க்க அவனைப் படைப்பித்த வல்லவருக்கு அவர் குடல்கள் அவருக்குள் எரிந்தாலும் அவர் நன்மைக்கென்று அவைகளைக் கவனியாதவர்போல் இருந்துவிடுகிறார்.

8. அதிகாரம்

ஆபத்துக்கு உதவின நேசன்

ஆபத்தில் மேரிக்குக் கிடைத்த சகாயம்

ஜேம்ஸ் என்பவன் ஜெபம்பண்ணி முடித்தமாத்திரத்தில் ஒரு காலடி சத்தம் கேட்கப்பட்டது. அந்தோனி என்கிற காட்டுக்காரன் அவர்களுக்கு நேராய் நடந்துவந்தான். அவன் கவுண்ட் பிரபுவின் குமாரனுடனே ஜேம்ஸ் என்பவனோடுகூடத் தேசயாத்திரை பண்ணின ஒரு பழமையான சிநேகிதன். அவர்கள் அநேக நாளாய்க் கூடி யாத்திரைபண்ணினவர்கள்; ஆதலால் அவர்கள் சிநேகிதம் மாறாமல் இருந்தது. அந்தோனி கவுண்ட் பிரபுவின் காட்டுக்காரனானதால் அதிகாலமே எழுந்து காட்டுக்குள் தன் வேலையைப் பார்க்கப் போனான். அவன் அப்போது ஜேம்ஸைப் பார்த்து: 'கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக! நான் உன்னை இச்சமயத்தில் பார்க்க நேரிட்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன். மரங்களின் நடுவிலே உன் சத்தத்தைக் கேட்டேன். உன்னை தேசத்தைவிட்டுத் துரத்தினது கொடுமைதான். விருத்தாப்பியனான ஒரு மனுஷன் தன் ஜநந பூமியையும் இல்லறத்தையும் விட்டுப்போவது மிகத் துக்கமான காரியமே' என்றான். ஜேம்ஸ் சொன்னது: 'வான் கவிந்த பூமி எல்லாம் பரமண்டலத்திலுள்ள என் பிதாவுக்குச் சொந்தம் ஆனதால் எங்கேயாவது எங்களுக்கு ஓர் இடத்தைக் கண்டடைவோம். நாங்கள் அவர் சமுகத்தை விட்டுத் துரத்தப்

Koviloor Academy

படவும் அவர் நன்மை எங்களைத் தொடராத இடத்துக்கு நாங்கள் போகவும் மாட்டோம்' என, 'உங்களுக்கு உள்ளது உரியது எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டும் உங்கள் பிரயாணத்துக்கு வேண்டிய உடுப்பைதானும் கொடாமல் வெறுமையாய் அனுப்பிவிட்டார்களோ' என்று அந்தோனி எரிச்சலாய்க் கேட்க, ஜேம்ஸ், 'காட்டிலுள்ள லீலி புஷ்பத்தை உடுத்துகிறவர் எங்களையும் உடுத்துவார்' என, 'உங்களுக்குக் கொஞ்சமாவது பணம் இல்லையோ' என்று அவன் கேட்க, 'பொன்னையும் வெள்ளியையும் பார்க்க அதிக ஐசுவரியமுள்ள நல் மனச்சாட்சியே எங்கள் பொக்கிஷம்' என்று ஜேம்ஸ் சொல்ல, 'நீங்கள் கொண்டுவந்ததெல்லாம் இந்த வெறுங்கூடைதானா? அதென்ன பெறும், ஒருவேளை இரண்டரை ரூபாய் பெறலாம்' என்று அந்தோனி சொல்ல, 'அவ்வளவு விலைபெறுமானால் நாங்கள் ஐசுவரியவான்கள் தான். கர்த்தர் என் கைகளின் வேலையை ஆசீர்வதித்தால் ஒரு வருஷத்துக்கு நூற்றுக்கணக்கான கூடைகளை முடைவேன். என் தகப்பன் கூடை முடைகிற தொழிலுடையவர். அவர் எனக்கு இந்த வேலையைக் கற்றுக்கொடுத்தார். நான் சோம்பேறியாய்த் திரிய அவர் என்னை விடமாட்டார். நான் இடைவிடாத முயற்சியாயிருக்க அவர் என்னைப் பழக்குவித்தார். அவர் எனக்கு ஒரு பெரிய ஆஸ்தியை எழுதிவைத்து துன்மார்க்கத்தில் என்னைத் திரியவிடுவதைவிட இது மிக நேர்த்தியானது. நல்மனச்சாட்சியும் சரீர சவுக்கியமும் யோக்கியமான தொழில் வியாபாரமும் ஒருவன் விரும்பப்படத்தக்க செல்வம்' என்று ஜேம்ஸ் சொல்ல, 'நல்லது, உங்களுக்கு நேரிட்ட இந்த நிர்ப்பாக்கியங்களையெல்லாம் நீங்கள் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டிருப்பதை நான் பார்ப்பது எனக்கு மெத்தச் சந்தோஷம். நீங்கள் செய்வது சரிதான். உங்களுக்குத் தோட்டவேலை தெரிந்திருப்பது உங்களுக்கு உதவிதான். இப்போது எங்கே வேலை தேடிப்போகிறீர்கள்?' என்று அந்தோனி கேட்க, 'நாங்கள் அறியாது, தொலைதூரத்திற்குப் போகிறோம். கர்த்தர் எங்கள் வழிகளை நடத்துவார்' என்று ஜேம்ஸ் சொல்ல, 'என் இஷ்டனே, நான் உங்களுக்கு அதிக சகாயம் செய்ய இப்போது என்னிடத்தில் ஒன்றும் இல்லை. இந்தத் தடியை நான் மலையின்மேல் ஏறுவதற்கு உதவியாகக் கொண்டு வந்தேன். இதை நீர் எடுத்துக்கொள்ளும், உமக்கும் உமது பிரயாணத்துக்கு உதவியாக ஒன்று தேவைதானே' என்று காட்டுக்கார அந்தோனி சொல்லி ஒரு தோல் பையை எடுத்து, 'நான் இராத்திரி தங்கியிருந்த ஊரில் விறகுக்காக எனக்கு வரவேண்டிய கொஞ்சப் பணம் வந்தது; அதை எடுத்துக்கொள்ளும்' எனவே, தடியை நான் சந்தோஷமாய் எடுத்துக்கொள்ளுகிறேன், அதற்காக வந்தனம் சொல்லுகிறேன், ஆனால் பணத்தை நான் வாங்கிக்கொள்ளமாட்டேன்.

Koviloor Acadamy

அது விறகு கிரயமானதால் அது கவுண்ட் பிரபுவைச் சேர்ந்தது' என்று ஜேம்ஸ் சொல்ல, 'என் நல்ல கனமுள்ள சிநேகிதனே, விறகு கிரயத்தை ஏற்கனவே கவுண்ட் பிரபுவுக்குக் கொடுத்துவிட்டேன். பசுமாட்டை இழந்துபோன ஒரு ஏழை மனிதனுக்கு அச்சாரமாகக் கொடுத்திருந்தேன். ஏனென்றால் அவன் வாங்கின விறகுக்கு அப்போது கொடுக்க அவனுக்குப் பணம் இல்லை. நேற்று நான் கேட்காமலே அந்தப் பணத்தைக் கொடுத்தான். அது உமது சமயத்திற்குக் கிடைத்திருக்கிறது, அதைக் கர்த்தர் இப்போது உமக்குக் கொடுக்கிற ஈவாக அதை ஏற்றுக்கொள்ளும்' என்று அந்தோனி சொல்ல, 'அப்படியானால் நான் அதை வாங்கிக்கொள்ளுகிறேன், கர்த்தர் உமக்குப் பதிற் பலன் அளிப்பாராக, என் நல் உபகாரியே' என்று ஜேம்ஸ் சொல்லி, தன் மகளைப் பார்த்துச் சொன்னது: 'கர்த்தர் நமது பரதேசபயணத்தின் துவக்கத்திலேயே எப்படி நம்மை ஆசீர்வதிக்கிறார் பார். அந்நிய தேசத்தில் நாம் ஒரு அடியையாவது எடுத்து வைக்குமுன்னே நமது பிரயாணச் செலவுக்காக இந்த நல்ல சிநேகிதனை பணம் கொண்டுவந்து கொடுக்கும்படி நம்மண்டைக்கு அனுப்பினாரே. "உன் விண்ணப்பத்தின் துவக்கத்திலே கட்டளை புறப்பட்டது" என்று தேவதூதனால் தானியேலுக்கு அறிவிக்கப்பட்டதுபோல், நாம் கர்த்தரை நோக்கி ஜெபித்து முழங்காலினின்று எழுந்திருக்கும்போதே நமக்கு ஜெபத்துக்கு உத்தரவு அளிக்கப்பட்டது. "அவர்கள் கூப்பிடுகையில் நாம் முன் நிற்போம், அவர்கள் பேசுகையில் நாம் கேட்போம்" என்று கர்த்தர் செய்திருக்கிற வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் அல்லவா? ஆகையால் நாம் நம்பிக்கையில் உறுதிகொண்டு கலங்காதிருக்கக்கடவோம், கர்த்தர் நம்மைப் பாதுகாப்பார்' என்றான்.

விருத்தாப்பிய காட்டுக்கார அந்தோனி கண்ணீரோடு 'நான் போய்வருகிறேன், என் உத்தம சிநேகிதர்களே, நீங்கள் குற்றமற்றவர்கள் ஆதலால் உங்கள் மாசில்லாமை வெளிப்படும்' என்று சொல்லி அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் வழியே சென்றான். ஜேம்ஸ் தன் மகளின் கையைப் பிடித்துக்கொண்டு ஆபிரகாமைப் போல் எங்கே போவதென்று அறியாமல் போனான்.

இதை வாசிக்கிற நேசா! நீ துக்கசாகரத்தில் இருக்கிறாயோ? வீடற்று நேசரற்று அந்தரித்தவனாய் இருக்கிறாயோ? "நாம் உன்னை விட்டுவிடுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை" என்று உரைத்தவரை நினைத்துக்கொள். அவர் வாக்குத்தத்தங்களில் நம்பிக்கையாய் இரு. சங்கீதக்காரனோடே, 'என் ஆத்துமாவே, என் முறிந்துகொண்டிருக்கிறாய், ஏன் என்னில் கொந்தளிக்கிறாய். கர்த்தரை நம்பியிரு, அவரை என் முகத்தின் குறையற்ற இரட்சிப்பென்றும், என் கர்த்தர் என்றும் துதிப்பேன்' என்று சொல்லு.

Koviloor Acadamy

9. அதிகாரம்

அலைந்து திரிந்தவர்களுக்கு அகம் அகப்பட்டது மேரிக்குச் சிலகாலம் துன்பம் நீங்கி இல்லிடம் அகப் பட்டுச் சந்தோஷமாய் இருந்தது

மேரியும் அவள் தகப்பனும் அநேகநாளாய் வேலை அகப்படா மலும் தங்கியிருக்க ஒரு இடம் அகப்படாமலும் அலைந்துதிரிந்து ஒரு நாளுக்கு 20 மைலுக்கு அதிகமாய்ப் பிரயாணம் பண்ணிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் அதிக சிக்கனமாய்ச் செலவு பண்ணியும் அந்தோனி கொடுத்த பணம் செலவழிந்து போய்விட் டது; கடைசியில் பிச்சை எடுக்கவேண்டியவர்களானார்கள். பிச்சை எடுக்கப்போனாலும் பிச்சை அகப்படவில்லை. சிலர் கதவைச் சாத் திக்கொண்டார்கள். சிலர் கடுத்த வார்த்தைகளோடு கொஞ்சம் ரொட்டித்துண்டுகள் கொடுத்தார்கள். அகப்பட்ட காய்ந்த ரொட்டி யைத் தின்று ஓடைகளிலுள்ள தண்ணீரைக் குடித்தார்கள். பின்னும் சிலர் அவர்கள்பேரில் இரக்கங்கொண்டு அவர்களைத் தங்கள் வீடுகளில் அழைத்து தங்கள் சாப்பாட்டில் மீந்த சூப்பு இறைச்சி முதலியவை கொடுத்தார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் வெகு நேரமாய்க் கரடுமுரடான பாதை யிலும் தாகத்துக்குக் கிடையாத அவாந்தர வெளியிலும் பசியோடு நடந்துபோனதால் விருத்தாப்பிய ஜேம்ஸ் மிகச் சோர்வும் இளைப்பும் அடைந்து பேச்சற்றவனாய்த் தரையில் விழுந்துபோனான். மேரிக்கு அதிக பயம் உண்டாகி தண்ணீராவது கொடுத்து களையாற்ற தண் ணீரைத் தேடி ஓடிப் பார்த்தாள், ஒரு துளியும் சமீபத்தில் கிடைத்த தில்லை. சகாயத்துக்காக உரத்த சத்தமிட்டுப் பார்த்தாள், ஒருவரும் கிட்டினதில்லை. கிட்ட இருந்த பரம்பின்மேல் ஏறிப்பார்த்தபோது காட்டுக்குள்ளே பழுத்த தானிய வயல்களால் சூழப்பட்ட ஒரு குடி யானவன் வீடு ஒன்று இருந்ததாகத் தோன்றவே, தன்னால் கூடின துரிதமாய் இறங்கி ஓடி மூச்சுவாங்க அந்த வீட்டண்டை சேர்ந்து கண்ணீரோடும் தாழ்ந்த சத்தத்தோடும் தன் தகப்பனுக்காக அவளுக்கு நேரிட்டதைச்சொல்லி மன்றாடினாள். குடியானவனும் அவன் பெண்சாதியும் தர்ம சிந்தையுள்ள விருத்தாப்பியர் ஆனதால் மேரியி னுடைய பரிதாபக் கோலத்தைப் பார்த்து அவர்கள் மனதுருகி குதிரை ஒன்றை வண்டியில் பூட்டி அதில் மெத்தை சமுக்காளம் முதலியதைப் போட்டு கூசாவில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு காடிபோட்டில் ஒன்று எடுத்துக்கொண்டு விருத்தாப்பிய ஜேம்ஸண்டைக்கு ஓட்டிக் கொண்டுபோனார்கள். மேரியோ வண்டிப்பாதை சுற்றாய் இருந்த

Koviloor Acadamy

தால் தண்ணீரையும் காடியையும் எடுத்துக்கொண்டு குறுக்குப்பாதையாய் ஓடி, தகப்பனண்டை வந்தபோது அவன் சோர்வு தெளிந்து எழுந்து தனக்காகக் கவலைகொண்டிருக்கக் கண்டு தண்ணீரைக் கொடுத்து அவனை ஆறுதல்படுத்திக்கொண்டிருக்கையில் வண்டியும் வந்து சேர்ந்தது. அதில் அவர்கள் அவனை ஏற்றிக்கொண்டுபோய்த் தங்கள் வீட்டுக்குப் பின்னால் இருந்த ஒரு சிறு வீட்டிலே இறக்கி அதில் படுக்கை முதலானதை ஆயத்தஞ்செய்து பின்னும் அவனுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து அவனைப் போஷித்தபோது, அவன் பெலன் அவனுக்குத் திரும்ப, அவன் சுகப்பட்டான். பால், வெண்ணெய், முட்டை, கோழி, புறு முதலானவைகளை அவனுக்குக் கொடுத்து அவனைப் பட்சமாய்ப் பார்த்தார்கள். அவர்கள் வருஷத்துக்கு ஒரு முறை கூடுகிற சந்தைக்குப்போய்த் தங்களுக்கு வேண்டியதை வாங்கிவருவது வழக்கமாய் இருந்தது. இந்தத் தடவையோ அவர்கள் ஜேம்ஸுக்கு வேண்டிய மருந்து, உவைன் முதலியதை வாங்கிவந்து கொடுத்தார்கள். இந்த நன்மைத்தனங்களுக்குப் பிரதி நன்றிவந்தனம் சொல்லும்படியான வார்த்தைகள் இன்னதென்று மேரி அறியாமல் கர்த்தரை நோக்கி, தங்களுக்கு நேரிட்ட கொடிய ஆபத்தில் இப்படிப்பட்ட பட்சமும் தயாள சிந்தையுமுள்ள தர்ம இஷ்டரைக் கட்டளையிட்டதற்காக ஸ்தோத்திரித்து, அவர்கள் தங்களுக்குச் செய்யும் நன்மைகளுக்கெல்லாம் ஆயிரமடங்காக பதிற் பலன் அளிக்கவேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருப்பாள். மேரி தன் தகப்பனை விட்டு அக்கம்பக்கம் விலகாமல் இருந்தாலும் அவள் வீண்நேரம் போக்கினதில்லை. தகப்பனுக்காக வேண்டியவைகளை எல்லாம் செய்துமுடித்தபின் குடியானவன் பெண்சாதிக்காக தையல், பின்னல் முதலிய வேலைகளை நடப்பித்துவந்தாள். குடியானவன் பெண்சாதி இவள் சுறுசுறுப்பையும் இவளால் உண்டாகும் பிரயோசனத்தையும் பார்த்து இவள்பேரில் மிகப் பிரீதிகொண்டாள். ஜேம்ஸ் என்பவனும் பெலனடைந்து எழுந்தபோது அவனும் குடியானவன் பெண்சாதிக்காக முந்த ஒரு நல்ல கூடையை முடைந்து கொடுத்தான். அந்தக் கூடையின் மூடியில் சிவப்பு நிறந்தீர்ந்த அலரிமிலாறினால் அவள் பேரையும் அது செய்யப்பட்ட தேதியையும் கூடையின் பக்கங்களில் பலநிறமான மிலாறுகளால் மரங்கள் சூழ்ந்த ஒரு வீட்டின் படத்தைப்போலும் செய்திருந்தான். இது குடியானவன் பெண்சாதிக்கு மிகுந்த பிரியத்தைக் கொடுத்தது.

ஜேம்ஸ் முற்றும் சுகப்பட்டபின் ஒருநாள், 'நாங்கள் உங்களுக்கு அநேகநாளாய்ப் பாரமாய் இருக்கிறோம். இனி நாங்கள் எங்கேயாவது வேலைசெய்து உழைக்கப்போகிறோம்' என்றான். குடியானவன் அவன் கையைப் பிடித்துக்கொண்டு பட்சமாய்ச் சொன்னது: 'நாங்கள்

Koviloor Acadamy

உமக்கு எவ்விதத்திலும் யாதொரு இடறலை உண்டுபண்ணவில்லையே, ஏன் எங்களை விட்டுப்போக விரும்புகிறீர்? இது எனக்கு மெத்த வருத்தமாய் இருக்கிறது' என்றான். அவன் பெண்சாதி இதைக் கேட்டமாத்திரத்தில் அழுதாள். ஏனெனில் மேரி அவளுக்கு ஒரு மகளைப்போல் இருந்தாள். அவள் சொன்னது: 'மாரிகாலம் சமீபிக்கிறது. நீங்கள் எங்களைவிட்டுப் போய் மறுபடியும் அவதிக்குள் ஆகப் பார்க்கிறீர்களோ?' என்றாள். ஜேம்ஸ் சொன்னது: 'நாங்கள் உங்களுக்குத் தொந்தரவும் பாரமுமாய் இருக்கிறோம் என்பதினாலே ஒழிய வேறில்லை' என்றான். குடியானவன், 'நீங்கள் எங்களுக்கு என்ன தொந்தரவு கொடுக்கிறீர்கள்? உங்களுக்குத் தனிமையான வீடு இருக்கிறது, நீங்கள் எங்களுக்குச் செய்கிறவேலை நாங்கள் உங்களுக்குக் கொடுக்கிறதற்கு அதிகமாகவே இருக்கிறது' என்றான். ஆம், அவன் பெண்சாதி சொன்னது: 'மேரியின் பின்னலும் தையலும் நீங்கள் எங்களுக்குக் கொடுக்கிற செலவைவிட அதிகமாய் இருக்கிறதே. கூடைசெய்யும் வேலையை நடப்பித்தால் உங்களுக்குப் பணம் கிடைக்கும். நீர் செய்து கொடுத்த கூடையை நான் களத்தண்டைக்குக் கொண்டுபோனபோது அதைப் பார்த்த எல்லாரும் இதைப்போல் ஒன்று தங்களுக்கு வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். உங்களுக்கு வேலைதானே வேண்டும் என்று சொல்லுங்கள். நீங்கள் எத்தனை கூடைகளைச் செய்கிறீர்களோ அத்தனையும் உங்களுக்கு விலையாகும். எங்களுடனேதானே இருங்கள்' என்றாள். அவர்கள் இஷ்டத்தின் படியே அவர்கள் இடத்திலேயே இருந்தார்கள்.

நேசா! நீ இப்படி ஆதரவற்றவனாக விடப்படும்போது, நீ பிழைக்கும்படியான தொழில் ஏதாவது கற்றிருக்கிறாயா? மற்றவர்கள் உன் பேரில் பிரீதிகொள்ள அவர்களுக்கு யாதொரு பிரயோசனம் ஆவாயா? நீ இப்போது பிரயோசனமுள்ள ஜீவனம் பண்ணி வருகிறாயா? நீ ஒருவருக்கும் பிரயோசனமற்றவனானால் நீ போய்விட்டாலும் உனக்காகத் துக்கப்படுவார் இல்லை. நீ செத்தாலும் எண்ணமற்றுப்போவாய் என்பதை அறிந்து, மேரி ஜேம்ஸ் என்றவர்களைப்போல் கர்த்தர்பேரில் பக்தி விசுவாசமாய் இருந்து உனக்கும் உன்னை அடுத்தவர்களுக்கும் பிரயோசகனாய் இருக்கும்படி சோம்பேறியாய் அல்லது சுயப்பிரயோசகனாய்மட்டும் இராமல் சில பல தொழிலை முயற்சிசெய். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

Koviloor Academy

10. அதிகாரம்

ஜநநபூமியை விட்டுத் துரத்துண்டுவேந்த மேரி ஜேம்ஸ் என்பவர்களுடைய நிலைமை. ஜேம்ஸ் மரணமட்டும் பையின் பார்ம் என்ற இடத்திலேயே நிலைத்திருந்த விவரம்

ஜேம்ஸ் மேரி என்றவர்கள் தங்களுக்குக் குடியானவர்களால் கொடுக்கப்பட்ட சிறுவீட்டில் இருந்துகொண்டு மெத்த சுறுசுறுப்பாய் வேலைசெய்து தங்களுக்கு அவசியம் வேண்டிய சாமான்களைச் சேகரம் பண்ணிக்கொண்டு நியாயமாய் அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டியவைகளை அன்றி மற்றொன்றிலும் குடியானவர்களைப் பாரப்படுத்தாதிருந்தார்கள். மேரி தன் சொந்த வீட்டைப்போல் இந்தச் சிறுவீட்டைச் சிங்காரித்துவைத்தாள். ஜேம்ஸ் கூடைகளைப் பின்னும் வேலையில் இருக்கும்போது மேரி தையல்வேலைகளை நடப்பித்துக்கொண்டு இருந்தாள். மாரிகால அந்திவேளைகளில் ஜேம்ஸ் குடியானவனுடைய நெருப்பண்டை குளிர்காய்ந்துகொண்டு இருக்கிறவர்களுக்கு நல்ல சரித்திரங்களைச் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்துவான்.

குடியானவனுடைய பையின் பார்ம் என்ற இடத்தண்டையில் கவனத்தாட்சியினால் பாழாய்க்கிடந்த ஒரு பெரிய கனிவர்க்கத் தோட்டம் இருந்தது. குடியானவனும் அவன் பெண்சாதியும் தோட்டவேலை அறியாதவர்களாதலால் இந்தத் தோட்டத்தைக் கவனியாமல் வயல்களிலுள்ள வேலைகளையே பார்த்துவந்தார்கள். ஜேம்ஸும் அவன் மகளும் அதைக் கவனித்து, சீர்திருத்தவேண்டியவைகளைச் சீர்திருத்தி, தோட்டத்தைப் புதுப்பித்து, அதில் ரோட்டுகளை உண்டாக்கி, சரள் பரப்பி, பக்கங்களில் பாத்திகளை ஒழுங்காய்ச் செய்து, அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்து விதைகள் கிழங்குகளை வாங்கிவந்து பாத்திகளில் விதைத்து, தங்கள் சொந்த ஊரில் இருந்த தோட்டத்தைப்போல் ஆக்கினார்கள். அழகிய பூஞ்செடிகளால் நிறைந்திருந்ததால் அந்த இடத்துக்கு அது மெத்த அலங்காரமாய் இருந்தது. கனிவிருட்சங்களையும் பக்குவப்படுத்தவே முன் அவ்வூரார் பார்த்திராத அவ்வளவு திரளான கனிகளைத் தந்தன. கர்த்தருடைய ஆசீர்வாதம் அவன் தோட்டவேலைகளில் எல்லாம் இருந்தது. பார்வோன் அரமனை யோசேப்பு இருந்தகாலத்தில் எப்படிச் செழித்திருந்ததோ அப்படியே கர்த்தருடைய இந்தப் பிள்ளைகளும் குடியானவன் வீட்டுக்கும் இருந்தார்கள். தன்னைச் சுற்றிலும் இருந்தவைகள் எல்லாம் செழித்து இருந்ததைப் பார்த்துச் சந்தோஷித்து தன் முந்தினகாலம் வந்திருக்

Koviloor Acadamy

கிறது என்று எண்ணினான்; இப்போதும் தன் மகளைப் புஷ்பங்களைக்கொண்டே போதித்துவந்தான். அவன் மேரியுடனே, 'இத்தனை சஞ்சலங்கள், இளைப்புகள், சோர்வுகள், அலையுதல்களுக்குப் பிறகு இத்தனை இளைப்பாற்றியான இடம் இந்த நடுக்காட்டில் நமக்குக் கிடைக்கும் என்று யார் நம்பக்கூடியதாய் இருந்தது. கர்த்தரை நம்பு, எந்த நிலைமையிலும் எவ்வளவு நிர்ப்பந்தமாய்க் காணப்பட்டாலும் பிறகு அத்தனைக்கு ஆசீர்வாதம் என்பதை இந்தத் திருஷ்டாந்தத்தால் அறிந்துகொள்' என்று சொன்னான்.

ஒருநாள் ஜேம்ஸ் பண்படுத்தப்பட்ட நிலத்தில் விரையூன்றிக் கொண்டிருக்கையில் மேரி பின்னும் சில பாத்திகளில் களைபிடுங்கிக் கொண்டு இருந்தாள். அதை அவன் பார்த்து, 'நமது சுபாவ இருதயமும் இப்படித்தான் களைகளாகிய பாவங்கள் நிறைந்ததாக இருக்கிறது. நாம் எப்போதும் இந்தக் களைகளைப் பிடுங்கிப்போட பிரயாசப்பட்டு ஆவியின் விதைகளை விதைத்து அது கனிதரும்படியாய் நமது தோட்டத்தில் இருப்பவைகளுக்கு எப்படி மழை, பனி முதலியவைகள் வேண்டியதோ அப்படியே கர்த்தர் தமது ஆவியின் மழையை எப்போதும் நமது உள்ளத்தில் பெய்யச்செய்ய அவர் கிருபைகளுக்காக மன்றாட ஓயாதிருக்கவேண்டும்' என்றான்.

மேலும் ஒருமுறை தோட்டத்தில் பயிர்செய்யப்படாமலே வெகு காலமாய்த் தரிசாய்க் கிடந்த நிலத்தை வெட்டித் தோண்டி கட்டிகளை உடைத்துப் பண்படுத்திக் கனிதரும் நிலமாக்கினான். இதின்பேரில் ஜேம்ஸ் சொன்னது: 'மகளே, இப்படித்தான், வெகு காலம் கர்த்தரை நினையாமல் அவரை அசட்டை பண்ணின இருதயமும் இருக்கிறது. அதைத் துன்பம் என்னும் ஏரினால் உழுது, கர்த்தருடைய வசனம் என்னும் சம்மட்டியால் அழுத்திப் பாவக் கட்டிகளை உடைத்துச் சீர்ப்படுத்தவேண்டும். கனிதரும் மரங்கள் கனிகொடாதிருக்கும்போது அவைகளை எப்படிக் கிளை நறுக்கிக் காயப்படுத்தி, சுற்றிக்கொத்தி எருப்போட்டு கனிகளைத் திரும்பத் தர பக்குவப்படுத்துகிறோமோ அப்படியே ஆவியின் கனிகளைக் கொடாத இருதயமும் துன்பம், வியாதி, வறுமை முதலியவைகளால் அசைவுண்டு நொறுக்கப்பட்டு கனிதரும் இருதயமாக்கப்படவேண்டும்' என்று இப்படிப் பலவாறாய்த் தன் மகளைப் பழையபடி போதித்துவந்தான். இப்படிப் பையின் பார்ம் (Pine Farm) என்ற இடத்தின் குடியானவன் வளவிலே மூன்று வருஷங்களாக அமைதலாய்க் காலங்கழித்து வருகையில் ஜேம்ஸ் பலவீனப்பட்டு வியாதிக்குள்ளானான். அது இலையுதிர்கிற காலமாய் இருந்தது. அவர்கள் தோட்டத்தில் செடிகளும் மரங்களும் எல்லாம் மொட்டையாகவே நின்றன. இதை ஜேம்ஸ் தன் மகளுக்

Koviloor Acadamy

குக் குறிப்பாய்க் காட்டிச் சொன்னதாவது: 'இப்போது எல்லாம் கனியற்று வெறுமையாய் இருக்கிறதைப் பார்க்கிறாயே; அப்படியே நானும் உனக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனம் அற்றவனாய்ப் போகுங் காலம் சமீபிக்கிறது; என் மரணம் என்னைக் கிட்டிநிற்கிறது, குழி என்னை விழுங்க ஆவென்று தன் வாயைத் திறந்துகொண்டிருக்கிறது. நீ இவ்வுபத்திரவத்தைச் சகிக்க உன்னை ஆயத்தப்படுத்திக்கொள். ஆயினும் நீ விதைக்கிற விதை மண்ணிலே மறைந்து கெட்டுப்போனாற் போல் கண்டும் திரும்ப முளைத்து கனிதருவதுபோல, என் சரீரம் மண்ணில் அடக்கப்பட்டு உக்கிப்போனாலும் திரும்ப உயிர்க்கும் என்பதை 1 கொரிந்தியர் 15-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறதை நினைவுகூர். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் சரீரம் அழியாததாய் எழுந்திருக்கும்; கனவீனமாய் விதைக்கப்பட்டு மகிமையாய் எழுந்திருக்கும்; ஜீவனுள்ள சரீரம் விதைக்கப்படும், ஆவியான சரீரம் எழுந்திருக்கும்; இப்படி என் சரீரம் மண்ணுக்குள் வைக்கப்படுங்காலம் தூரத்தில் இல்லை. என் பிரியமுள்ள மகளே, விசனப்படாதே. மரணம் மோட்சத்துக்குப் போகும் வாசல்; நித்திய ஜீவனுக்குக் கொண்டு போகும் வழி; அழியாமைக்கு ஆயத்தம்பண்ணும் மார்க்கம். நமது இரட்சகர் மரணத்தையும் குழிபாதாளத்தையும் ஜெயங்கொண்டு வெற்றி சிறந்திருக்கிறார். நாம் அப்போஸ்தலனோடுகூட 'மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே' என்று கம்பீரமாய்க் கூவி, நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று ஆர்ப்பரிப்போமாக!

மேரி இந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் துக்கம் அவள் இருதயத்தை நிரப்பிற்று. அவள், தன் தகப்பனுக்கு மகிமையான மாறுதலும் தனக்குச் சொல்லிமுடியாத சஞ்சலமுமான மரணத்துக்குத் தன்னை ஆறுதல்படுத்துகிறாள் என்று அறிந்தும், அந்நினைவு தன் அன்றாடக அலுவலுக்கு இடைஞ்சலாகாதபடிக்கு அதைத் தன் இருதயத்துக்குள் வரவொட்டாதிருந்தாள்.

நேசா! மரணம் உனக்கு எப்போது வரும் என்று உனக்குத் தெரியுமா? நீ அதற்கு ஆயத்தமாய் இருக்கிறாயா? மரணம் எனக்கு எப்போதாவது வரட்டும் என்ற தேறின சந்தோஷ நிலைமையில் இருக்கிறாயா? அல்லது மரணம் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் திடுக்கிடுகிறாயா? எப்படி இருந்தாலும் நீ சீக்கிரம் வெட்டுண்டு விழுவாய் என்பதை அறிந்துகொள்.

Koviloor Acadamy

11. அதிகாரம்

மேரியின் தகப்பனுக்கு உண்டான வியாதி மரணத்துக்கு ஆயத்தப்படுதல்

மழைகாலம் மிகவும் கடுமையாய் இருந்தது. நிலம் எல்லாம் உறைந்த பனியால் மூடப்பட்டிருந்தது. ஜேம்ஸ் என்பவன் மிகவும் வியாதிப்பட்டான். குடியானவன் பனிவண்டியின்மேல் ஏறிப்போய் வைத்தியனை அழைத்துவந்தான். வைத்தியன் ஜேம்ஸைப் பார்த்து அவனுக்கு மருந்து முறைகளைச் சொல்லிப்போகையில் மேரி அவனை, தன் தகப்பன் மோசமான நிலைமையில் இருக்கிறாரா என்று கேட்க, வைத்தியன், 'இப்போது சமீபத்தில் மோசம் ஒன்றும் இல்லை; ஆனால் க்ஷயரோகம் உண்டாய் இருக்கிறபடியால் அவன் விருத்தாப்பிய வயதுக்குச் சுகப்படுவான் என்ற நம்பிக்கை இல்லை' என்றான். இதை மேரி கேட்டபோது அது அவளைத் துக்கப்படுத்தியும், தகப்பன் தன்னைப் பார்க்கையில் விசனத்தினால் வியாதி அதிகரிக்கும் என்று பயந்து தன்னை அடக்கிக்கொண்டு, கண்ணீரினால் அல்ல, அவனுக்காக வேண்டிய ஆறுதல்களைத் தேடி அவனுக்கு ஏற்றபடி பாகம்பண்ணி, வேளா வேளைக்கு ஒழுங்காயும் கவனமாயும் கொடுத்து, அவனுக்குச் சவுக்கியமானபடி படுக்கை முதலியதைப் போட்டுக்கொடுத்து அண்டையிலேயே இருந்துகொண்டு, அவன் பார்வையைக்கொண்டே அவனுக்கு வேண்டியவைகளை நடப்பித்து, இராக்காலங்களில் அவன் தலையணையண்டையிலே விழித்துக்கொண்டே இருப்பாள். பட்டப்பகலில் சும்மா இருக்கும் வேளைகளில் அவனுக்கு வேண்டியவைகளைச் சவதரிக்கும்படியான பணம் கிடைக்க வேலையும் செய்வாள். அவனுக்கு ஆறுதலாக கர்த்தருடைய வசனத்தையும் வாசிப்பாள். விசேஷமாக அவனுக்காகக் கண்ணீர்விட்டு ஜெபம்பண்ணிக்கொண்டே திரிவாள். அவன் தூங்கும்போது அவன் பக்கமாய் இருந்து ஜெபம்பண்ணிக்கொண்டும் அழுதுகொண்டும் இருப்பாள். அவள் பண்ணின ஜெபமாவது: 'என் தகப்பனைக் காப்பாற்றும் கர்த்தாவே, எனக்காக இன்னும் கொஞ்சகாலத்துக்குக் காப்பாற்றிக்கொடும், ஆகிலும் என் சித்தம் அல்ல உமது சித்தம் ஆகக்கடவது' என்பதே.

ஜேம்ஸ், கொஞ்சம் சுகப்பட்டதுபோல் காணப்பட்டது, ஆனால் நீடித்ததாய் இருந்ததில்லை. அவன் தன் மரணம் தனக்குச் சமீபமாய் இருக்கிறதென்பதை அறிந்து தன்னை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்படைத்தான். தன் மகளுக்கும் அதைச் சொன்னபோது அவள் தன்னால் அந்த வார்த்தைகளைச் சகிக்கக்கூடாமல் தகப்பனுடனே

Koviloor Acadamy

சொன்னது: 'உம்மை நான் இழந்துபோகும் காரியத்தைச் சொல்லாதேயும்; அந்த நினைப்பு என்னைக் கஸ்திக்குள் ஆக்குகிறது. பூமியிலே உம்மைவிட எனக்கு வேறே ஆதரவில்லையே!' என்றாள். அதற்குத் தகப்பன், 'கிறிஸ்தவர்கள் நம்பிக்கையற்ற அக்கியானிகளைப்போல துக்கப்படக்கூடாது. எனக்கோ மரணம் மகிமையான மாறுதலைக் கொடுக்கிறது, உனக்கோ என் பிரிய பிள்ளையே, தகப்பனற்றவர்களுக்குத் தகப்பனாய் இருப்போம் என்று வாக்குத்தத்தம் பண்ணினவரை வைத்துப்போகிறேன். அவர் சொன்னது: உன் தகப்பனற்ற பிள்ளைகளை விட்டுவிடு, நாம் அவர்களை உயிரோடே காப்போம் என்றார். பூமிக்குரிய தகப்பனை இழந்தால் பரலோகத்தில் உனக்குத் தகப்பன் இருக்கிறார். பூமிக்குரிய உன் நிலைமையைக் குறித்து நான் கவலைப்படவே இல்லை. கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளைப் போஷிக்கிறவர் உன்னைப் போஷிக்கமாட்டாரா? வெளியின் புல்லை உடுத்துகிறவர் உன்னை உடுத்தாதிருப்பாரோ? சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ நன்மையும் குறைவுபடாது (சங். 34: 10). நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதேயுங்கள். ஆனால் முந்த கர்த்தருடைய ராஜ்யத்தையும் அவர் நீதியையும் தேடுங்கள்; மற்றவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று உரைத்திருக்கிறார் (மத். 6: 31–33). ஆதலால் பிள்ளையே அவரை முந்தித் தேடு, அதுவே உன் தின ஜெபமாய் இருக்கட்டும். அப்போது சத்துருக்கள் நடுவிலும் நீ பயமற்றிருப்பாய். இம்மட்டும் நீ என் அடைக்கலத்தில் இருந்து அநேக சோதனைகளுக்கெல்லாம் தப்பித்துக்கொண்டாய். நான் உன்னை விட்டுப் போனபிறகு அநேகரைப்போல் உள்ளும் புறம்புமான சோதனைகளுக்கு உட்படுவாய். பிசாசு, லோகம், மாமிசமே உன் பிரதான சத்துருக்கள். உன் சுய புத்தியின்மேல் சாராமல் கர்த்தரையே முழு நம்பிக்கையாய் நம்பியிரு. உன் வழிகளில் எல்லாம் அவரை அறிந்துகொள்; அவர் உன்னை நடத்துவார் (நீதி. 3: 5, 6). கர்த்தராகிய தேவன் என்னை நடத்தின என் ஜீவகாலத்தின் சம்பவங்களை எல்லாம் நான் சிந்தித்து, அவர் எனக்குச் செய்துவந்திருக்கிற உபகாரங்களுக்கெல்லாம் அவரை ஸ்தோத்திரிக்கிறேன். எனக்குத் துன்பமாய் இருந்தவைகள் எல்லாவற்றிற்காகவும் அவரை நமஸ்கரிக்கிறேன். ஏனெனில் சம்பத்துச் சிலவேளைகளில் சாபமாகவும் ஆபத்து ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. நான் ஒருகாலத்தில் உலகம் இன்பம் என்று சொல்லி அதை அதிகமாய் அனுபவித்துப் பரீட்சித்திருக்கிறேன். நான் கவுண்ட் பிரபுவோடு யாத்திரை பண்ணினபோது உலகம் இச்சிக்கிற எல்லா இன்ப சம்பவங்களையும் அனுபவித்தேன். உலகத்தார் விரும்புகிற எல்லாச் செல்வங்களையும் ஆண்டு அனுபவித்

Koviloor Acadamy

தேன். அவை எல்லாம் எனக்கு மெய்ச்சந்தோஷத்தைக் கொடுத்த தில்லை. எனது முந்தின தோட்டத்தில் நான் கர்த்தரோடு சஞ்சரித்த ஒருமணி நேரத்தின் இன்பம் அவைகள் ஒன்றிலாகிலும் இருந்ததில்லை. என் பிரிய பிள்ளையே, கர்த்தரிடத்திலேயே அன்றி வேறெங்கும் இன்பம் அகப்படாது. அந்த விலையேறப்பெற்ற முத்தைக் கண்டடையப் பிரயாசப்படு. நான் துன்பங்கள் இல்லாமல் ஜீவனம்பண்ணினதில்லை என்பதை அறிவாய். அந்தத் துன்பங்கள் கர்த்தருடைய இரக்கத்தினாலும் சிநேகத்தினாலும் எனக்கு நன்மையாக வரவிடப்பட்டது என்பதற்காக அவரை ஸ்தோத்திரிக்கிறேன். கர்த்தர் தாம் சிநேகிக்கிற மகனை எல்லாம் அடிக்கிறார். உன் தாயார் இறந்து போனபோது நான் மெத்த சஞ்சலப்பட்டேன், என் ஆத்துமா எனக்குள் ஓட்டைப்போல் காய்ந்துபோய்விட்டது. அதற்கப்புறம் எனக்கு இந்தக் காலங்களில் அதை நினைக்க நினைக்க ஆறுதலை உண்டுபண்ணிற்று. அதினால் பின்னும் அதிகமாய் நான் பூமியின் காரியங்களை மறந்து மேலோக வாழ்வின்மேல் என் நம்பிக்கையை வைக்க ஏதுவாயிற்று. நாம் நமக்கு நேரிடும் துன்பங்களைத் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தால் தீமையானவைகளில் இருந்தே நன்மை அதிகமாய் உண்டாகிறதென்று பார்க்கலாம். நான் அன்று தினம் பசியினால் களைத்து விழுந்ததை நீ நினைக்கிறாயா? அந்த ஒருநாளின் துன்பத்தினின்றே சென்ற மூன்று வருஷங்களின் நன்மைகள் தோன்றின. நம்மைத், தங்கள் அடைக்கலத்தில் ஏற்றுக்கொண்ட இந்த உபகார சிந்தையுள்ள ஜனத்தண்டைக்கு நம்மைக் கொண்டுவந்தது அந்நாளின் துன்பமே. நீ திருட்டுச் சுமத்தப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது நமது துன்பம் அதிகமாய் இருந்தது; அந்தத் துன்பம் நான் நினைக்கிறபடி கர்த்தர் உனக்குச் செய்ய தீர்மானித்திருக்கிற இரக்கங்களினிமித்தமே. சீமாட்டியின் மகளுடைய தயவையும் அவள் ஈவையும் பெற்றுக்கொண்ட நீ அநேக சோதனைகளுக்குட்படவேண்டியதாய் இருந்திருக்கும்; அல்லது தண்டனை யாவும் இப்போது சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் கண்டாலும் பிறகு நீதியின் சமாதானக் கனிகளைக் கொடுக்கும் (எபி. 12: 11) என்ற சத்திய வேதத்தின் உண்மையைக் காண்பிக்கும் வேறொரு திருஷ்டாந்தமாய் இருக்கிறது. உனக்குண்டான அந்தத் துன்பம் ஒருவேளை உன் மாசற்ற தன்மையை வெளிப்படுத்தி திரும்பச் சீமாட்டியின் தயவையும் சிநேகத்தையும் உண்டுபண்ணவே சம்பவித்திருக்கலாம். யாருக்குத் தெரியும்? அப்படிக்கில்லாதிருந்து அதிக துன்பத்திற்கிடமானாலும் பயப்படாதே. கத்தியானது புண்ணை ஆழமாய்க் காயப்படுத்தினாலும் அது உன்னைச் சிநேகித்து உனக்காகத் தமது ஜீவனை விட்டுவிட்ட உன் இரட்சகரின் கரத்தில் இருக்கிறதென்பதை நினைத்துக்கொள்.

Koviloor Academy

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஞானமும் சாமர்த்தியமுமுள்ள வைத்தியர், அவர் சுகத்தை அளிக்குமட்டும் கத்தியைக் கையாடுவாரே ஒழிய வீணுய்ச் சஞ்சலப்படுத்தமாட்டார். கர்த்தருக்குக் காத்திரு; தைரியமாய் இரு. உன் இருதயத்தைத் திடப்படுத்துவார்; கர்த்தருக்கே காத்திருவென்று நான் உனக்குச் சொல்லுகிறேன் (சங். 27: 13, 14) என்ருன்.

மேலும் என் மரணமும் உன்னை இப்போது அதிகமாய்க் கஸ்திக்குள் ஆக்கும். ஆனுல் அது நீ இப்போது அறியாத ஒரு நன்மைக்கென்றே இருக்கும் என்று நினை. மரணம் இவ்வுலகத் தோட்டத்திலிருந்து நம்மை மேலான தோட்டத்தில் நாட்டுகிறதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் மரணம் பயங்கரத்தை அல்ல, சொல்லமுடியாத ஆனந்தக் களிப்பைக் கொடுக்கிறது. நாம் இங்கே பூத்து மாறி கனிதந்து தீய்ந்துபோன முதுமையான செடிகளுக்கு ஒப்பாய் இருந்தாலும் கர்த்தர் நம்மை இவ்வுலகத்திலிருந்து பிடுங்கி மேலோகத்தில் நடும்போது கண்காணுததும், காதுகேளாததும் மனிதருடைய இருதயத்துக்குள் எருததுமான நன்மைகளை நாம் அனுபவிக்கிறவர்களாய் இருக்கிருேம் (1 கொரி. 2: 9). ஒரு காரியத்தை நாம் அறிவோம்; அவர் காணப்படும்போது நாம் அவரைப்போல் இருப்போம். ஏனெனில் அவர் இருக்கிற பிரகாரமாக அவரைக் காண்போம் (1 யோவா. 3: 2). நமது ஜீவனுகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடு கூட மகிமையில் வெளிப்படுவோம். இதெல்லாம் பாக்கியத்தின் தொகுப்பல்லவா? நான் எடுபட்டுப்போகுங்காலம் சமீபித்து வருவதைக்குறித்துத் துக்கிக்காதே. நான் என் இரட்சகரண்டைக்குப் போகிறேன். என்னை நீ இங்கே வைத்துக்கொள்ள விரும்பாதே. நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருந்தால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்குப் பாத்திரமானதுகள் அல்ல. ஒரு நிமிஷமட்டும் இருக்கும் நமது லேசான உபத்திரவங்கள் நமக்கு மேலுக்கு மேலான நித்திய மகிமையை உண்டுபண்ணும் என்று தகப்பனுன ஜேம்ஸ் என்பவன் இப்படிப் பலவிதமாய்த் தன் மகள் மேரியைத் திடப்படுத்தித் தன் மரணகாலத்தில் ஆறுதல் அடையச் செய்தான். தனக்குப் பேசக்கூடியபோதெல்லாம்இப்படியேமேரியை ஆற்றித் தேற்றிவந்தான். அவன் பேசின ஒவ்வொரு வார்த்தைகளும் அவள் இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்து அவன் கண்ணீரால் நனைக்கப்பட்டது. கண்ணீருடனே விதைக்கிறவர்கள் களிப்புடனே அறுப்பார்கள்.

இதை வாசிக்கிற நேசா! நீ உன் மரணத்துக்குச் சமீபமாய் இருக்கிருய் என்று வைத்துக்கொள்; நீ இப்படி உன்னைச் சூழ இருக்கிற உன் பெண்சாதி, பிள்ளைகள், சிநேகிதர்களைப் பார்த்து இப்படிப்பட்ட

Koviloor Acadamy

இன்பமான வார்த்தைகளால் ஆற்றித் தேற்றுவாயா? நீ இவ்வுலகை விட்டு மறுமைக்குட்பட ஜேம்ஸைப்போல ஆசையுள்ளவனாய் இருக்கிறாயா? அப்படியானால் நீ ராஜ கிரீடத்தில் பதிக்கப்படும் நூற்றில் ஒரு முத்து. இல்லையானால் உன்னைப்போல் நிர்ப்பந்தன் இவ்வுலகத்தில் இல்லை என்று நினைத்துக்கொள்.

12. அதிகாரம்

மேரியின் தகப்பன் ஜேம்ஸ் என்பவனுடைய மரணம். மேரிக்குண்டான மிகக் கடுமையான துன்பம்

மேரி என்பவள் தன் தகப்பன் சாவுக்கேதுவான நிலைமையில் இருக்கிறான் என்று அறிந்து எர்லென் பிரீனென் என்ற ஊரில் இருந்த குருவண்டைக்குப் போய் அவரைத் தன் தகப்பனை வந்து பார்க்கும்படியாய்க் கேட்டுக்கொண்டாள். பக்தியும் கனவானுமான அந்தப் போதகர் அடிக்கடி ஜேம்ஸை வந்து பார்த்து அவனோடு சம்பாஷித்துக்கொண்டு வந்தார். அவர் சந்திப்பும் ஜெபமும் மேரிக்கு மெத்த ஆறுதலைக் கொடுத்தது. ஒரு சாயந்தரம் போதகர் ஜேம்ஸண்டை வந்தபோது அவன் அதிக பலவீனம் அடைந்திருந்ததைக் கண்டு அவனோடு தனிமையாய் வெகுநேரம் இருந்து போனார். அவர் போனபின் ஜேம்ஸ் தன் மகளுக்குச் சொன்னது: 'நான் இனிக் கோவிலுக்குப் போகிறதற்குச் சக்தியற்றவனாய் இருக்கிறேன், நாளைய தினம் நமது நல்ல போதகர் கையினால் தேவநற்கருணை வாங்குவேன் என்று நம்பியிருக்கிறேன்' என்றான். மேரி இதின்பேரில் ஆலோசித்து அவன் இனிச் சுகப்படும் நம்பிக்கை இல்லை என்றெண்ணி அதிக துக்கத்தை அடைந்து, தகப்பனுக்கு வருத்தம் உண்டாகாதபடி அதை வெளிக்காட்டாதிருந்தாள். ஜேம்ஸ் அந்த நாளில் கொஞ்சம் பேசி முழுமையும் தனி ஜெபத்திலே இருந்தான்; மறுநாள் போதகர் வந்தார். ஒரு சிறு சபை ஜேம்ஸ் அறையில் கூடிற்று. கமக்காரனும் அவன் பெண்சாதியும் வேலைசெய்கிற ஜனங்களில் சிலரும் அங்கே இருந்தார்கள். போதகர் நடத்திய ஆராதனைப் பிரசங்கத்தினால் அவர்கள் எல்லாருக்குள்ளும் அசைவுண்டாகி பயபக்தி அடைந்தார்கள். மேரியோ ஆறுதலையும் திடனையும் பெற்றாள். மேரி எவ்வளவாய்க் கவலைப்பட்டு தகப்பனுக்காக வேண்டியவைகளை நடப்பித்துவந்தாலும் விருத்தாப்பியன் நாளுக்குநாள் பலவீனப்பட்டுப்போனான். கமக்காரனும் அவன் பெண்சாதியும் அடிக்கடி அவனைப் போய்ப் பார்த்து அவனுக்காக வேண்டியவைகளை நடப்பித்து வந்ததும் அல்லாமல் மேரிக்கு ஒத்தாசையாக இராக்காலங்களிலும் அவளோடு விழித்திருந்

Koviloor Acadamy

தார்கள். மேரி அவர்களைத் தன் தகப்பன் சுகப்படும் நம்பிக்கை உண்டோ என்று கேட்பாள்; அவளுக்கு மறைத்தே செய்தி சொல்லி வந்தார்கள். கடைசியாக அவளை வஞ்சித்து வருகிறது நல்லதல்ல என்றெண்ணி, 'ஜீவன் இருக்கும்வரையில் நம்பிக்கை உண்டு, ஆனால் உன் தகப்பன் இந்த மரங்களைத் துளிர்த்ததாகவும் பூத்ததாகவும் திரும்பக் காணமாட்டார் என்று நினைக்கிறேன்' என்று கமக்காரன் பெண்சாதி சொன்னாள். அந்நேரம் முதற்கொண்டு இலை துளிர்க்குங்காலத்துக்குச் சந்தோஷமாய்க் காத்திருக்கிறவள் அதைப் பார்க்க மெத்த பயமடைந்தவள் ஆனாள். இந்த வசந்தகாலத்தின் குறிகள் எல்லாம் அவள் தகப்பனின் மரணத்தை அறிவிக்கிறதுபோல் இருந்தது. ஒருநாள் காற்றுக்காகத் தன் அறையின் ஜன்னலைத் திறந்தபோது எல்லாம் துளிர்க்கிறதாகவும் பூக்கிறதாகவும் கண்டு சொன்னது: 'எல்லாம் நவமான ஜீவன் அடையுதே, எல்லாம் சந்தோஷம் சொலிக்கிறதாய் இருக்கிறதே, என் தகப்பன்தானு திரும்பச் சுகப்பட்டு ஜீவன் அடையக்கூடாத நிலைமைக்கு வரவேண்டும்' என்று மேரி புலம்பினாள். அவள் இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது அவள் மனம் அவளுக்குள் துடிப்படைந்தது. ஏனெனில் அவள் அவைகளைத் தன் தகப்பன் போதித்திருந்த போதனைக்கு விரோதமான வார்த்தைகளாக எண்ணி கர்த்தரை நோக்கி: 'கர்த்தாவே, உமக்குச் சித்தமானதை அனுப்பும்' என்று தனக்குள் ஜெபித்தபின் சமாதானம் அவளுக்கு உண்டாயிற்று. அவள் சொன்னது: 'என் தகப்பனும் சீக்கிரத்தில் நவமான ஜீவனுடன் எழுந்திருப்பாரானால் இவ்வுலகில் அல்ல, அவர் தனது பழங்கந்தைகளை ஒதுங்க வைத்துப்போட்டு அழியாத உடையைத் தரித்துக்கொள்ளப்போகிறார். திடமும் உறுதியுமான திரைக்குள்ளான நங்கூரத்தில் தமது நம்பிக்கையை வைத்திருக்கிறார். புதிய ஜீவனுக்கும் மகிமைக்குமாக எழுந்திருக்க அவர் இயேசுவில் நித்திரை அடையப்போகிறார். அவருக்கு மெய்யான ஜீவனின் உதிப்பு ஆரம்பிக்கப்போகிறது' என்றான். ஜேம்ஸ் அவள் உரத்த சத்தமாய் வாசிக்கிறதைக் கேட்டு சந்தோஷித்தான். அவள் உணர்வுள்ள இருதயத்தோடு வாசித்தாள். வியாதியின் படுக்கையில் இருக்கிறவர்களுக்கு இது எவ்வளவு அவசியமான காரியமாய் இருக்கிறது. எத்தனை கொஞ்சமானவர்கள் மேரியின் தன்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இது எல்லா ஸ்திரீகளுக்கும் இருக்கவேண்டிய இலட்சணமே. ஏனெனில் அவர்கள் தவறாமல் ஒருநாள் தாங்கள் சாகக்கொடுக்கிற புருஷன் முதலிய உறவினரின் வியாதியின் படுக்கை அண்டையிலும் மரண அவஸ்தைப்படுகிறவர்கள் கிட்டவும் இருக்கவேண்டியதாய் இருக்கிறதே. ஒரு இராத்திரி மேரி தன் தகப்பன் பக்கத்தில் அமைதியாய் உட்கார்ந்திருந்தாள். சந்திரன் பிரகாசமாய்த் தன் கிரணங்களை வீசினதினாலே விளக்கு நிறுத்தப்

Koviloor Academy

பட்டிருந்தது. அவள் தகப்பன் சற்றுநேரம் தூங்கி விழித்து அவளைத் தன்னண்டைக்கு அழைத்து 'என் பிள்ளையே, நமது கர்த்தர் தமது சீஷப் பிள்ளைகளோடு பண்ணின கடைசி ஜெபத்தை எனக்கு வாசி' எனவே, விளக்கைக் கொளுத்தி யோவான் சுவிசேஷத்தின் பதினேழாம் அதிகாரத்தை வாசித்தாள். அவன் அப்போது, 'என்னைத் தூக்கிவை, சத்திய வேதாகமத்தை என்னண்டை கொண்டுவா' என்று சொல்லவே, அப்படியே செய்து விளக்கைச் சமீபத்தில் வைத்தாள். நான் உனக்காக கடைசியாய் ஜெபிக்கும் என் கடைசி ஜெபத்தைக் கவனி என்று சொல்லி வேதாகமத்தில் ஒரு வாக்கியத்தைத் தொட்டுக் காட்டி நடுக்கச் சத்தத்தோடு ஜெபித்ததாவது: 'என் கர்த்தரும் இரட்சகருமானவரே, நான் இந்த உலகை விட்டுவர என்னை அழைக்கிறீர், நான் என் ஒரே பிள்ளையைத் தனிமையாய் விட்டு வருகிறேன். ஆனால் அவளைத் தனிமையாய் விடாமல் அவளோடு கூடவே இரும். ஆ என் இரட்சகரே, நான் உம்மண்டைக்கு வந்து நீர் இருக்கிற இடத்தில் நானும் இருக்க என்னை அழைக்கிறீரே, என் பிள்ளையைக் காப்பாற்றியருளும். நான் அவளை இவ்வுலகிலிருந்து எடுத்துக்கொள்ள உம்மைக் கேட்கவில்லை; அதை உமக்குச் சித்தமான காலத்தில் செய்வீர். அவளை இவ்வுலகின் பொல்லாங்குகளுக்கெல்லாம் விலக்கிக் காப்பாற்ற உம்மைப் பஞ்சரித்துக் கெஞ்சுகிறேன். அவளை உமது சத்தியத்தில் காப்பாற்றும், உமது வேதமே சத்தியம். நீர் இம்மட்டும் என் கவலைக்கு ஒப்புவித்திருந்தீர். அவளை இப்போ உமக்கே பலியாகும்படி தத்தம்பண்ணுகிறேன். இம்மட்டும் அப்படியே பிரயாசப்பட்டு வந்தேன். நாங்கள் இப்போது பிரிந்துபோனாலும் மறுமையில் உமது பத்திராசனத்துக்கு முன்பாக மறுபடியும் ஒன்றாய்க் கூடி என்றென்றைக்கும் உம்மண்டையில் இருக்கவும் உமது மகிமையைப் பார்க்கவும் கிருபை அளியும் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தமே ஆமென்' என்பதே. மேரி விம்மலும் செருமலுமான சத்தத்தோடு ஆமென் என்றாள். ஜெபம்பண்ணி முடிந்தபின்னும் ஜேம்ஸ் தன் மகளுக்கு, 'நாம் திரும்பவும் ஒருவரையொருவர் கண்டு சந்தித்து நமது கர்த்தராகிய இயேசுவை அவர் ராஜ்யத்தில் காண்போம். தமது பிள்ளைகளுக்காக ஆயத்தப்படுத்தி இருக்கிற மேலான வாசஸ்தலங்களில் துக்கம் இல்லை, சஞ்சலம் இல்லை, பிரிந்துபோவதும் இல்லை. கர்த்தர் அவர்கள் கண்களிலிருந்து எல்லாக் கண்ணீரையும் துடைப்பார். அங்கே மரணமாவது, துன்பமாவது, அலறுதலாவது இல்லை. அங்கே இரவில்லை, கர்த்தருடைய மகிமையே அதின் வெளிச்சம். ஆட்டுக்குட்டியே அதின் விளக்கு' என்று சொன்னவுடனே இளைப்படைந்து தலையணையின்மேல் பின்னாகச் சாய்ந்தான். சிலநேரமாக அவன் பேசக்கூடாதிருந்தான். மேரி அவன் பக்கத்தில் அமைதி

Koviloor Academy

யாய் நின்ருள். வேதாகமப் புஸ்தகத்தை கையில் பிடித்தவனுகவே இருந்தான். அது இந்த கமக்காரனிடத்துக்கு வந்தபின்தான் மூந்திச் சேர்த்த பணத்தைக்கொண்டு வாங்கப்பட்ட புஸ்தகம். அதுவே அவனுடைய இடைவிடாத தோழனும் அவன் வியாதிக்கு ஆறுதலுமாய் இருந்தது. கொஞ்சநேரம் இளைப்பாறின பின் கொஞ்சம் பலமடைந்து, 'என் பிரிய பிள்ளையே, என் நீண்ட கால வியாதியில் நீ எனக்குப் பாராட்டின அன்புக்காகவும் செய்த அருமை பெருமைகளுக்காகவும் உனக்கு வந்தனம் சொல்லுகிறேன். நீ ஒரு எளிய தகப்பனுக்கொத்த பிள்ளை; கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக! நான் உன்னை அவர் விசாரிப்புக்கு ஒப்படைக்கிறேன். நான் உனக்கு இந்தப் புஸ்தகத்தையும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தையுமே அன்றி வேருென்றையும் ஆஸ்தியாக வைக்கவில்லை. கர்த்தரே உன்னை ஆதரிப்பார். நீ இதை உலகத்திலுள்ள எதையும் பார்க்க மேன்மையாய் எண்ணுவாய் என்று அறிவேன். இந்த வேதாகமப் புஸ்தகம் சொற்ப விலையுள்ளதாயினும் பொன்னையும் வெள்ளியையும் பாக்கிலும் அதிக விலையுள்ள பொக்கிஷம். ஏனெனில், அது கர்த்தருடைய வேதம். அதினுல் இரத்தினங்களைவிட மேலானதான பரமஞானத்தை அடைந்துகொள்ளலாம் (நீதி. 3: 13–18). உன் தகப்பனுகிய நான் உனக்குக் கடைசியாகக் கொடுக்கிற ஈவாக இந்தச் சத்திய வேதாகமப் புஸ்தகத்தை ஏற்றுக்கொள். அதை என் நினைவுகூருதலாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் வாசி. என்ன வேலை இருந்தாலும் ஒவ்வொரு நாளின் காலையிலும் அதில் கொஞ்சமாவது வாசிக்கத் தவருதே. உன் கைகள் நாள் முழுதும் வேலையாய் இருக்கும்போது அதில் ஒரு வாக்கியத்தை உன் ஞாபகத்தில் பதித்து அதை உன் வேலையில் எல்லாம் தியானித்துக்கொண்டே உன் வேலையைச் செய். உனக்கு அதில் ஒரு வாக்கியம் விளங்காதேபோனுல் அதை உனக்கு விளக்குவிக்கும்படிக்குக் கர்த்தர் தமது ஆவியை உனக்குத் தர அவரை வேண்டிக்கொள். அவரே, தமது வேதாகமத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்க உன் கண்களைத் திறப்பார். ஜெபத்தோடு படிக்கும் ஒவ்வொரு வசனமும் உனக்குப் பரம பொக்கிஷம், 'வெளியிலுள்ள லீலிபுஷ்பத்தைக் கவனித்துப் பாருங்கள்' என்கிற சில வார்த்தைகள் எனக்கு என் வாலிபத்தில் படித்த அநேக புஸ்தகங்கள் கொடுத்த அறிவைவிட அதிக அறிவைக் கற்றுக்கொடுத்தது. இந்தச் சில வார்த்தைகள் அநேக உபத்திரவங்களில் அகப்பட்டுக் கலங்கினபோது என்னைத் தேற்றரவுபண்ணி என் விசுவாசத்தை பலப்படுத்தி என் ஆத்துமாவுக்குச் சமாதானத்தை உண்டுபண்ணிற்று' என்று சொல்லி அசந்துபோய்க் காலை மூன்று மணிவரையில் அமைதியாய்ப் படுத்திருந்தான். அப்புறம் மெதுவாய், 'ஜன்னல் கதவைத்திற, மேரி' என, அப்படியே திறந்துவிட, துலாம்

Koviloor Acadamy

பரமாய்ப் பிரகாசித்த நட்சத்திரங்களைப் பார்த்து, 'எத்தனைப் பிரகாசமாய் இருக்கின்றன, மோட்சத்தின் மகிமைகளோடு இதை ஒத்துப் பார்க்கும்போது இது என்ன அற்பம்; அங்கேதான் நான் போகிறேன். ஆ, என்ன சந்தோஷம்! கர்த்தராகிய இயேசுவே வாரும், சீக்கிரமாய் வாரும்' என்று சொல்லித் தன் தலையைப் பின்னாகத் தலையணையின் மேல் சாய்த்து அமைதியாய்க் கர்த்தருக்குள் நித்திரையடைந்தான். மேரிக்கு அவன் இறந்துபோனான் என்பது தெரியாமல் இளைப்பாய் இருக்கிறான் என்று எண்ணி அவனை எழுப்பிப் பார்க்கச் சமீபித்த போது அவள் பயங்கரத்தால் பிடியுண்டாள். ஆத்துமா சரீரத்தை விட்டுப் பிரிந்தபோது இருந்த முகப்பார்வை முன் ஒருபோதும் அவனுக்கு இருந்ததில்லை. அது மேரிக்கு மறக்கக்கூடாத பார்வையாய் இருந்தது. அவள் வீட்டிலுள்ள ஜனங்களண்டைக்கு ஓடி தன் தகப்பனை வந்து பார்க்கும்படி அவர்களை எழுப்பினாள். கமக்காரன் பெண்சாதி வந்தவுடனே ஜேம்ஸ் கண்களை மூடினாள். மேரி தகப்பனை விட்டுப் போகாமல் அவன் மரித்துப்போனான் என்று அறிந்து, அவன் வெளிறின முகத்தை முத்திசெய்துகொண்டிருந்தாள். அவள் அப்புறம் சோபமடைந்ததினால் கமக்காரன் பெண்சாதி அவளைத் தன் அறைக்குள் கொண்டுபோய்த் தன் படுக்கையிலே படுக்கவைத்து, மற்றவர்கள் ஜேம்ஸுக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்துகொண்டிருக்கும்போதும் அவளை இவள் ஆறுதல்படுத்தியும் அழுதுகொண்டும் இருந்தாள். மேரிக்குச் சோபம் தெளிந்தபோது தன் தகப்பனண்டையிலேயே போய் இருந்துகொண்டு முன்போல் தகப்பன் தன்னைக் கூப்பிடுகிறாரோ என்று காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். தகப்பன் பிழைப்பான் என்று இத்தனைகாலம் இராவாய்ப் பகலாய்க் கண்விழித்து அலசடிப்பட்டுகொண்டிருந்த மேரியினுடைய மனவேதனை, கஸ்தி, சஞ்சலம் யாரால் விவரிக்கப்படக்கூடும்? புலம்புகிறவளும் தனித்து விடப்பட்டவளுமான அவளை யார் ஆறுதல்படுத்தக் கூடும்? மேரி என்பவளுக்குத் தகப்பன் கொடுத்த சத்தியவேதாகமத்தை வாசிப்பதில்மாத்திரம் அவளுக்கு ஆறுதல் உண்டாயிருந்தது. இந்தப் புஸ்தகத்தை அவள் கையில் வைத்துக்கொண்டு தன் தகப்பன் தன்னோடு பேசுகிறதுபோல் எண்ணினாள். அவள் தகப்பன் சவப்பெட்டியில் வைக்கப்பட்டபோது அவன் அதிகமாய்ப் பிரியப்பட்டிருந்த புஷ்பங்களை அவன்மேலே தூவினாள்.

அவள் தகப்பன் அடக்கம்பண்ணப்படுகிற நாள் அவளுக்கு மிகுந்த புலம்பலின் நாளாய் இருந்தது. அவள் துக்க உடையை உடுத்திக் கொண்டு துக்கமுகத்தோடு தகப்பன் க்ஷேமிக்கப்படப்போகிற குழிக்குச் சென்றாள். தனிமையாய் விடப்பட்ட அவளை எல்லாரும் பரிதாபமாய்ப் பார்த்தார்கள். ஜேம்ஸ் ஏர்லென் பிரீமென் என்ற

Koviloor Acadamy

ஊருக்கு அந்நியன் ஆனபடியால் அவனுக்குக் குழி கல்லறைத்தோட்டத்தின் மதிலண்டை வெட்டப்பட்டிருந்தது. அங்கே இரண்டு பெரிய மரங்கள் நிழலிட்டுக்கொண்டு இருந்தன. போதகர் குழியருகே நின்று, கோதுமைமணி நிலத்தில் விழுந்து மரித்தால் ஒழிய கனிதராது (யோவா. 12: 24) என்ற வாக்கியத்தின்பேரில் ஜனங்களுக்குப் பிரசங்கித்து, இந்த விருத்தாப்பியனும் இக்குழியில் விதைக்கப்பட்டு நித்திய ஜீவனுக்கென்று எழுந்திருப்பான். ஏனெனில் இவன் உத்தம விசுவாசி. இவன் நடத்தை சம்பாஷணையினாலும், மற்றவர்களுடைய ஞான நன்மைக்கென்று உழைத்ததினாலும் இவன் கர்த்தருக்கு உகந்தவனாய் இக்குழியில் அடக்கம்பண்ணப்படுகிறான். இவனுடைய நல்லாலோசனையினால் பிரயோசனப்பட்டவர்கள் தங்கள் நன்றியறிதலைத் தாய்தந்தையற்ற இவன் மகளுக்குத் தாங்கள் செய்யும் உபகாரத்தினால் காண்பிக்க ஏவிவிட்டு, தகப்பனற்றவர்களையும் விதவைகளையும் அவர்களுடைய உபத்திரவத்திலே கண்டு சந்திப்பது பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்த தெய்வபக்தியாய் இருக்கிறதென்பதை அவர்களுக்கு நினைப்பூட்டினார் (யாக். 1: 27).

மேரி அடிக்கடி தகப்பன் கல்லறையண்டைக்குப் போய் அங்கே அவன் தனக்குப் போதித்திருந்த புத்திமதிகளை நினைவுகூர்ந்து அவைகளைப் பின்பற்றி நடக்கும்படிக்கான பெலனைத் தரவேண்டும் என்று கர்த்தரை நோக்கி ஜெபித்துவருவாள். அந்தக் கல்லறைத் தோட்டம் அவளுக்குத் தியானத்துக்கேற்ற நல்ல இடமாய் இருந்தது. அங்கே புதைக்கப்பட்டவர்கள் எல்லாரும் தன் தகப்பனோடு கடைசி எக்காளத் தொனியைக் கேட்டு உயிரடைந்து எழுவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் ஊன்றிக் கட்டப்பட்டு இப்படித் தன் கர்த்தரின் வருகையைத் தியானிக்க அந்தக் கல்லறைத் தோட்டத்துக்கே போய் வருவாள்.

நேசா! உன் வீட்டிலும் இப்படி நடக்க ஏதுவானதுதானே. நீ இப்படி மேரியைப்போல் கல்லறைத்தோட்டத்துக்குப் போய் ஆறுதலடைய விரும்புகிறாயா? சாலொமோன் சொல்வதுபோல நீ கலியாண வீட்டுக்குப் போவதைவிட இழவு வீட்டுக்கும் மேரியோடுகூட சவக்குழியண்டைக்கும் போவாயானால் நீ மெத்த சீரடைய பரமஞானத்தைக் கற்றுக்கொள்வாய். நீ ஒவ்வொரு நாளின் முடிவிலும், வாரம், மாதம், வருஷத்தின் முடிவிலும் உன் ஜீவனின் சூரியன் அஸ்தமித்து நீ வேலைசெய்யக்கூடாத நெடும் இராக்காலம் வரும் என்று நினைத்து அன்றன்றும் உன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்து.

Koviloor Acadamy

13. அதிகாரம்

அதிக துக்கம். மேரிக்குச் சோதனையின்மேல் சோதனை உண்டானது

எல்லாம் முடிந்தபிறகு மேரி தன் தையல் வேலையைத் துவக்கினாள். ஆனால் அவள் தகப்பன் இருந்தபோது அவனுக்காக அவள் செய்துவந்த மனோற்சாகத்தைப்போல் இப்போது இல்லை. அவன் ஒவ்வொரு நாளும் அவளுக்குச் சொல்லிவந்த புத்திமதிகளும் அவன் அவளை நேசித்துவந்த நேசமும் அவனுடைய அன்பான ஓசையும் இப்போது இல்லாமல் போனபடியால், அவள் தனிமையாய் இருந்து தன் வேலைகளைச் செய்வதில் மனம் அசந்து போனாள். அவளைச் சுற்றிலும் இருந்த மரங்கள் செடிகள் எல்லாம் துக்க உடுப்பால் உடுத்தப்பட்டிருந்ததுபோல் அவளுக்குக் காணப்பட்டது. அவளுக்கு உண்டான இந்தப் பெரிய சோதனையின் மனோவியாகுலத்தை நீக்கி உற்சாகமான ஆவியை அவளில் உண்டாக்க அவளை எழுப்பிவிட வேண்டியதாய் இருந்தது.

அவளுடைய தகப்பனின் மரணத்துக்குப்பின் அவள் தங்கியிருந்த இடத்தில் எல்லாவற்றுக்கும் பெரிய மாறுதல் உண்டாயிற்று. சிலகாலமாய் வீட்டைவிட்டுப் போயிருந்த கமக்காரனின் மகனுக்கு விவாகம் நடந்தபின், அவனுடைய விருத்தாப்பிய பெற்றோர் தங்களைத் தங்கள் விருத்தாப்பிய காலத்தில் தாங்கள் இம்மட்டும் நடத்திவந்த குடித்தனக் கவலைகளுக்கெல்லாம் நீங்கலாக்கிக்கொண்டு, அமைச்சலாய்த் தங்கள் மீதியான காலத்தைக் கழிக்க வயல்வெளி முதலியவை முழுமையையும் தங்கள் மகனுக்கு அவன் தன்னால் ஆனமட்டும் தங்கள் இருவரையும் மரணமட்டும் போஷித்து தங்களுக்காக வேண்டியவைகளை எல்லாம் குறைவற நடத்திவரவேண்டும் என்ற உடன்படிக்கையின் பேரில் ஒப்புக்கொடுத்துப் போட்டார்கள். அவர்களுடைய புதிய மருமகள் அழகிய ரூபமுள்ளவளும் ஐசுவரியம் உடையவளுமாய் இருந்தும், நற்குண நற்செய்கைகள் அவளிடத்தில் லவலேசமும் காணப்படவில்லை. அவள் தன் அழகின்பேரில் பெருமைபாராட்டுகிறவளும் பணத்தின்மேல் ஆசையுள்ளவளுமாய் இருந்தாள். இந்த இரண்டு துர்க்குணங்களின் நிமித்தம் கடுகடுப்பான வார்த்தைகளை எதிலும் வசனிக்கிறவர்களாய் இருந்ததினால், அந்த வீட்டிலுள்ள ஒருவருக்காவது அவள் ஏற்றவளாய் இருந்ததில்லை. அவள் யாதொரு பிரமாணம் இல்லாதவளாய் இருந்ததால் அவள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல், அவள் புருஷனையும் அவன் பெற்றோர்களையும் அசட்டைசெய்துவந்தாள். அவள் புருஷன் தன் பெற்றோருக்குச் செய்

Koviloor Academy

கிறதாகப் பொருதிக்கொண்ட ஒன்றையும் அவள் அவர்களுக்குச் செய்யாமல் மனவெறுப்புடன் அவர்களுக்குக் கொடுக்கும் ஒரு வாய்க் கவளத்திற்காகவும் முறுமுறுப்பாள். இதினால் அந்த நல்ல விருத்தாப் பியர் தங்கள் மருமகளுடைய கொடுமையைப் பார்க்க விரும்பாமல், ஜேம்ஸ் என்பவன் இருந்த குடிசைக்குள் சற்று விலக்கமாய் வாசம் பண்ணப் போய்விட்டார்கள். அவள் தன் புருஷனை தான் கொண்டு வந்த பெரிய ஆஸ்தியின் நிமித்தம் ஒரு அடிமையாகப் பாவித்து நிர்ப்பந்தப்படுத்திவந்தாள். அவன் தன் பெற்றாரைச் சிநேகிக்கிறதை அவள் பொறுக்கக்கூடாமல் அவனை அவர்கள் இடத்திற்குப் போக வொட்டாதிருந்தாள். அவன் சிலவேளைகளில் அவள் அறியாமலே போய் அவர்களுக்குத் தான் படும் கஸ்திகளைச் சொல்லிவருவான்.

கமக்காரன் தன் மகனை ஒருமுறை நோக்கிச் சொன்னது: 'நாம் மூவரும் ஒரு பெரிய தப்பிதம் செய்தோம்; நீ அவள் அழகின் மாய் கையில் அகப்பட்டாய். உன் தாய் அவளுடைய பெரிய ஆஸ்தியின் பேரில் விருப்பமானாள். நானோ உங்கள் இருவருடைய சொல்லுக் கும் அப்போ மதியற்று இணங்கினேன். இந்த நமது புத்தியீனத்துக் காக இப்போது நாம் தண்டிக்கப்படுகிறோம். நாம் நமது நல்ல ஜேம்ஸ் என்பவனின் யோசனையை அப்போது கேளாதேபோனோம். அவன் இவளை விவாகம் பண்ணக்கூடாது என்றே தடைபண்ணினபோது, நீ 20,000 ரூபாய் நமக்கு ஒரு பெரிய ஆஸ்தி அல்லவா என்று சொன்னதை நினைவுகூரவில்லையா? அதற்கு அவன்: அந்த ஆஸ்தி யோடு நன்மையும் தொடர்ந்துவந்தாலே அல்லாமல் அது விரும்பப் படத்தக்கதல்ல. ஒரு நல்ல பெண்சாதியே ஒரு நல்ல பொக்கிஷம். அவளுக்கு ஒன்றும் இல்லாதேபோனாலும் அவளே இரத்தினங்களுக்கு மேல் விலை உயர்த்தியானவள் (நீதி. 31: 10) என்று சொன்னானே. பின்னும் அவன், உங்கள் மகன் கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு பெண் சாதியைத் தேடி விவாகம் பண்ணினாலே அல்லாது பணம் அவன் கழுத்துக்கு எந்திரக்கல் தூக்குண்ட பாரத்துக்கு ஒப்பாய் இருக்கும்; அதை அவன் அருவருக்கும்படியான அவ்வளவு வேதனை அடை வான். பணத்துக்காக ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? அது விரும்பப்படத்தக்க காரியம் அல்லவே. ஆகூருடைய ஜெபத்தை நினையுங்கள். அதாவது, மாயையையும் பொய்களையும் என்னைவிட்டு அகற்றும், தரித்திரத்தையாவது ஆஸ்தியையாவது கொடாதேயும், எனக்கு வேண்டியதைமட்டும் எனக்குக் கொடும் (நீதி. 30: 8) என் பதைத் தானே என்று இப்படிப் பலவிதமாய் நமக்கு யோசனை சொன் னானே. நீ என் மகனே, ஒருமுறை ஜேம்ஸோடனே, அவள் ராஜா வைப்போல் ரூபவதியாய் இருக்கிறாளே என்றபோது, அவன் ஆம், ரோஜாபுஷ்பம் அழகாய்மட்டும் அல்ல, மதுரமான வாசனையும்

Koviloor Acadamy

கொடுத்து மற்றும் சில பிரயோசனங்களையும் தருகிறதே. புஷ்பங்களிலிருந்து தேன், மெழுகு முதலியவைகளைப் பெறுகிறோமே. தெய்வபக்தியில்லாத அழகு யாதொரு பிரயோசனமாய் இராமல், பார்வைக்குமட்டும் அழகாய்த் தோன்றுகிற காகிதத்தால் செய்யப்பட்ட மலர்களுக்கு ஒப்பானது என்று உன்னையும் எச்சரித்தானே. அவன் புத்திகளைக் கேளாதேபோனபடியால் இப்போது இப்படி நமக்குச் சம்பவித்திருக்கிறது; ஆதலால் நாம் அவைகளைப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ள கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுவோமாக' என்றான்.

இவர்கள் காரியம் இப்படியிருக்கையில், அப்படிப்பட்ட கொடிய ஸ்திரீயின் கீழ் வைக்கப்பட்டிருந்த மேரியுடைய நிலைமை எவ்வளவு துயரமாய் இருக்கும்? கமக்காரனும் அவன் பெண்சாதியும் மேரியும் ஜேம்ஸூம் இருந்த குச்சுக்குள் வந்தபின், அநேக அறைகள் அவர்கள் வசத்தில் இருந்தும் மேரி மிகவும் நிர்ப்பந்தமான ஓர் இடத்தில் தங்கியிருந்தாள். அவளுடைய புது எஜமாட்டி மிகவும் இழிவான வேலைகளைச் செய்யும்படி உபாதித்து, அவளை அதிக கொடுமைப்படுத்தி வந்தாள். அவள் நடப்பிக்கும் எந்த வேலையிலும் குறைசொல்லித் திட்டுவாள். அவள் நிர்ப்பந்த ஸ்திதியை அறிந்த விருத்தாப்பியர் அவளுக்காகப் பரிதபிக்கமட்டும் கூடியதாய் இருந்தார்களே ஒழிய வேறே யாதொரு நன்மையும் அவர்களாலே செய்யக்கூடாதிருந்தது. அவள் ஏர்லென் பிரீனென் என்ற போதகர் அண்டைக்குப் போய், தன் நிர்ப்பந்த ஸ்திதியைச் சொன்னாள். அவர் 'மெய்தான் ஏழைப்பிள்ளையே, அந்த இடம் உனக்குத் தகுதியான வீடல்ல; நீ செய்யும் வயல்வெளிக்கு அடுத்த மட்டி வேலை உன் பெலத்துக்கு மிஞ்சினது. அது உன் சுகத்தைக் கெடுக்கும். நான் உனக்குத் தகுதியான ஒரு இடம் பார்க்கிறேன். அதுவரையில் உன் துன்பத்தை பொறுமையாய்ச் சகித்து, கர்த்தர் உனக்கு நல்ல நிலைமையைக் கட்டளையிடும்வரையில் அங்கேதானே அமர்ந்திரு. ஒரு நல்ல இடத்துக்கு உன்னைத் தகுதியாக்கின கர்த்தர் தமது காலத்தில் அதை உனக்கு வரவிடுவார். அவரை நம்பியிரு. உன் வழிகளைக் கர்த்தருக்குச் சாட்டிவிடு, அவரே அவைகளை நடத்துவார் (சங். 37: 5). உனக்காக நான் செய்யக்கூடியதெல்லாவற்றையும் செய்வேன் என்று நிச்சயித்திரு' என்றார். மேரி போதகர் புத்தியின்படி செய்கிறதாய் உறுதிசொல்லி, அவரை வணங்கிக்கொண்டு திரும்பினாள்.

ஏழை மேரிக்கு இந்நாட்களில் சமாதானத்தைக் கொடுத்த இடம் அவள் தகப்பன் கல்லறைதான். அதின்மேல் ஒரு ரோஜாச்செடியை நாட்டினாள். அந்தச் செடியை அவள் நடுகையில் இலையற்றதாய் இருந்தது. முள்ளே அன்றி வேறொன்றும் அதில் இல்லை. கொஞ்ச

Koviloor Academy

காலத்துக்குள் துளிர்த்து மொக்குவிட்டும் பூக்களைப் பூத்தது. இதை அவள் கவனித்தபோது தகப்பன் தனக்கு இதின்பேரில் போதாதிருந்த நல்ல போதனையை நினைவுகூர்ந்தாள். அவள் சொன்னது: 'இது என்னை உபாதிக்கும் முட்களின் காலம். ஒருவேளை, "காலம் ரோஜாபுஷ்பங்களை உண்டுபண்ணும்" என்னும் பழமொழியின் நிறை வேறுதலை நான் சீக்கிரம் காண்பேன்' என்றாள்.

இதை வாசிக்கிற நேசா! உனக்கு இருக்கிற காலம் இப்போது எப்படிப்பட்டது? மேரியைப்போல முட்களின் நடுவே உபத்திரவப் பட்டுக்கொண்டு இருக்கிறாயோ? அப்படியானால் அது நல்லதுதான். ஏனெனில், அது உன்னைச் சீர்ப்படுத்தி மேட்டிமைக்கு இடங்கொடா மல் தாழ்மையைப் படிப்பிக்கிறதும் அல்லாமல் கர்த்தரண்டைக்கும் அவர் உத்தம ஊழியரண்டைக்கும் உன்னை நடத்தும். இப்பூமியில் உன் நிலைமை எவ்வளவு நிர்ப்பந்தமாய் இருந்தாலும் தப்பாமல் மறு மையில் உன் சுதந்தரவீதத்தைக் கண்டுபிடிப்பாய். இங்கே வாதை யைச் சகித்தால் அங்கே கிரீடம் பெறுவாய். ஆகையால் மேரியுடனே எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகித்துச் சிலுவையை எடுத்துக் கொள்.

14. அதிகாரம்

மேரி என்பவள் திரும்பவும் இல்லிடம் அற்று அலைந்தது. மேரிக்கு உண்டான மேன்மைக்குத் துவக்கம்

மேரிக்குத் துக்கநாட்கள் முடிந்தன. அவள் தகப்பனின் ஜனன நாளாகிய ஜூலை மாதம் 25-ந் தேதியும் வந்தது. இது முந்தின வரு ஷங்களில் சம்பவித்தபோது மேரிக்கு ஒரு பெரிய சந்தோஷ நாளாய் இருந்தது. அவள் தகப்பனுக்கு மெத்த பிரமிப்பு உண்டாக்கத்தக்க அருமையான வேலைகளைப் பூக்களினால் செய்து அதை அந்த நாளின் காணிக்கையாகக் கொடுப்பாள். இப்போதோ அவன் பிறந்தநாளில் துக்கத்தை அன்றி வேறொன்றும் அவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்க ஏதுவில்லை. ஆனால் அந்த எர்லென் பிரீனென் ஊரிலுள்ள வழக்கத்தின்படி அந்த நாளில் புஷ்பங்களைத் தன் தகப்பன் கல்லறைக் குக் கொண்டுபோய் அலங்கரிக்க எத்தனித்து, தனக்கு உண்டான துன்பங்களுக்கெல்லாம் காரணமாகிய புஷ்பக்கூடையை எடுத்து நேர்த்தியான புஷ்பங்களால் அதை நிரப்பி, தகப்பன் கல்லறைக்குக் கொண்டுபோய் அதைக் கல்லறையின்மேல் வைத்துச் சொன்னது: 'நான் என் தகப்பனுக்கு ஞாபகக்குறியாக ஒரு தூணையாவது நிறுத்த திருவாகமில்லாமல் எனக்கு இருக்கிற இந்தப் புஷ்பக்கூடையைத்

Koviloor Acadamy

தான் அவர் கல்லறைக்கு ஞாபகக்குறியாக வைக்கிறேன்' என்றாள். அது அதிலேயே இருந்தது. அதை ஒருவரும் எடுத்து எறிந்ததில்லை. அந்தப் பேதைமை ஊரார் அந்த ஏழைப்பெண்ணின் நிலைமைக்காகப் பரிதபித்து, அவள் தகப்பன் கல்லறையின்மேல் வைத்துவிட்ட புஷ்பக்கூடையைப் பரிசுத்தப் பண்டமாக எண்ணினார்கள். இந்தத் துயர வருஷ ஜனனநாள் கழிந்தபின் வழக்கப்படி வேலை ஜனங்கள் தங்கள் வயல்வெளி வேலைகளுக்குப் போய்ச் சாயந்தரத்தில் தங்கள் இடத்துக்குத் திரும்பினபோது, தங்கள் எஜமாட்டி அதிக கோபமுகத்துடனே இருக்கக் கண்டார்கள். சலவைபண்ண வைக்கப்பட்டிருந்த ஒரு மெல்லிய புடவை காணாமல் போனதற்காக இவள் மூர்க்கவெறி கொண்டிருந்தாள். ஜேம்ஸ் என்பவன் உயிரோடிருந்த காலத்தில் மோதிரத்தைக் குறித்த சங்கதிகளைக் குடியானவனுக்கும் அவன் பெண்சாதிக்கும் சொல்லி இருந்தான். அதை அவர்கள் தங்கள் மகனுக்குச் சொல்லியிருந்தார்கள். அவன் அதைத் தன் பெண்சாதியாகிய இந்தக் கொடுஞ் சூரிக்குச் சொல்லி இருந்தான். அதின் பேரில் புடவை காணாமற்போன சமுசயம் இந்த ஏழைப்பெண்ணின் மேல் அவளுக்கு உண்டாய் இருந்தது. மேரி அந்நாளின் முரட்டு வேலைகளினால் தொய்ந்தவளாய்த் தன் எத்தனத்தைத் தோளில் வைத்துக்கொண்டு அந்திவேளையில் தன் இடத்துக்குத் திரும்பினபோது இந்தக் கொடுஞ்சூரி மூர்க்காவேஷங்கொண்டு அவளைத் திட்டி, 'நீ திருடின புடவையை எங்கே வைத்திருக்கிறாய்?' என்று கேட்க, அவள் திடுக்கிட்டும் சாந்தமாய், 'நான் மற்றக் கூலி ஜனங்களோடு நாள்முழுவதும் வயல்வெளி வேலையில் இருந்து வருகிறேனே, நான் எடுக்கக்கூடியது எப்படி? வேலையாட்கள் எல்லாம் வேலையின்மேல் கவனமாய் இருக்கும்போது வேறே யாராவது எடுத்துப்போய் இருப்பார்கள்' என்று உத்தரவுசொல்ல, கொடுஞ்சூரி, 'அப்படி அல்ல, நீதான் திருடி, நீ முந்தியே உன் திருட்டுத்தனத்துக்காகத் தண்டனை அடைந்திருந்தால் தூக்கப்பட்டிருப்பாய். நீ அதற்குத் தப்பிப்போனதால் இப்போது என் பொருளையும் திருட ஏவப்பட்டாய். சண்டாளச் சிறுக்கி, வெளியே போ; அரை நிமிஷம் இனி என் இருப்பின் நிழலிலே தங்கக்கூடாது; இப்பொழுதே வெளியே ஓடிப்போ' என்று துரத்தினாள். அவள் புருஷன் அவளுக்காகப் பரிதபித்து, 'இவள் எடுத்ததற்கு ருஜு இல்லையே; இருட்டிப்போன வேளையில் அவளைத் துரத்தாமல் நாள்முழுதும் அவள் நமக்காகக் கடினமாய் உழைத்திருக்கிறபடியால், இராத்திரிக்குமட்டுமாவது அவள் இங்கே தரித்திருந்து சாப்பிடட்டும்' என்றான். கொடுஞ்சூரி தன் புருஷனைக் கடினமாய்ப் பேசி, 'உன் வாயை மூடிக்கொண்டிரு' என்றாள். அவன் என் பெண்சாதியின் கீழ் அகப்பட்ட கோஜாவாய் இருந்தபடியால்,

Koviloor Academy

அதிகம் ஒன்றும் பேசாமல் பெட்டிப்பாம்புபோல் அடங்கிப்போனான். ஏனெனில், இவன் தன் பெண்சாதியைத் துவக்கமுதலே சரியாய் நடப்பிக்க வகை அறியாமல் அவள் அழகினாலும் பணத்தினாலும் மயக்கப்பட்டு அவள் அடிமையைப்போல் இருந்துவிட்டபடியால், அவள் இவனையும் ஒரு திரணமாய் எண்ணாமல் அசட்டைசெய்தாள்.

மேரி இனி ஒன்றும் காரியம் ஆகாதென்று எண்ணி வெளிப்புறப்பட எத்தனித்து, தனக்கு இருந்தவற்றை ஒரு சிறு மூட்டையாகக் கட்டிக்கொண்டு, விருத்தாப்பிய குடியானவர்களுக்குச் சொல்லிக்கொண்டு, அவர்கள் வழிக்குச் சகாயமாகக் கொஞ்சம் பணத்தைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு வெளியேறினாள். அப்போது அவர்கள் சொன்னது: 'பிள்ளையே, எங்களால் கூடுமானால் நாங்கள் உன்னை வைத்துக்கொள்ளுவோம்; ஆனால் கூடாதென்பது உனக்கு நன்றாய்த் தெரியும்; கர்த்தர் உன்னோடிருந்து உன்னை ஆசீர்வதிக்கக்கடவர்; அவர் உனக்குத் தகப்பன்; அவர் உன்னைக் கைவிடமாட்டார்; பாக்கியம் உனக்காக வைக்கப்பட்டிருக்கிறது' என்று வாழ்த்தி அனுப்பினார்கள். மேரி தன் சிறு மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு, கடைசியாய்த் தன் தகப்பன் கல்லறையைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று கோவில் தெருவழியே கோவிலை நோக்கிச் சென்றாள். அங்கே சேரவே நன்றாய் இருட்டிப்போயிற்று. இருட்டியும் அவள் பயப்படாமல் தன் தகப்பன் கல்லறையின்மேல் நெடுஞ்சாங்கிடையாய் விழுந்து மிகக் கசப்பாய் அழுது புலம்பினாள். காற்றடிக்கிற சத்தத்தை அன்றி வேறொரு சத்தமும் இல்லாமல் வெகு அமைச்சலாய் இருந்தது. அவள் புலம்பின புலம்பலாவது: 'ஆ என் தகப்பனே, என் தகப்பனே, உம்மைவிட்டுப் பிரிந்து எப்படிப் போவேன். நான் முந்தினமுறை வீடற்று திரிந்தபோது நீர் என்னோடுகூட இருந்ததால் சந்தோஷமாய் இருந்தேன்; இப்போது நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்? நான் காவல் அறையில் இருந்தபோதாவது நீர் என்னோடு இராதேபோனாலும் மறுபடியும் உம்மைப் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நீரும் எனக்காக ஜெபம்பண்ணி என்னைப் பார்க்கும் சமயம் எப்போது கிடைக்கும் என்று காத்திருந்தீர். ஆ, நான் உம்மைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடுமானால் என்ன பாக்கியம்! ஆ, நான் இப்படி நினைப்பது தப்பிதம். நான் இந்தத் துயர நிலைமையில் இருப்பதை நீர் உமது கண்ணால் காணாமல் இருப்பதற்காக நான் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டியது. எங்கே போவேன்? இந்த இரவைக் கழிக்க எங்கே எனக்கு ஜாண் இடம் அகப்படும்? ஊரிலுள்ள ஒருவருடைய வீட்டண்டை போனால் இந்த இராத்திரியில் இருந்த இடத்தைவிட்டுவர முகாந்தரத்தைக் கேட்டு என்னை ஏற்றுக்கொள்ளமாட்டார்களே. ஆ! கர்த்தாவே, என்

Koviloor Acadamy

மேல் இரங்கி இவ்வுலகில் இருந்து என்னை உம்மண்டைக்கு அழைத்துக்கொள்ளும்; அல்லது நான் படும் துன்பங்களில் எனக்குப் பொறுமையைத் தந்தருளும்' என்று புலம்பி தன்னைச் சுற்றிப் பார்த்தாள். ஈரத்தரைக்கு மேலாக உயர்த்திக் கட்டப்பட்டுப் பாசியால் மூடுண்டு இருந்த ஒரு கல்லறையைக் கண்டு, 'பொழுது விடியுமட்டும் இதின் பேரிலாவது உட்கார்ந்திருப்பேன்; கர்த்தர் எனக்கு அடைக்கலம். காலமே என் செய்திகள் எட்டாத ஊருக்குப் போய் வேலையைத் தேடிப்பார்ப்பேன்; ஒருவேளை இதுவே நான் என் தகப்பன் கல்லறையைப் பார்க்கும் கடைசிவிசையாய் இருக்கும்' என்று சொல்லிக்கொண்டாள்.

நேசா! நீ இப்படிப்பட்ட ஆபத்துகள் புசல்களில் அகப்பட்டவனாய் இருக்கிறாயோ? மேரியைப்போல் கல்லறையண்டைக்குப் போ. அங்கே நீ புத்தி கற்றுக்கொள்ளுவாய். அங்கே மண்ணில் புதைக்கப்பட்டிருக்கிற எத்தனையோ பேர் தங்கள் துன்பங்களைவிட்டு நீங்கி இயேசுவுக்குள் இளைப்பாறுகிறார்கள். 'திக்கற்றவனுக்கு தெய்வமே துணை' என்ற பழமொழிப்படி நீ உன் கடை இக்கட்டில் தொய்யாமல் எல்லாவற்றின் துவக்கமும் முடிவுமாகிய உன் கர்த்தரை உன் தஞ்சமாகப் பிடித்துக்கொள். அப்போது ஆங்காலத்தில் எல்லாம் நீங்கும்.

15. அதிகாரம்

ஆபத்தில் ஒத்தாசை. மேரிக்கு உண்டான கன மேன்மையான நிலைமைக்குத் துவக்கம்

மேரி என்பவள் கல்லறைச் சுவரின் பக்கமாய் இருந்த கல்லின் மேல் உட்கார்ந்து தன் கைகளால் முகத்தை மூடி கர்த்தரை நோக்கி தனக்கு இந்த ஆபத்துவேளைக்குச் சகாயம் கட்டளையிடவேண்டிக் கொண்டிருந்தாள். இத்தருணத்தில் 'மேரி, மேரி' என்று அழைத்த மெதுவான சத்தத்தைக் கேட்டதாக நினைத்தாள். உன் வேண்டுதலின் துவக்கத்தில் கட்டளை புறப்பட்டது என்ற வேத வாக்கியத்தின்படி மேரிக்கு இச்சமயத்தில் நடந்தது. இந்த நினைப்பின்பேரில் தன் கைகளை முகத்தைவிட்டு எடுத்துப் பார்த்தபோது நட்சத்திர வெளிச்சத்தில் வெண் உடையால் உடுத்தப்பட்ட ஒரு ரூபம் தன் கிட்ட நிற்கிறதாகக் கண்டு திடுக்கிட்டு அது ஆவேசமோ என்று பயந்தும், ஒருவேளை இத்தருணத்துக்குக் கர்த்தர் தனக்கு ஒத்தாசையாகத் தமது தூதனை அனுப்பினாரோ என்று சொல்லிக்கொள்ள, அதற்குப் பிரதியுத்தரமாக 'பிரியமுள்ள மேரிப் பெண்ணே! நான் தேவதூதன் அல்ல,

Koviloor Academy

நான் உன்னைப்போல் ஒரு மனுஷன்தான். உனக்குத் துணையாக இங்கு வந்தேன். கர்த்தர் உன் ஜெபத்தைக் கேட்டு என்னை உன்னண்டைக்கு அனுப்பினார். பெண்ணே, நீ என்னை அறியமாட்டாயோ? எமிலியா என்றவளை நீ நினைவுகூரவில்லையோ?' என்ற மெதுவான சத்தம் மறுபடியும் பிறக்க, மேரி அதற்கு, 'என் கனமுள்ள சீமாட்டி அவர்களே, இது தாங்கள்தானோ? தாங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? இந்த இருட்டு வேளையில் தனிமையாய்த் தங்கள் இருப்பிடத்திற்கு வெகு தொலைதூரமான இந்தக் கல்லறைத்தோட்டத்திற்கு வந்த காரணம் என்ன?' என்று கேட்க, எமிலியா வெகு உருக்க இரக்கத்தோடு அவளைக் கட்டி மினவிக்கொண்டு, கல்லின்மேல் உட்கார்ந்து மேரியைத் தன் பக்கத்தில் இருக்கச் செய்து சொன்னது: நான் சொல்லப்போகிறது பெரிய கதை, அதை நான் பின்னால் சொல்லுகிறேன்; இப்போதோ நான் உன்னைக் கண்டுபிடித்ததற்காக எவ்வளவு சந்தோஷப்படுகிறேன். நீ அநியாயமாய்க் குற்றம் சாட்டப்பட்டாய் என்று நாங்கள் எத்தனையாய் உனக்காக விசனப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உன் குற்றமற்ற தன்மையைக் காலஞ் சென்று கண்டுபிடித்தோம். ஐயோ! எத்தனைத் தீங்கானதை அறியாமல் உனக்கு உண்டுபண்ணினோம். நீ அந்தப் புஷ்பக் கூடையைக் கொண்டுவந்தபோது எவ்வளவு அற்ப உபகாரத்தைச் செய்தேன். நாங்கள் உனக்குச் செய்த அநியாயங்களை மன்னிப்பாயா? நாங்கள் எல்லாரும் உனக்குச் செய்த அநியாயத்தை நிவிர்த்தியாக்கிக்கொள்ளுகிறதற்கு எங்களால் கூடிய எல்லாவற்றையும் செய்ய மிக வாஞ்சையாய் இருக்கிறோம். நீ எங்களுக்கு மன்னிப்பாயா?' என்று கேட்க, மேரி சொன்னது: 'என்ன சீமாட்டி அவர்களே, தயவுசெய்து மன்னிப்பையாவது அநியாயத்தையாவது பற்றிப் பேசாதேயுங்கள். உங்கள்பேரில் குற்றம் என்ன? நீங்கள் எல்லாரும் நான் குற்றவாளிதான் என்று நம்பும்படியான ருஜு உண்டாய் இருந்ததல்லவோ? அப்போதும் தாங்கள் எனக்கு மெத்த தயவைக் காண்பித்தீர்களே, நான் இம்மட்டும் உங்கள்பேரில் விசனப்பட்டதே இல்லை. தங்கள் தயவை மாத்திரம் நினைத்துக்கொண்டே இருக்கிறேன். நான் கர்த்தரை நோக்கி என் குற்றமின்மையை வெளிப்படுத்தவேண்டும் என்று மிக்க கருத்தாய்க் கெஞ்சினேன். என் ஜெபம் கேட்கப்பட்டது. தாங்கள் என்னை இப்போது குற்றமற்றவள் என்று நம்புகிறீர்கள் அல்லவா? நான் பாக்கியவதிதான்' என்றாள். மேரியை எமிலியா திரும்பவும் முத்திசெய்து அவளுடைய சாந்தகுணத்துக்காகவும் மன்னிக்கும் இலட்சணத்துக்காகவும் அவளைப் புகழ்ந்து ஜேம்ஸுடைய கல்லறையின்மேல் கண் ஊன்றி 'ஐயோ! நாங்கள் நிவிர்த்தித்துக்கொள்ளக் கூடாத அநியாயம் இங்கே இருக்கிறதே. கனமுள்ள விருத்தாப்பிய

Koviloor Acadamy

மனுஷனே, உன்னை நாங்கள் குற்றமுள்ளவனைக் சமுசயப்பட்டு ஊரைவிட்டுத் துரத்தினோமே! உனது நீண்ட உண்மையான ஊழியம் உன்னை அப்படிப்பட்ட சமுசயத்திற்கு நீங்கலாக்கவேண்டி இருந்தது. நான் பிறந்தவுடனே படுத்து தூங்குகிறதற்கு நீ அல்லோ எனக்குத் தொட்டிலை செய்துகொடுத்தாய். நான் பிறந்த தினத்தைக் கொண்டாடின நாளில் எனக்கு ஈவாகக் கொடுக்கப்பட்ட இந்தப் புஷ்பக் கூடை, உன் கடைசி கைவேலை அல்லவோ? உன் முழு ஜீவகாலமும் எங்களுக்குச் செய்த ஊழியத்திலே போக்கப்பட்டதல்லவோ? அதற்கு நாங்கள் எப்படி உனக்குப் பதில் அளித்தோம்? சந்தேகத்தினாலும் அவநம்பிக்கையினாலும் நன்றிகெட்ட தனத்தினாலும் மாத்திரமே பதில் செலுத்தினோமே ஒழிய வேறில்லையே! நாங்கள் அப்படி அநியாயம் செய்யாதிருந்தால் நீ எங்களோடேயே இருந்து மரிப்பாயே! உன் ஏழைமகள் ஆகிய இந்த மேரிப்பெண்ணும் இவ்வளவு அவஸ்தைக்கு உள்ளாகமாட்டாளே! நாங்கள் உங்களைத் துன்பப்படுத்தி வைத்த வகையை நினைக்கும்போது என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. உன் தகப்பன் எங்களுக்கு மன்னித்தாரா? எங்களைப் பற்றி எப்போதாவது நீ அவரிடத்தில் பேசினாயா?' என்று மேரியைக் கேட்க, அவள் 'சீமாட்டி அவர்களே, என் தகப்பன் ஒருபோதும் உங்கள்பேரில் விசனப்பட்டதே இல்லை. அவர் ஐஸ்பர்க் என்ற ஊரில் இருந்தபோது உங்களுக்காக அவர் ஜெபம் பண்ணிவந்தது போல், அவர் மரணமட்டும் அப்படியே செய்துவந்தார். அவர், சீக்கிரத்தில் நமது குற்றமின்மை அவர்களுக்கு வெளியாகி, நம்மைத் திரும்பத் தங்களண்டைக்கு அழைத்துக்கொள்ளுவார்கள் என்றும், நான் அந்த நாளைக் காணக்கூடாதேபோனாலும், நீ சீமாட்டி அவர்கள் புத்திரிக்கு நான் எவ்வளவாய் அவர்களைச் சிநேகித்தேன் என்பதை அந்நாட்களில் சொல்லுவாய், அவர்கள் குழந்தையாய் இருக்கும் போது, நான் என் கைகளில் தூக்கிச் சுமந்தேன், அவர்களுடைய சிறந்த இலட்சணம் எனக்கு நன்றாய்த் தெரியும்; நமது குற்றமின்மை வெளிப்படும்போது, மெய்யாகவே அவர்கள் துயரப்படுவார்கள் என்றும் சொன்னார்' என்றாள். எமிலியா இந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் மனம் கசந்து அழுது 'ஆ, எவ்வளவு உத்தமமான விருத்தாப்பியன்; ஆ, நான் எவ்வளவாக அவரைக் கனிசமாக மதிக்கிறேன்' என்று சொல்லி முடித்து, 'இங்கே அவரது கல்லறை அண்டையில் நான் எப்படி இப்போது உனக்குச் சகாயமாகக் கர்த்தரால் அனுப்பப்பட்டேன் என்பதை உனக்குச் சொல்லுகிறேன் வா' என்றாள்.

நேசா! கவனித்தாயா? கடை இக்கட்டில் சகாயத்தைப் பார்த்தாயா? பொய்சொல்வதற்குக் கர்த்தர் ஒரு மனுஷன் அல்ல; அல்லது தாம் சொன்னதை மறுப்பதற்கு அவர் ஒரு மனுப்புத்திரனும் அல்ல

Koviloor Academy

என்பதை ஞாபகத்தில் வை. கர்த்தரைவிட இப்பூமியில் அவர் பிள்ளைகளுக்குக் கடை இக்கட்டில் சகாயர் யார்? அவர் கையில் இராயர் ராஜாக்களுடைய இருதயம் தண்ணீரைப்போல் வழிந்தோடுகிறது; ஆகையால் கர்த்தரைமட்டும் கடைப்பிடியாய்ப் பிடித்திரு.

16. அதிகாரம்

எமிலியா சடுதியாய்க் கல்லறையண்டைக் காணப்பட்ட வரலாறு. மேரிக்கு உண்டான சன மேன்மையான நிலைமைக்குக் காரணம்

எமிலியா என்ற சீமாட்டிப் புத்திரி சொன்னது: 'மெய்யாகவே, கர்த்தர் உன்னோடு இருக்கிறார். உனக்குச் சகாயம் வேண்டிய கடை இக்கட்டு நேரத்தில், என்னை உன்னண்டைக்குக் கொண்டுவந்து சேர்த்த சங்கதியைக் கவனித்தால், கர்த்தருடைய ஆச்சரியமான செயல், அவர் செய்கைகளில் எல்லாம் எவ்வளவு தெளிவாய் விளங்குகிறது. நீ குற்றமற்றவள் என்று நான் அறிந்துகொண்டதுமுதலே, உன்னைக் கண்டுபிடிக்க எவ்வளவு ஆசையாய்த் தேடினேன் என்பதை நான் சொல்லும் சங்கதியால் அறிந்துகொள்ளுவாய். என் தகப்பனும் உங்களைக் கண்டுபிடிக்க வெகு பாடுபட்டுத் தேடினார்.

சில தினங்களுக்குமுன், ராஜாவின் காடு கரைகளுக்கு விசாரணைக் கர்த்தாவாய் இருக்கிற என் தகப்பனார் இந்தப் பக்கங்களிலுள்ள காடுகளுக்குச் சில ஏற்பாடு செய்ய இந்த இடத்திற்கு வந்தார். அவர் இவைகளுக்குச் சம்பந்தமுள்ள வேறு இரண்டு கனவான்களோடு இக்காரியத்தில் அலுவலாய் இருந்தார். நாங்கள் வந்ததுமுதல் ராஜாவினுடைய வேட்டைக்காகக் கட்டப்பட்டு இருக்கிற கட்டிடங்களில் தங்கியிருக்கிறோம். மற்ற இரண்டு கனவான்களும் தங்கள் சீமாட்டிமாரோடு அங்கேதான் இருக்கிறார்கள். என் தாயார், அவர்களோடு காலம் போக்கிக்கொண்டு இருந்ததின்பேரில் குளிர்ச்சியான வேளையாய் இருந்ததால் ஊரைச் சுற்றிப் பார்த்து வர அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டேன். கொஞ்சதூரம் போய் அவ்விடத்திலுள்ள காட்சிகளைக் காண்பிக்கக் காட்டுக்காரனுடைய மகளையும் எனக்குத் துணையாக அனுப்பினார்கள். அவள் என்னை ஊருக்குள்ளே அழைத்துப்போகையில் கோவில் பக்கமாய்ச் சென்றேன். கல்லறைத் தோட்டத்தின் வாசற்படி திறந்திருக்கக் கண்டு, நான் கல்லறைகளிலுள்ள மேலெழுத்துக்களை வாசித்துப்பார்ப்பதில் கவனம் உடையவளானபடியால், காட்டுக்காரன் மகளோடு கல்லறைத் தோட்டத்துக்

Koviloor Acadamy

குள் போனேன். அப்போது அவள், 'இந்தக் கல்லறைகளிலே அதிகமாய்க் கவனிக்கப்படத்தக்கது எதென்றால், சிலகாலத்துக்குமுன் இறந்துபோன ஒரு ஏழை மனிதனுடைய கல்லறைதான். அதின் மேல் யாதொரு கட்டிடமும் இல்லை, எழுத்தும் இல்லை; ஆனால் அவன் மகள் மிக நேர்த்தியான புஷ்பக் கூடையினால் அதை அலங்கரித்திருக்கிறாள்; தாங்கள் அதைப் பார்க்க விரும்புகிறீர்களோ' என, பார்ப்போம், வா என்று அவள் பின்னே போனேன். அங்கே உங்களுக்குச் சம்பவித்த பாடுகளுக்கு எல்லாம் காரணமாய் இருந்த புஷ்பக் கூடையைக் கண்டு பிரமிப்படைந்து, என் சொந்தப் பெயரை அதில் பார்த்து, நான் பிறந்த நாளைக் கொண்டாடின தினத்தில் எனக்கு நீ வெகுமானமாகக் கொண்டுவந்தது இந்தப் புஷ்பக்கூடைதான் என்று நிச்சயித்துக்கொண்டு, என்னுடன் வந்தவளை உன்னையும் உன் தகப்பனையும் குறித்து அவள் அறிந்தது எல்லாவற்றையும் சொல்லக்கேட்டு, குருவானவரிடத்துக்குப் போனால் அதிகமாய் உன்னைப்பற்றி அறியலாம் என்று எண்ணி உடனே அவரிடம் போய் விசாரித்ததில், அந்தக் கனமுள்ள விருத்தாப்பியப் போதகர் உங்களைக் குறித்த சங்கதிகளை எல்லாம் சொல்லக்கேட்டு, நீ இருந்த இடத்திற்கு வர மனதானபோது, குரு அது தூரமாய் இருக்கிறதென்றும் அங்கே போகுமுன் இருட்டிப்போம் என்றும் சொல்ல, ஐயோ, நான் என்ன செய்வேன்? நாளை அதிகாலையில் புறப்பட்டுப் போகப் போகிறேமே என்று உரைக்க, குரு சங்கிரிஸ்தானை அழைப்பித்து, நீ கூடிய சீக்கிரத்தில் பையின் பார்ம் என்ற இடத்துக்குப்போய் மேரி என்ற பெண்ணைக் கையுடன் அழைத்துவா என, அவன், நான் அவ்வளவு தூரம் போகவேண்டியது இல்லை, சில நிமிஷத்துக்கு முன் கோவில் கடியாரத்திற்கு நான் சாவி கொடுக்கப் போனபோது அவள் கல்லறைத் தோட்டத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டேன்; அவள் தன் தகப்பன் கல்லறை அண்டையில் வழக்கம்போல் அழுதுகொண்டு இருப்பாள் என்றான். இதைக் கேட்டவுடனே தாமதியாமல் இவ்விடம் வரப் புறப்படவே போதகர் தாமும் கூட வருகிறதாகச் சொல்ல, நான் எங்களுடைய முதல் சந்திப்பு தனிமையாய் இருக்க விரும்புகிறேன். ஆனால் தாங்கள் என் பெற்றார் இடத்திற்குப் போய் நான் வெகுநேரமாய் வராமையால் அவர்கள் கவலைகொள்ளாதபடிக்கு நான் மேரிப்பெண்ணைக் கண்டுபிடித்தேன் என்று சொல்லுங்கள் என்று போதகரை வேண்டிக்கொள்ள, அவர் அப்படியே சம்மதித்துப் போக நான் இங்கே வந்தேன். ஓ! பிரியமுள்ள மேரிப்பெண்ணே, நான் எத்தனை சடுதியாய் உன்னண்டை காணப்பட்டேன். உங்களுக்கு எத்தனையோ பாடு கஷ்டங்களை வரப்பண்ணின இந்தப் புஷ்பக் கூடையே நாம் மறுபடியும் ஒருவரை ஒருவர் கண்டு சந்தித்துக்கொள்

Koviloor Academy

ளக் காரணம் ஆயிற்று' எனவே, மேரி தன் கைகளைக் குவித்துக் கண்களை வானத்துக்கு நேராய் உயர்த்திச் சொன்னது: 'ஆம், கர்த்தர் இதைத் தமது மிகுந்த கிருபையின்படியே செய்திருக்கிறார். அவர் என் ஜெபங்களைக் கேட்டு என் கண்ணீர்களைக் கண்டார். ஆ எவ்வளவு இரக்கமுள்ள ஆண்டவர்! கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு ஒத்தாசையாகத் தமது தூதர்களை அனுப்புகிறார் என்று வேதாகமம் சொல்லுகிறபடி உபத்திரவப்படுகிறவர்களைத் தேற்றரவு பண்ண தூதர்களை மனுஷ ரூபமாகவும் அனுப்புகிறார் என்று நினைக்கிறேன்' என்றாள்.

எமிலியா சொன்னது: 'அது சரி ஆயினும் நான் இப்போது தூதன் அல்ல. கர்த்தர் தமது இஷ்டப்படி எந்த ஏதுவையும் கையாடுவார். இதுவிஷயத்தில் நான் மேலும் கர்த்தரின் செயலை அறிந்து ஒரு காரியத்தை உனக்கு அறிவிக்கவேண்டும். அதென்னவெனில், மார்கரெட் என்பவளை நீ நினைவுகூருகிறாய் அல்லவா? அவள் தானே உன்பேரில் எரிப்படைந்து இல்லாத தீதுமொழியை உன்பேரில் புறங்கூறி உன்னை என் சிநேகத்தினின்று பிரிக்கப்பார்த்தாள். அவள் கொஞ்சக்காலம் வெற்றி சிறந்தவளைப்போல் காணப்பட்டுத் தன் பொல்லாப்பிலே மிஞ்சிப்போய், எங்கள் ஒருவருடைய உத்தரவும் இல்லாமல் புஷ்பக் கூடையை எடுத்து வந்து உன் கால்மாட்டில் எறிந்தாள். அதுமுதல் அவள் உன்னைத் தொலைத்துப்போட்டதாக எண்ணினாள். ஆனாலோ அவள் எரிச்சலுக்குக் காரணமாகிய இந்தப் புஷ்பக் கூடையே நாம் திரும்பக் கூடிக்கொள்ளும்படிக்கான ஏதுவாகும்படி கர்த்தர் தமது திருவுளத்தில் எண்ணங்கொண்டு இருந்தபடியால் அப்படி அவள் துணிவாய்ச் செய்ய நேரிட்டது. அவளுடைய அந்தத் துர்ச்செய்கையே நாம் இப்போது ஒருவரை ஒருவர் கண்டுகொள்ள ஏதுகரம் ஆயிற்று. புஷ்பக் கூடையை நான் கல்லறையின்மேல் காணவிட்டால் நாம் இத்தனை சமீபத்தில் இருந்தும் கண்டுகொள்ளக் கூடாதே போய்விடும்; கர்த்தர் பொல்லாதவர்களின் துர்ச்செய்கையைக்கொண்டே தமது பிள்ளைகளுக்கு நன்மையை உண்டுபண்ணுகிறார் என்பது இதினாலே தெளிவாகுது அல்லவா? மார்கரெட் என்பவளின் நெடுங்கால பொல்லாப்பு அவளைப் படிப்படியாய்த் தாழ்த்தி ஆக்கினைக்கு உள்ளாக்கிற்று. நான் இப்போது வேறொரு பக்தியுள்ள பெண்ணை அவளுக்குப் பதிலாக வைத்திருக்கிறேன். அவள் மூலமாய் நான் சத்தியத்தை அறிந்துகொள்ளவும் சத்திய வேதாகமத்தைச் சிநேகிக்கிறவளும் ஆனேன். இப்போது உன் தகப்பன் இருந்தால் உன்னை என் வசத்தில் ஒப்புவிக்க பயப்படமாட்டார்' என்று சொல்லி, 'நான் இந்நேரமாய் என் வர்த்தமானங்களை உனக்குச் சொன்னேனே. இப்போது நீ இந்தக் கல்லறை அண்டைக்கு இந்த இருட்டு நேரத்தில்

Koviloor Acadamy

வந்திருக்கும் காரணங்களைச் சொல்' என்று கேட்டாள். மேரி, அன்று சாயந்திரம் நடந்தவைகளையும் அதினால் அவள் அடைந்த இடுக்கண்களையும் சொன்னாள்.

எமிலியா, 'ஒகோ! கர்த்தருடைய செயலின் வேறொரு ஆச்சரியமான திருஷ்டாந்தரத்தைப் பார். உனது கடை இக்கட்டில் என்னை அனுப்பினார். அந்தப் பொல்லாத மனுஷி தன் கொடுமையால் இந் நேரத்தில் உன்னைத் துரத்திவிட்டதே நாம் திரும்பக்கூடிக்கொள்ள ஏதுவாயிற்று. நல்லது, நாம் இங்கே அதிக நேரம் தரித்திருக்கக் கூடாது. என் பெற்றோர் எனக்காகக் காத்திருப்பார்கள். மேரிப் பெண்ணே, நீ என்னோடுகூட வா, இனி நாம் மரிக்கும்மட்டும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவதில்லை' என்றாள். மேரி தன் தகப்பன் கல்லறையை இனி எப்போ பார்க்கக்கூடியதாய் இருக்குமோ என்ற எண்ணத்துடனே, கண் எடுத்துப் பார்த்தாள். அதை எமிலியா கவனித்து பட்சமாய்ச் சொன்னது: 'பெண்ணே, புஷ்பக்கூடையை எடுத்துவா, உன் தகப்பனுடைய ஞாபகக்குறியாக இதைப் பத்திரப் படுத்தி வைப்போம். நான் உன் தகப்பன் கல்லறையைக் கட்டி அதில் ஞாபகக் குறிக்கல் ஒன்றை நிறுத்திவைக்கிறேன். அது இந்தப் புஷ்பக் கூடையைப் பார்க்கிலும் நீடித்த குறியாய் நிற்கும். நீ இன்னம் கொஞ்சக்காலத்துக்குள் இவ்விடம் திரும்பி வரலாம் வா. நாம் நடந்து போகையில் மோதிரம் கண்டுபிடிக்கப்பட்ட விவரத்தைச் சொல்லுகிறேன்' என்றாள்.

சந்திரன் உதயமாயிற்று; அதின் இன்பமான வெளிச்சத்தில் இந்த இரண்டு பெண்பிள்ளைகளும் கல்லறைத்தோட்டத்தைவிட்டு வெளிப் பட்டார்கள். வாசற்படியிலே சீமாட்டிப் புத்திரியுடன் வந்த பெண் பிள்ளை சீமாட்டியால் அனுப்பப்பட்ட வேறொரு வேலைக்காரனோடு காத்திருந்தாள்.

நேசா! இதை வாசிக்கையில் உன் மனது எப்படி இருக்கிறது? தூங்கிக்கிடக்கிறதா, அல்லது இப்போதே என்ன ஆபத்து வந்தாலும் கர்த்தரையே கடைப்பிடியாய்ப் பிடித்துக்கொள்வேன் என்று உறுதிப் பாடு செய்ய உன்னை ஏவுகிறதா? 'அரமனை காத்தவன் வீண் போகான்' என்ற பழமொழிப்படி வானுதி தேவனின் அரமனையைக் காத்து இருக்கிறவர்கள் ஒருபோதும் வீண்போகார்கள். மேரியே இப்போது உனக்கு அத்தாட்சி. கண்ணைப் பிடுங்கிக் காட்டினாலும் கண்கட்டு வித்தை என்று நினைக்கிற பேர்களோ கடைசியில் அதிக ஆபத்துக்கு உள்ளாகி, விடுவிக்கும் சகாயர் இல்லாமல் கெட்டு அழிந்துபோவார்கள். ஆகையால் கைகண்ட இந்த ருஜுவை நீ கவனியாவிட்டால் கடினக்காவலுக்கு உட்படுவாய்.

Koviloor Academy

17. அதிகாரம்

மோதிரம் கண்டுபிடிக்கப்பட்ட விவரம்: மேரியினுடைய குற்றமின்மை வெளியானது

ஒரு பெரிய மரச்சோலையின் ஊடாக எமிலியாவும் மேரியும் நடந்துபோகையில் எமிலியா சொன்னது: 'போனவருஷம் என் தகப்பனூர் சில சோலியின் நிமித்தமாக ஐஸ்பர்க் என்ற ஊருக்குப் போனூர்கள். நாங்களும் கூடப்போய் இருந்தோம்; அப்போது குளிரும் புசலுமாய் இருந்தது. ஒரு ராத்திரி ஒரு பெருங்காற்று அடித்து நமது தோட்டத்தில் நின்ற ஒரு பெரிய முற்றின கனி மரத்தை அசைத்து ஒவ்வொரு நிமிஷத்திலும் விழுகிறதற்கு ஏதுவான நிலைமையில் விட்டுவிட்டது. அந்த மரத்தை நீயும் அறிந்திருக்கிறுய்; அது தானே அசுப்பிலே விழுந்து யாதொரு சேதத்தை அடுத்த கனி விருட்சங்களுக்கு உண்டுபண்ணுதபடிக்கு அதை வெட்டித் தள்ள உத்தரவுபண்ணினூர்கள். வேலைக்காரர் எல்லாரும் கூடிவந்து அது நிதானமான இடத்தில் விழும்படிக்கு எத்தனம்பண்ணினூர்கள். நானும் என் பெற்றூர் சகோதரர்களும் வெகுகால பிரயோஜனத்தைக் கொடுத்துவந்த ஒரு பெரிய விருத்தாப்பிய நேசன் கீழே விழத் தள்ளப்படுவதைப் பார்க்கப் போய் நின்றோம். மரம் கீழே தள்ளப்பட்ட மாத்திரத்தில் என் இரண்டு சிறிய சகோதரர் தங்களுக்கு எட்டாத உச்சத்தின் கிளைகளில் இருந்த 'மாக்பை' என்ற ஒரு பட்சியின் கூட்டை ஓடிப்போய் எடுத்தார்கள். அகுஸ்துஸ் என்ற ஒரு சகோதரன் ஆல்வ்ரெட் என்ற பின்னொரு சகோதரனைப் பார்த்து: இதென்ன, இந்தக் கூட்டின் குச்சிகளின் நடுவில் இத்தனை ஒளியாய்ப் பிரகாசிக்கிற பிரகாசம் என்னவென்று கூவினுன். ஆல்வ்ரெட் என்ற பிள்ளை: அது பொன்னைப்போலும் வச்சிரக்கல்லைப்போலும் ஒளிவிடுகிறது என்ருன். அப்போது அங்கே நின்றிருந்த மார்கரெட் என்ற தாதி இவர்கள் கூச்சலைக் கேட்ட மாத்திரத்தில் அதை ஓடிப் பார்த்து அது மோதிரம் மோதிரம் என்று உரக்கக்கூவினுள். இதை அவள் தான் முன் உனக்கு விரோதமாய்ச் சொன்ன பொய்ச்சாட்சியை மறந்தவளாய்க் கூவிச் செத்தவளைப்போல் நடுக்கத்தால் பிடியுண்டாள். இதற்குள்ளாக பிள்ளைகள் அதை எடுத்துப்போய் தாயிடத்தில் ஆனந்தக் கம்பீரத்தோடு கொடுத்தார்கள். நான் இழந்துபோன மோதிரம் இது தான், இதுதான் என்று சீமாட்டி சொல்லி, ஐயோ! கனவானுன ஜேம்ஸே, ஏழை மேரியே, எத்தனை துயரப்படத்தக்க அநீதியை உங்களுக்குச் செய்தோம். என் மோதிரத்தைக் கண்டுபிடித்ததற்கு நான் மெத்த சந்தோஷப்படுகிறேன்; ஆனூல், அந்த நல்ல தோட்டக்காரனை

Koviloor Acadamy

யும் அவன் மகளையும் இப்போ கண்டுபிடிக்கக்கூடுமானால் இதிலும் அதிகமாய்ச் சந்தோஷப்படுவேன். நாங்கள் உங்களுக்குச் செய்திருக்கிற அநியாயத்திற்கு இந்த மோதிரத்தைப்போல் பதின்மடங்கு உங்களுக்குக் கொடுத்து உங்களை உபசரிப்பேன் என்று சொல்லி, இந்த மோதிரம் உச்சியில் இருந்த பட்சிக்கூட்டுக்குள் போனது எப்படி என்று வினவ, நீங்கள் குற்றமற்றவர்கள் என்று ரூபிக்கும்படியான முகாந்தரம் வெளிப்பட்டதென்ற சந்தோஷ முகத்தோடு நின்ற காட்டுக்கார அந்தோனி என்பவன் சொன்னது: ஜேம்ஸாவது மேரியாவது அதில் கொண்டுபோய் ஒளித்துவைத்தார்கள் என்று நினைக்க ஏது வில்லை. ஏனெனில் மரம் மிகவும் உயர்ந்ததும் கிளைகள் மிக பலவீன முள்ளதுமாய் இருக்கிறது. இந்தச் சின்ன சீமான்களும் அந்தக் கூட்டை எடுக்கக் கூடியமட்டில் தொத்தித் தாவிப் பார்த்தார்கள்; காரியம் சாயவில்லை. 'மாக்பை' என்ற இந்தத் திருட்டுப் பட்சிகளே அந்த மோதிரத்தைத் திருடினது. ஏனெனில் அவைகள் மினுமினுப்பாய்த் தோன்றுகிற எந்தப் பொருளையும் எடுத்துக்கொண்டுபோய்க் கூட்டில் வைத்துக்கொள்வது வழக்கம். அவைகள் பணத்தையும் மற்றும் பிரகாசமான பண்டங்களையும் எடுத்துக்கொண்டு போய்த் தங்கள் கூடுகளில் வைத்துக்கொள்ளும் பிரியமுடையவைகள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அவைகள் மோதிரத்தைத் திருடிப்போனது ஆச்சரியமாய் இராமல், இதை அறிந்த எனக்கு அப்போது இந்த நினைவு வராதேபோனதுதான் இப்போ ஆச்சரியம்! இந்த மரம் இந்த ஜன்னலுக்கு இத்தனைச் சமீபமாய் இருப்பதையும், இதில் இந்த பட்சிகள் கூடுகட்டி இருப்பதையும் அறிந்தும் அந்த எண்ணம் எனக்கு உண்டாகாதேபோனது, கர்த்தர் தமது பிள்ளைகளாகிய என் உத்தம இஷ்டன் ஜேம்ஸுக்கும் அவன் மகளுக்கும் இத்தனையான துயர சோதனைகளை வரவிடவேண்டும் என்பது அவருடைய சித்தமானதால்தான். இல்லாவிட்டால் நான் இத்தனை மூடத்தனமாய் இருக்கமாட்டேன் என்றான்.

அப்போது என் தாயார், நீ சொல்லுகிறது சரிதான், அந்தோனி; இப்போது எல்லாம் வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது. இந்த 'மாக்பை' என்ற பட்சி என் ஜன்னலண்டை வருகிறதும் அதின் வழியாய் அறைக்குள் புகுந்து ஓடுவதும் வழக்கந்தான் என்பதை இப்போது நினைக்கிறேன். நான் மோதிரத்தை இழந்துபோன நாள் மிகவும் உஷ்ணமானது, ஜன்னல் அந்நாளில் திறந்து இருந்தது, நான் உட்கார்ந்திருந்த ஜன்னலுக்குச் சமீபமாய் இருந்த மேஜையின்மேல், மோதிரம் இருந்தது. சந்தேகம் இல்லாமல் மோதிரம் காணாமற் போனதின் உண்மை இப்போது வெளியாயிற்று. அந்தப் பட்சிகளில் ஒன்றே வச்சிரக்கல்லின் ஒளியைப் பார்த்து நான் அடுத்த அறையில்

Koviloor Academy

இருக்கும்போது தூக்கிக்கொண்டுபோய்க் கூட்டுக்குள் வைத்துக் கொண்டது என்றார்கள். இதை வெகு ஆச்சரியத்தோடே கேட்டுக் கொண்டிருந்த என் தகப்பனார்: நாம் இதை ஏற்கனவே நினையாதே போனதென்ன? குற்றமற்ற அந்த இருபேர்களையும் நமது அறியாமை யால் துன்பத்திற்கு உள்ளாக்கினது என் மனதிற்கு மெத்த வியாகுல மாய் இருக்கிறது. ஆகிலும் நான் நியாயமும் நீதியுமாய் இது விஷ யத்தை நடப்பிக்க எண்ணங்கொண்டிருந்தேன். அவர்களுக்கு விரோத மாய்ப் பொல்லாப்பை நடப்பிக்க நான் நினைத்ததே இல்லை என்பதற்கு என் மனமே சாட்சியாய் இருப்பதால், நான் கொஞ்சம் ஆறுதலடைய ஏதுவாய் இருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் நமது துரிதத் தீர்ப்பை நிவிர்த்தியாக்கமாட்டாது; அவர்களைக் கண்டுபிடித்து அவர் கள் ஊருக்கு அவர்களைத் திரும்பக் கொண்டுவந்து, அவர்களிடத்தில் பறிமுதல் பண்ணிக்கொண்ட அவர்கள் வீடு முதலியவைகளை அவர் களுக்குத் திரும்பக் கொடுத்து, அவர்களுக்கு நாம் உண்டுபண்ணுவித்த எல்லா அநியாயத் துன்பங்களுக்கும் ஈடாக நாம் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்தாலே அல்லாமல் வேறு விதத்தில் என் மன திற்குச் சமாதானம் உண்டாகாது என்று சொல்லி தம்மைச் சுற்றிப் பார்க்கவே, இதை எல்லாம் கேட்டு பயங்கரத்தால் மரத்துப்போய் நின்ற மார்கரெட் என்ற சண்டாளியைக் கண்டு, பொல்லாத வஞ் சகியே, நீ உன்னைக் கெடுத்துக்கொண்டதும் அல்லாமல் எங்கள் எல்லாரையும் அதற்கு உடந்தை ஆக்கிவைத்தாயே. நீ அந்தச் சாட்சி சொல்லாதேபோனால் மேரி தண்டனைக்கு நீங்கிப்போய் இருப்பாளே! ஆதலால் நீ இப்போ தப்பமாட்டாய், உன் பாவம் உன்னைக் கண்டு பிடித்தது என்று சொல்லி வேலைக்காரரைப் பார்த்து, நீங்கள் அவளைப் பிடித்து நீதியதிபரண்டைக்குக் கொண்டுபோங்கள், அவள் பொய்ச் சத்தியத்திற்காக அவள் சிறைச்சாலையில் அடைக்கப்படவேண்டும் என்று சொல்லவே, அரமனையிலுள்ள எவருக்கும் அவள் ஆகாதவள் ஆனபடியால், ஒருவன், அது சரிதான், மற்றவர்களுக்கு வைத்த கண்ணியிலே வைத்தவனே பிடிபடவேண்டும் என்றும்; ஒருவன், பொய் வஞ்சகம் முதலிய துர்க்குணத்தின் முடிவு இதுதான், வெகு நாளாய் எங்கள் சீமாட்டியை ஏய்த்துக்கொண்டு வந்தாள், அவள் இப்போ கண்டுபிடிக்கப்பட்டது நல்ல காரியந்தான் என்றும்; குசினிக் காரன், மேரிக்குக் கொடுக்கப்பட்ட உடுப்பின்பேரில் அவளுக்கு உண்டாய் இருந்த பொறாமையால் இத்தனை பெரிய பொல்லாப்பை வரப்பண்ணினாள், மெய்தான், ஒருபாவம் பின்னொன்றையும் அது வேறொன்றையும் உண்டுபண்ணி இப்படி அழிவுக்குக் கொண்டு போகிறது என்றும்; சாரதி, மரத்தை வெட்டின கோடரியைக் கையில் பிடித்த வண்ணமாய் அவள் குணப்பட்டால் நலம், இல்லாவிட்டால்

Koviloor Acadamy

அவளுக்கு மறுமையில் ஆக்கினை கிடைக்கும், நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும் என்று எழுதியிருக்கிறது என்று கோடரியை அசைத்துக்கொண்டு சொன்னான் என்றும் சொல்லி, அவள் எங்களண்டைக்கு வந்தபின் அவளுக்கு உண்டாய் இருந்த பணம் பண்டம் முதலியவைகளைப் பிடுங்கிக்கொண்டு உங்களை ஊருக்கு வெளியே கொண்டுபோன போலீஸ் உத்தியோகஸ்தனே அவளையும் நீங்கள் நடந்த மார்க்கமாகவே கொண்டு போய்ப் புறத்தேசத்திற்கு ஓட்டிவிட்டான். மேலும் மோதிரம் கண்டு பிடிக்கப்பட்ட சமாசாரம் ஊரில் எங்கும் தெரியவே, அநேக ஜனங்கள் அந்த மரத்தைப் பார்க்க வந்தார்கள். உன்னைக் குற்றவாளியாகத் தீர்த்த நியாயாதிபதியும் மார்கரெட்டைக் காவல்கூடத்துக்குக் கொண்டு போன சேவகனால் மேற்படி சமாசாரம் கேள்வியாகி எங்கள் அரமனைக்கு வந்தார். ஆனால் அவர் உனக்காகத் துக்கித்த துக்கிப்பை நான் உனக்குச் சொல்ல நீ நம்பமாட்டாய். அவர் ஒரு கடினமான நியாயாதிபதியாய் இருந்தும் உன் விஷயத்தில் அவர் மெத்த சஞ்சலம் அடைந்தார். அவர் சொன்னது: அந்தக் குற்றமற்ற ஜனங்கள் ஆக்கினை அடையாதிருப்பதற்கு என் ஆஸ்தி முழுமையும் கொடுத்திருந்தால் தாவிளையே! குற்றமற்றவர்களைக் குற்றமாகத் தீர்த்து ஆக்கினை பண்ணுவதைவிட பாதகம் வேறென்ன? என்று சொல்லி மரம் விழுந்த இடத்தில் கூடிநின்ற ஜனங்களைப் பார்த்துச் சொன்னதாவது: கர்த்தர் ஒருவரே ஒருவராலும் வஞ்சிக்கப்படக்கூடாத நியாயாதிபதி. ஏனெனில் அவர் இருதயத்திற்குள் பார்க்கிறவர். மனுஷ நியாயாதிபதிகள் தவறுள்ளவர்கள். வெளிநியாயங்களைப் பார்த்து நியாயம் தீர்க்கிறவர்கள். ஆதலால் குற்றம் இல்லாதவர்கள் குற்றமாய்த் தீர்க்கப்பட்டு பாடு அனுபவிப்பது இந்த அநியாய உலகத்தில் சாதாரணமாய் இருக்கிறது. அது இருதயங்களின் அந்தரங்கங்கள் எல்லாம் வெளியாகும் அந்தப் பெரிய நாள்மட்டும் மறைந்தேகிடக்கிறது. இந்தத் திருஷ்டாந்தரத்திலோ, கர்த்தர் குற்றமற்றவர்களை வெளிப்படுத்தி குற்றமுள்ளவர்களைத் தண்டிக்கப் பிரிய சித்தமானார். என் சிநேகிதர்களே, கவனியுங்கள்! அவ்வளவு அற்பமான விஷயங்களைக்கொண்டு கர்த்தர் இதை வெளிப்படுத்தினார். இந்தச் சம்பவங்களில் ஒரு சிறிய விஷயம் நடந்தேறாதேபோனால் இது வெளியாகமாட்டாது. 1-வது, கவுண்ட் பிரபு வழக்கத்திற்கு விரோதமாய் காற்றடி நாளில் சோலியாய் இவ்விடம் வந்தார்கள். இல்லாவிட்டால் வெட்டப்பட்ட மரத்தண்டை அவர்களைக் காணக்கூடாது. 2-வது, இந்த முற்றின மரத்தை வேரோடே அசைக்கும்படியான காற்று உண்டாயிற்று. 3-வது, கூட்டுக்குள் இருந்த மோதிரம் தெளிவாய்த் தெரியும்படி மழைபெய்து கூட்டில் தூசி இல்லாமல் துப்புரவு செய்தது. 4-வது, கிட்டநின்ற

Koviloor Acadamy

வேறே யாரும் அதை எடுத்து மறைத்துக்கொள்ளாமல் அவர்களுடைய பிள்ளைகளே அங்கே வந்து நிற்கவேண்டியதாயிற்று. 5-வது, பொய்ச் சாட்சிக்காரியாகிய மார்கரெட் என்பவளே அவள் நினையாமல் மோதிரம் என்று வெளியிட்டுச் சொல்ல நேரிட்டது. 6-வது, பட்சிக் கூட்டுக்குள் இருந்த காரணத்தை வெளிப்படுத்த அந்தோனி என்ற காட்டுக்காரன் அங்கே நிற்கவேண்டியதாயிற்று. இப்படியாக கர்த்தர் சம்பவங்களை நேரிடப்பண்ணி பாவிகளுக்கு எச்சரிப்பாகவும் தம்மை நேசிக்கிற பிள்ளைகளுக்குத் தைரியம் உண்டாகவும் இதையும் இதைப் போலொத்த வேறு அநேகங்களையும் திருஷ்டாந்தரங்களாக வைக்கிறார் என்றும் அதிகார தொனியோடு வசனிக்க ஜனங்கள் அவர் பேசினதைக்கேட்டு இவைகள் மெய் என்று ஒத்துக்கொண்டு அவரவர் தங்கள் வளவுக்குத் திரும்பினார்கள். மோதிரம் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு இவைகள்தான்' என்று எமிலியா மேரிக்குச் சொல்லி முடிக்கவே அவர்கள் இருப்பிடத்தைச் சேர்ந்தார்கள்.

நேசா! குற்றமற்ற நீ குற்றமாய்த் தீர்க்கப்பட்டு பாடு அனுபவிக்க நேரிடுமானால் இந்த மேரியின் குற்றமில்லாமை வெளிப்பட்டதையும், அம்மட்டும் அவள் தனக்குச் சம்பவித்தவைகளைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டதையும், அதின்பேரில் நியாயாதிபதியானவர் வசனித்ததையும் கவனித்துக்கொள்.

18. அதிகாரம்

அநியாயத்திற்கு நிவிர்த்தி

மேரிக்கு உண்டான மேன்மை

இவர்கள் இருவரும் இப்படிப் பேசிக்கொண்டு நடந்துவருகையில் கவுண்ட் பிரபுவும் அவர் சீமாட்டியும் மற்ற கனவான்களும் அவர்கள் துரைசானிமாரும் மிக நேர்த்தியாய்ச் சிங்காரிக்கப்பட்ட ஒரு பெரிய அறையிலே கூடி இருந்தார்கள். ஏர்லென் பிரீனென் என்ற ஊரின் போதகரும் அவர்களில் ஒருவராய் இருந்தார். சீமாட்டி மகள் அவரைக் கேட்டுக்கொண்டபடி அவர் அவர்களிடம் போய் எமிலியா தமக்குச் சொன்னபடியே அவர்களுக்கு அறிவித்து இரா அசனத்துக்கு இருக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டதின்பேரில் அங்கே தங்கி இருந்தார். கவுண்ட் சீமாட்டி, எமிலியா மேரிக்குச் சொல்லிக்கொண்டு வந்த சங்கதிகளையே அவருக்குச் சொல்லிக்கொண்டு வரக் கேட்டுக்கொண்டு இருந்து, தாமும் ஜேம்ஸ் மேரி என்பவர்களின் நற்குண நற்செய்கைகளைக் குறித்துச் சிறு சிறு சங்கதிகளை அவர்களுக்கு அறிவித்துக்கொண்டு இருந்தார். மேரி என்பவள் தன் உபத்

Koviloor Acadamy

திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டதையும், அவள் தன் தகப்பனுக்காகக் கொண்டிருந்த விடாமுயற்சியையும் சுறுசுறுப்பையும் சாந்தகுணத்தையும் அவள் தகப்பன் இறந்தபின் அவள் பட்ட பாடு களையும் போதகர் அறிவித்தபோது, அவரைக் கேட்டுக்கொண்டு இருந்த எல்லாருடைய கண்களிலும் கண்ணீர் தளம்பிற்று. மகா பிரியத்தோடு அவளை ஏற்றுக்கொள்ள எல்லாரும் ஆவலாய் அவளுக் காகக் காத்திருந்தார்கள்.

எமிலியா, மேரியை ஒரு கையிலும், புஷ்பக்கூடையை மறு கையி லும் பிடித்துக்கொண்டு, எல்லாரும் கூடி இருந்த அறைக்குள் பிர வேசிக்கவே அவர்கள் எல்லாரும் சந்தோஷமனதோடே அவளை ஆலிங்கனம்பண்ணிப் பட்சமாய் ஏற்றுக்கொண்டார்கள். கவுண்ட் பிரபு அவளைத் தமது கையினுல் பிடித்துக்கொண்டு பட்சமாய்ச் சொன் னது: ‘ஏழைப்பெண்ணே, நீ எவ்வளவு மெலிவும் பலவீனமுமாய்ப் போனுய், எங்களுடைய துரிதத் தீர்ப்பினுலும் அநியாய நடத்தைகளி னுலும் இத்தனை பரிதாபமான ஸ்திதிக்கு வந்தாய் என்பதை நான் நினைக்கும்போது என்னை மிகவும் துக்கப்படுத்துகிறது. எங்களுக்கு எங்கள் தப்பிதத்தை மன்னி. உன் முகம் முந்தி ரோஜா வருண மான முகமாய் இருந்ததுபோல இப்போதும் அப்படி ஆகும்படி எங் களால் கூடிய எல்லாவற்றையும் உனக்குச் செய்வோம். உன் வீட் டில் இருந்து உன்னை அநியாயமாய்த் துரத்திவிட்டோமே, அது இப்போது உன் சொந்த சொத்தாயிற்று. அந்த வீட்டையும் நீ அதிக பிரியம் வைத்து இருந்த தோட்டங்களையும் உனக்கே சொந்தமாகக் கொடுத்துவிடுகிறேன். என் செக்கிரட்டேரி உனக்குப் பத்திரம் எழுதிக் கொடுப்பார். இன்று சாயந்திரமே அதில் கையொப்பம் வைத்துத் தருகிறேன், எமிலியா அதை உனக்குச் சொந்தமாகக் கை அளித்துப்போடுவாள்’ என்றார்.

கவுண்ட் சீமாட்டி மேரியை முத்தமிட்டு, அவள் பட்ட கன பாடு களுக்குக் காரணமாய் இருந்ததும், தான் விரலில் அப்போது தரித்து இருந்ததுமான மோதிரத்தைக் கழற்றி அவள் விரலில் போட்டு பட்ச மாய்ச் சொன்னது: ‘என் பிரியமுள்ள மேரியே, உனக்குப் பொன் னும் மற்றும் ஆடை ஆபரணங்களும் வேண்டியதில்லை. உன்னிடத் தில் காணப்படுகிற சிறந்த இலட்சணங்களே உன்னை அலங்கரிக்கப் போதுமானது. ஆனுல் இப்போது நாங்கள் உனக்குச் சம்பவிக்கச் செய்த அநியாயப் பாடுகளுக்கெல்லாம் ஈடாகவும் எனது பட்சத்துக்கு அடையாளமாகவும் நீ இந்த மோதிரத்தை அங்கிகரித்துக்கொண்டால் எனக்கு மெத்த சந்தோஷமாய் இருக்கும்; இதை நீ இப்போது தரித் துக்கொள்ளப் பிரியப்படாவிட்டாலும் பின்னுக்கு உனக்கு ஒரு விவா கம் நடக்கும்போது இது உதவியாகும். அதுவரையில் இதை வைத்

Koviloor Academy

றுக்கொள். உனக்கு இது சீதன வகைக்காவது உதவும், அல்லது உனக்குப் பணமுட்டு உண்டாகும்போது இதின் கிரயத்துக்கு மேலாக உனக்குக் கொடுத்து இதை வாங்கிக்கொள்ளுகிறேன்' என்றாள்.

மேரியோவென்றால் அந்நாள் முழுமையும் வயல்வெளியில் உழைத்த உழைப்பும் அதினால் உண்டான இளைப்பும் கல்லறைத் தோட்டத்தில் அவளுக்கு இருந்த அங்கலாய்ப்பும் துக்கிப்பும் இத்தனை சடுதியான மாறுதலால் உண்டான நம்பிக்கை, சந்தோஷம், பாக்கியம் முதலியவைகளோடு கலந்துகொள்ளவே அவள் பிரதியுத்தரம் சொல்ல மாட்டாதவளாய் நின்றாள். ஆனால் சீமாட்டியின் மனப்பூர்வமான வெகுமானத்தை ஏற்றுக்கொள்ள அவள் சற்றே தாமதித்ததாகக் கண்டது. அங்கே இருந்த கனவான் ஒருவர் நல்ல பிள்ளையே, மோதிரத்தை வாங்கிக்கொள்; இத்தனை பெரிய வெகுமானத்தைத் தள்ளாதே, சீமாட்டிக்கு இதிலும் மேலான உபகாரத்தை நடப்பிக்க ஏதுவான ஐசுவரியத்தோடு கூடிய தயாள மனமும் உண்டு' என்றான். சீமாட்டியோ 'பாரன் பிரபுவே, எனக்கு முகஸ்துதி பேசாதேயும்; நாங்கள் இப்போது மேரிக்குச் செய்வது உபகாரம் அல்ல, அது அநியாயத்திற்கு நிவிர்த்தி. நாங்கள் பகிரங்கத்தில் இவளுக்கு அநியாயத்தை நடப்பித்தோம்; ஆதலால் அது பகிரங்கமாய் அறிக்கையிடப்பட்டு நிவிர்த்தி ஆகவேண்டியது' என்றாள்.

ஏழை மேரி கலக்கமடைந்தவளாய் மோதிரத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, அங்கே இருந்த போதகரை, தான் இதை ஏற்றுக்கொள்ளலாமோ என்று கேட்கிற ஜாடையாய்த் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தாள். அந்த நல்ல போதகர் அவள் குறிப்பை அறிந்து இதை ஏற்றுக்கொள்வது நியாயம்தான்; இது உன் பாடுகளுக்கு எல்லாம் காரணம் ஆனதால் இதை நீ உன் சொந்தமாய் அணிந்துகொள்வதே உன்னைச் சாட்டிய குற்றத்துக்கு நீங்கலானவள் என்பதற்குப் பகிரங்க அத்தாட்சி. சீமாட்டி அவர்கள் கொடுப்பதைத் தள்ளினால் அவர்கள் ஆயாசத்துக்கு ஏதுவாவாய்; இதை அங்கிகரித்துக் கொள். ஆபத்துக்காலங்களில் நீ எப்படிப் பொறுமையும் சாந்தமுமாய் கர்த்தருக்கு உன்னை ஒப்படைத்து அடக்கமாய் இருந்தாயோ அப்படியே இந்த உன் சம்பத்து நாட்களிலும் சாந்தத்தையும் தாழ்மையையும் மெத்தனவையும் தெய்வபக்தியையும் அணிந்துகொள்ள கர்த்தர் உனக்குக் கிருபை அளிக்கக்கடவர்' என்று சொல்லி முடிக்கவே, மேரி அப்புறம் தாமதியாமல் மோதிரத்தை விரலில் போட்டுக்கொண்டு தாழ்மையாய் சீமாட்டி கையை முத்திசெய்தாள். ஆனால் அவள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பேசமாட்டாதவளாய் இருந்தாள். எமிலியா இந்தக் காரியங்களை எல்லாம் மிகப் பிரியமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். தன் பெற்றோர் அவளுக்குப் பாராட்டின தயவைப்

Koviloor Acadamy

பார்த்து அவள் கண்கள் ஆனந்தத்தால் ஒளிவிட்டது. போதகர் இதை வெகு மனமகிழ்ச்சியோடே கவனித்துக்கொண்டிருந்தார். ஏனெனில் ஒருவர்பின் ஒருவரைக் கனப்படுத்தித் துத்தியமாய்ப் பேசும்போது அதைப் பார்க்கிற மற்றவர்கள் அதின் பேரில் சந்தோஷப்படாமல் பொருமை ஆவார்கள். இந்தச் சீமாட்டியின் மகளோ அப்படிச் செய்யாமல் தன்னை அவளுக்கு இரண்டாம்படியில் வைத்து மேரியின் பேரிலேயே எல்லாருடைய கண்களும் ஊன்றும்படியான விருப்பம் உடையவளாய் நின்றாள்.

எனது பிரிய நேசா! நீ பிறர் மற்றவர்களால் கனமாய் எண்ணப்பட்டு மேன்மையை அடைகிறதைப் பார்க்கும்போது உன் மனம் எமிலியாவின் மனம்போல் நீ தாழவும் பிறன் உயரவும் விருப்பமுடைய கவடற்ற மனமுடையவனாய் இருக்கிறாயோ? இது கடினமான பாடம். இதற்கு தெய்வ ஆவியின் ஒத்தாசையை அன்றி மற்றப்படி நடக்கமாட்டாது. நீ அழுகிறவர்களோடு அழுது நகைக்கிறவர்களோடு நகைக்கும் நேசம் நிறைந்த மனம் உனக்கு இருக்கவேண்டியது.

19. அதிகாரம்

வேட்டை மண்டபத்தில் அன்று இராத்திரி நடந்த சம்பாஷணை மேரி கனவான்களின் மத்தியில் ஆசனம் பெற்றது

இரா அசனம் ஆயத்தமானபோது சீமாட்டி மேரியைக் கையோடே தீனிக்கு அழைத்துப்போனாள். மேரி மனம் அஞ்சிப் பின்வாங்கினாள். சீமாட்டியோ அதற்கு இடங்கொடாமல் தனக்கும் தன் மகளுக்கும் மத்தியில் மேரியை இருத்தினாள். மேரி மற்ற கனவான்களோடு அசன அறைக்குச் செல்லுகையில் அவள் கொஞ்சநேரத்துக்குள் தனக்கு உண்டான இந்த ஆச்சரியமான மாறுதலைப்பற்றி ஆலோசித்துக்கொண்டு போனதாகத் தோற்றுகிறது. அவள் 'பையின் பார்ம்' என்ற இடத்திலிருந்து அன்று சாயந்திரம் வெகு அவமானத்தோடு அங்கிருந்த வேலைக்கார ஜனங்களோடு தானும் அப்பம் புசிக்கப் பாத்திரமற்றவர்களாய்த் துரத்தப்பட்டிருக்க ஏறக்குறைய மூன்றுமணி நேரத்துக்குப் பின் கனவானுடைய தீனி மேஜையில் இருந்த கனவான்களில் இவளும் ஒருத்தியாக அவர்கள் நடுவில் தன்னைக் காண்பது என்ன அதிசயம் என்றெண்ணி இருப்பாள். இது கர்த்தருடைய செயல். 'கதியுள்ளோனை ஏழையாக்கி மகா எளியவனையோ திரவிய சம்பன்னனாக்கி உயர்த்த சுவாமிக்கு அரிதோ; தாழ்வாக்குவார், உயர்த்துவார், அடிக்கிறார், அணைக்கிறார்' என்ற தமிழ்ப் பிரார்த்தனையின்படி ஒரு க்ஷணத்தில் கர்த்தர் இவனைத் தாழ்த்தி அவனை உயர்த்து

Koviloor Academy

கிருர் (சங். 113: 7, 8). ஆதலால் ஒருவரும் தங்கள் நிலைமையைக் குறித்து மனதுடைந்து போகலாகாது. கர்த்தர் ஒருவனைத் தாழ்த்தும் போது அவன் உயரும்படிக்கு ஆரம்பம் ஆகிறது என்றெண்ணி அவர் கையின்கீழ் தாழ்ந்து அவர் காலத்துக்குக் காத்திருக்கவேண்டியது. ஏனென்ருல் எந்தெந்தக் காலத்தில் எப்படி எப்படி நம்மை அவர் நடத்தவேண்டும் என்பது அவருக்கே அடுத்த இரகசியம். மேஜையில் எல்லாரும் உட்கார்ந்தவுடனே போதகர் அசன ஆசீர்வாதம் கூறினர். மேரி இவைகள் எல்லாம் ஒரு சொப்பனமோ என்ற எண்ணத்துடன் தன்னை மறந்தவளாய்ச் சாப்பிடுகையில் மற்ற கனவான்கள் இவளுடைய சரித்திரத்தையே பேசிக்கொண்டு போஜனம் பண்ணினர்கள்.

காட்டுக்காரனை விருத்தாப்பிய அந்தோனி என்பவன் மேஜைக்கு ஊழியமாய் நின்றவர்களில் ஒருவனும் இருந்தான். அவன் காடு கரைகளின் காரியங்களை நன்ருய் அறிந்தவன் ஆனபடியால் கவுண்ட் பிரபு அவனை அப்போது வரவழைத்து இருந்தார். அவன் மற்றவர்களைவிட நீண்ட ஊழியம்செய்த விருத்தாப்பியன் ஆனதால் அதிக தாராளமாய்க் கூச்சமின்றிப் பேச இடம் உண்டாய் இருந்தது. அவன் மேஜைக்கு நிற்கையில் மேரிக்கு உண்டான மிகப் பாக்கியமான ஆறுதலுக்காக அதிக சந்தோஷம் அடைந்து தன்னை அடக்கக் கூடாமல் மேஜைப்பந்தியில் இருந்த மேரிக்குப் பின்புறமாக நின்றுகொண்டு அவளை மெதுவான சத்தமாய் மினவி அவளுக்கு உண்டான சடுதியான மேன்மைக்காக அவளுக்கு அதிகப் பிரீதியைக் காண்பித்து, ஒகோ உன் தகப்பன் இந்த நாளைக் கண்டாலோ எப்படி என்று துணிந்து அவள் காதுக்குள் குசுகுசுத்தான். இதைக் கவனித்த அந்த நல்ல போதகர், அந்தோனி மேரிக்கு உண்டான மேன்மைக்காகச் சந்தோஷம் ஜொலிக்கிற முகம் உடையவனும் நிற்கிறதைக் கண்டு சொன்னது: மேரியின் தகப்பன் தன் மகளுடைய குற்றமின்மை பகிரங்கமாய் வெளியானதற்காக மிகவும் சந்தோஷப்படுவான். ஆனல் அவன் இப்போது நமது நடுவில் இருக்க விரும்பலாகாது; அவன் இப்போது கிறிஸ்துவோடுகூட மகா உத்தம நிலையில் இருக்கிருன். ஜேம்ஸ் என்பவன் தான் அநியாயமாய்ப் பட்ட பாடுகளுக்கு எல்லாம் ஒரு பகிரங்க நிவிர்த்தி உண்டாகிறதற்கு முன்னே மறுமைக்குள் பிரவேசமானது கர்த்தருடைய சித்தமாய் இருந்தது. நமது ஜனத்துக்கு உத்தமமானது எதென்பதைக் கர்த்தர்தான் அறிவார். அவனுக்கு இப்போது உண்டாய் இருக்கிற திகட்டாத பேரின்ப சுகானந்தத்துக்கு அவனுக்கு இம்மையில் உண்டாகும் நிவிர்த்தி ஒப்பாகுமோ? சில திருஷ்டாந்தரங்களில் கர்த்தர் யோபைப்போல் உபத்திரவப்படுகிறவர்களை மண்ணில் இருந்து உயர்த்தி, அவர்களைவிட்டு

Koviloor Academy

எடுபட்டுப்போன இம்மைக்கு உரிய சந்தோஷத்தின் பாத்திரத்தைத் திரும்ப அவர்கள் கையில் கொடுத்து, அவர்களை ஆசீர்வதிப்பது அவர் இஷ்டம். வேறு திருஷ்டாந்தரங்களில் லாசருவைப்போல் துன்பம் அடைந்தவர்கள் தாங்கள் பரதேச பயணம்பண்ணும் நாள் எல்லாம் அத்துன்பக் கஷ்ட நஷ்டங்களையே அனுபவித்து மறுமைக்கு உட்படு வதும் அவர் சித்தமே. ஏன் இப்படிப்பட்ட சம்பவங்கள் உண்டாக வேண்டும் என்பது நமக்கு இப்போது தெரியாது. ஒன்றைமட்டும் நாம் அறிவோம். அதாவது: அவர் எதை நடப்பிக்கிறாரோ அதே உத்தமமானது என்பதே என்று வசனித்து பின்னும் சொன்னது: ஜேம்ஸ் கடைசியாய் வியாதிப்பட்டு இருந்த காலத்தில் இந்த சந்தோஷ நாளை அவன் பார்க்காவிட்டாலும் அப்படிப்பட்ட ஒருநாள் வரும் என்றும் சொல்லவேண்டுமானால் அந்த நாளைத் தானே பார்த்தவனாக அவ்வளவு உறுதியான நம்பிக்கையோடு இறந்தான் என்பதற்கு ஒரு சமய ஐக்கிய திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறேன்.

கேளுங்கள், நான் ஒருநாள் அவன் வியாதியில் அவனைப் பார்க்கப் போனபோது அவன் வழக்கத்துக்கு மேலான சந்தோஷம் ஜொலிக் கிற முகத்தோடு இருந்ததைப் பார்த்தேன். அப்போது அவன் சொன் னது: நான் இராத்திரி கொஞ்சநேரந்தான் தூங்கினேன். தூக்கம் இல்லாத மற்ற மணிநேரங்களில் எல்லாம் மிகக் கருத்தான ஜெபத் திலே போக்கினேன். நான் முன் ஒருபோதும் ஜெபம்பண்ணாத அவ்வளவு பலத்தோடு ஜெபம்பண்ணினேன். அப்போது அம்மட்டும் என் மனதில் இருந்த சந்தேகம் பயம் எல்லாம் நீங்கிச் சமாதானம் என் ஆத்துமத்தில் பரவிற்று. இதுவரையில் என் மனம் என் பிரிய பிள்ளைக்காக எத்தனைக்கு அதி நோவான யோசனைகளைக் கொண் டிருந்ததோ இப்போது அத்தனைக்கு லகுவடைந்தது. என் பிள்ளை யைக் கர்த்தருக்கு ஒப்படைத்தேன். அவள் குற்றமின்மை பகிரங்க மாய் வெளியாகும் என்றும், நான் போனபின் அவளுக்குத் தகுதியான நேசரை, ஆம் ஒருவேளை அவளைக் குற்றப்படுத்தினவர்களும் நாங்கள் இழந்துபோனவர்களுமான அந்த ஆண்டவன்மாரையே கர்த்தர் எழுப்பி, அவர்களைக்கொண்டே நான் உயிரோடிருந்து அவளுக்குச் செய்யக்கூடியதைவிட அதிக நலமானவைகளை நடப்பிப்பார் என்று நான் முழுநிச்சயமாய் இருக்கிறேன் என்றான். பாருங்கள், ஜேம்ஸ் அத்தனை பலமாய் ஜெபம்பண்ணின அந்த இராத்திரிதான் பெருங் காற்று உண்டாகி உங்கள் தோட்டத்தில் இருந்த அந்தப் பெரிய மரத்தை அசைத்து மோதிரம் கண்டுபிடிக்கப்படும்படிக்கான ஏதுவை உண்டாக்கினது என்ற அந்த ஆச்சரியமான சமயசம்பந்த ஐக்கியத்தை நான் இன்றிரவு இங்கே வந்து யாவையும் கேட்டது முதல் யோசித் துக்கொண்டிருக்கிறேன். சீமாட்டி அவர்கள் இன்றிரவு அது நடந்த

Koviloor Acadamy

சரியான தேதியை அறிவித்தார்கள். சில விசேஷங்களின் நிமித்தம் என் ஞாபகத்தில் இருந்த அந்தத் தேதியே ஜேம்ஸ் மிகப் பலத்தோடு ஜெபம்பண்ணின இராத்திரி என்று நினைவுகூர்ந்தேன். நீதிமானு டைய கருத்தான ஜெபம் மிகப் பலமுள்ளது என்ற சத்தியவாக்கின் படி இது ஜெபத்தின் பலத்தைக் காண்பிக்கிற ஒரு கவனிக்கப்படத் தக்க திருஷ்டாந்தரம் அல்லவோ? கர்த்தர் சிலவேளைகளில் தமது பிள்ளைகள் பண்ணுகிற ஜெபத்தைக் கேட்டு அதற்கு உடனே பதில் அளிக்கிறார் என்பதை அவர்கள் அவருடைய வாக்குத்தத்தங்களில் கொண்டிருக்கிற விசுவாசத்தைக்கொண்டே அல்லாமல் வெளிப்படை யாய் நடந்தேறும் சம்பவங்கள் அவர்கள் அறியாமலே அவர்கள் ஜெபங் களுக்கு உத்தரவாக அளிக்கப்படுகிறது.

சீமாட்டி மேஜையை விட்டு எழுந்திருக்க ஜாடைகாட்டி எல்லாரும் எழுந்தவுடனே ஜெபத்தின் பல மாட்சிமை இவ்வளவாய் இருக்கக் கொள்ள கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தேடாமலும் இன்றைக்கு அவர் அளித்த நன்மைக்காக அவரைத் துதியாமலும் நாம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியலாகாது என்று போதகருக்குச் சொல்லவே, அவர் கர்த்தரை நோக்கி அவர் நாமத்தை ஸ்தோத்திரித்து கூடியிருந்த வர்களின் இருதயம் அசைக்கப்பட்டு நல்லுணர்வு உண்டாகும்படி யான அவ்வளவு அனலான ஆவியோடு ஜெபம்பண்ணி அந்த நாளை முடித்தார். எல்லாரும் தங்கள் தங்கள் இடத்திற்குத் திரும்பினார்கள்.

நேசா! நீ ஜெபம்பண்ணும் ஆவியை உடையவனோ? உன் ஜெபம் கேட்கப்பட்டதென்ற நிச்சயத்தை நீ எப்போதாவது உணர்ந்து அறிந் திருக்கிறாயா? ஜேம்ஸ் என்பவருடைய ஜெபம் எவ்வளவு மாறுதலை உண்டுபண்ணிற்று என்பதைக் கவனி. சரியான ஆவியோடு இதை வாசித்து உணர்ந்தால் மெய்யாகவே நீ ஜெபம்பண்ண அசதியாகவே மாட்டாய். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று பவுல் அப்போஸ்தலன் உரைத்திருக்கிற சத்தியத்தின் மாட்சிமையை நீ ஓயா மல் பண்ணும் ஜெபங்களினால் அறிந்திருப்பாய். ஜெபம் கிறிஸ்தவ னுக்கு உயிர். ஜெபமில்லாத வீடு வௌவால் அடைந்து நாற்ற மெடுத்த பாழ்மண்டபத்துக்குச் சரி. ஆதலால் ஆண்டவர், 'என் வீடு ஜெபத்தின் வீடு' என்று உரைத்திருக்கிறபடி, உன் இருதயம் ஜெபத்தின் வீடாகக்கடவது.

Koviloor Acadamy

20. அதிகாரம்

மேரி கவுண்ட் பிரபுவோடும் அவர் வீட்டாரோடும் 'பையின் பார்ம்' என்ற இடத்துக்குப் போனது. இட்டாருக்கு இட்ட பலன்

அதிகாலமே கனவான்கள் எல்லாரும் பயணப்பட ஆயத்தமான போது எமிலியா, மேரி அறையின் கதவைத் தட்டி 'என் தாதி உனக்கு உடுப்பு கொண்டுவரும் வரையில் நீ உடுத்திக்கொள்ளாதே என்று உனக்குச் சொல்லவந்தேன். நாங்கள் இங்கே அதிக நாள் இருக்க எண்ணாதபடியால் அதிகமாய் உடுப்பு கொண்டுவரவில்லை. ஆனால் தற்காலத்துக்கு உடுத்திக்கொள்ள உனக்குச் சிலதைக் கொண்டுவருவாள். அவள் மார்கரெட்டைப்போல் அல்ல, அவள் நல்லவள்; அவள் உனக்கு நன்றாய் உடுத்திவிடுவாள். நீ இனி உன் உடையை உடுத்திக்கொள்ளப்படாது. நீ இனிமேல் எப்போதும் என்னோடு இருக்கவேண்டியவள் ஆனபடியால் உன்னுடைய புதிய நிலைமைக்குத் தக்க உடையோடு இருக்கவேண்டியது. நாம் ஐஸ்பர்க் ஊருக்குப் போகுமுன் இப்போதே அந்த மாறுதல் நடந்தேறவேண்டியது' என்று சொன்னாள்.

மேரி புது உடை உடுத்திக்கொண்டவளாய்க் காலைபோஜனத்துக்கு வந்தாள். அவளைப் பார்த்தவர்கள் அவள் மேரிதான் என்று அறிந்துகொள்ளக்கூடாமல் அவ்வளவு சிறப்பாய்த் தோன்றினாள். காலை அசனத்துக்குப்பின் புறப்பட்டார்கள். கவுண்ட் பிரபு தமது வாகனத்தை பாட்டைமார்க்கத்திலிருந்து சற்றே விலகியிருந்த 'பையின் பார்ம்' என்ற இடத்துக்குக் கொண்டுபோய் நிறுத்தும்படியாய் சாரதிக்குச் சொன்னார். போகையில் பிரபு அந்த இடத்திலுள்ள ஜனங்களைக்குறித்து மேரி இடத்தில் வினவினார். ஏனெனில் விருத்தாப்பிய ஜேம்ஸ் என்பவனுக்கு அந்த விருத்தாப்பிய குடியானவர்கள் பாராட்டின அன்புக்காகவும் செய்த நன்மைகளுக்காகவும் அவர்களுக்குச் சில பிரதியுபகாரஞ் செய்ய எண்ணங்கொண்டிருந்தார். மேரி அந்த இரண்டு விருத்தாப்பியரும் அடைந்திருந்த நிர்ப்பாக்கியத்தைப் பிரபுவுக்கு அறிவித்திருந்தாள்.

பிரபுவினுடைய வாகனம் அந்த இடத்தில் சேர்ந்தவுடனே அப்படிப்பட்ட காட்சி அதற்குமுன் ஒருக்காலும் இல்லாதபடியால் அவ்விடத்தாருக்குள் ஒரு கொந்தளிப்புண்டாயிற்று. அவ்விடத்திலுள்ள கொடுஞ்சூரி கனவான்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்யத் தீவிரித்து ஓடிவந்தாள். அவள் தனக்குக் கீழானவர்களுக்கு

Koviloor Acadamy

எவ்வளவு கொடுமைக்காரியாய் இருந்தாளோ, அவ்வளவுக்குத் தனக்கு மேலானவர்களுக்குரிய மரியாதை செய்ய அறிந்திருந்தாள். ஆதலால் வாகனத்திலிருந்து இறங்கின பத்தினிமாருக்கு ஊழியமாக அவர்களில் ஒருவருடைய உடுப்பு வண்டிரோதையில் இருந்த சேற்றில் படாமல் தூக்கிக்கொண்டு நின்ருள். அது மேரி உடுத்தியிருந்த உடுப்பு. தான் நேற்று சாயந்திரம் துரத்திவிட்ட மேரிதான் என்று அறிந்துகொண்டவுடனே பின்னிட்டுப்போய்த் தனக்கு முன் இருந்த கனவான்களை மறந்து இது என்னவென்று சொல்லித் தன் புருஷனைத் தேடித் திரும்பினுள். அவள் மனது அவளை வாதித்தது. தன் கொடுமைக்காகத் தண்டிக்கப்படுவாள் என்று பயமும் திகிலும் அடைந்து ஓடினுள். அவள் மறைந்துபோகவே, பிரபு தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த விருத்தாப்பிய குடித்தனக்காரனைக் கண்டு மற்ற பத்தினிமாரோடு அவன் ஜேம்ஸுக்கும் மேரிக்கும் பாராட்டின தயவுக்காக அவனுக்கு நன்றிவந்தனம் சொன்ஞர். அதற்கு அவன், "மெய்யாகவே என் ஆண்டவனே, நான் அந்த நல்ல ஜேம்ஸ் என்பவனுக்குச் செய்யவேண்டியவைகளையே செய்யாமல் விட்டுவிட்டேனே. அவன் என்னிடம் வந்தபோது இந்தத் தோட்டம் காடாய்க் கிடந்தது, தங்கள் கண் பார்க்கிறபடி இதை எத்தனை நேர்த்தியான இடமாய்த் திருத்தினுன். நான் இப்போது எனக்கு நன்மையாக இதைக் கையாண்டு அவன் மரங்களைக் கனிதரும்படி பக்குவப்படுத்தினதினுல் அவைகளின் கனிகளினுல் நான் அதிக வரத்துள்ள பலனை அடைந்திருக்கிறேன். அவன் இதை வைத்துப்போன ஸ்திதியிலேயே காப்பாற்றும்படி நான் இதிலே உழைக்கிறபோது இருக்கிற சந்தோஷம் எனக்கு எப்போதாவது இருந்ததில்லை. இந்த இடத்திலே அவன் எனக்குச் சொன்ன புத்தி போதனைகளை நினைத்துக்கொள்ளுகிறேன்' என்று சொன்ஞன். கவுண்ட் பிரபு அவனுடனே பேசிக்கொண்டிருக்கையில் மேரி அவன் பெண்சாதியண்டைக்குப் போய்த் தனது புதிய இஷ்டர்களைக் குறித்துப் பேசி, அவர்கள் நல்ல தயாள சித்தமுள்ளவர்கள், பயப்படாமல் அவர்களைக் கண்டுகொள்ள வாருங்கள் என்று சொல்லி அவளை அழைத்துவந்தாள். அவர்கள் அந்த விருத்தாப்பிய மனுஷியை மிக பட்சமாய் ஏற்றுக்கொண்டு மேரிக்கு அவள் செய்த நன்மைகளுக்காக அவளை உபசரித்து கனப்படுத்தினுர்கள். அந்த இரண்டு பேரும் மேரிக்கு உண்டான நல்ல அதிர்ஷ்டத்திற்காக மிகவும் சந்தோஷப்பட்டுச் சொன்னது: உன் தகப்பன், கர்த்தர் உனக்குச் சிநேகிதர்களை எழும்பப்பண்ணுவார் என்றும் லீலிப் புஷ்பங்களை உடுத்துகிறவர் உன்னையும் உடுத்துவார் என்றும் சொன்ன வார்த்தைகள் இப்போது நிறைவேறிற்று என்று சொன்ஞர்கள். இதற்கு இடையில் அந்தக் கொடுஞ்சூரி மூர்க்கத்தினுலும் பொருமையினுலும்

Koviloor Acadamy

நிறைந்து 'நிர்ப்பந்த பிச்சைக்காரியாய் இருந்தவளை சீமாட்டிமார்களில் ஒருத்தியாக உயர்த்தினார்களே, ஏதோ இந்தக் கனவான்களைப் பைத்தியம்பிடித்தது. எதினாலே இந்த நிர்ப்பந்த ஸ்திரீயை இப்படித் தங்களைப்போல் ஆக்கிப் போட்டார்கள் என்று தெரியவில்லை. நான் அவளைப் பார்க்கச் சகிக்கவில்லை. அவளை அவர்கள் திரும்பத் தாழத் தள்ளுவார்கள். அவள் எவ்வளவாய் அவர்களைப்போல் ஆக்கப்பட்டாலும் அவள் தன் இழிவான குணத்தை விடப்போகிறதில்லை' என்று இப்படி தூஷண வார்த்தைகளால் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

கவுண்ட் பிரபு இந்த வார்த்தைகளை அவர் அறியாதிருந்தும் அவள் முகக்குறியால் அவள் மாதிரியையும் எரிப்பான குணத்தையும் அறிந்து கொண்டு சற்றுநேரம் யோசித்துப் பிறகு அந்த விருத்தாப்பிய குடியானவர்களுக்குச் சொன்னது: 'என் நல்ல சிநேகிதர்களே, நான் உங்களுக்கு ஒன்றைத் தர விரும்புகிறேன், அதை நீங்கள் அங்கிகரித்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். நான் ஐஸ்பர்க் ஊரில் ஜேம்ஸ் குத்தகைக்குக் கொண்டிருந்த வீட்டையும் தோட்டத்தையும் இப்போதுதான் மேரிக்குக் கொடுத்தேன். ஆனால் என் புத்திரி அவளைத் தன்னோடு இருக்க விரும்புகிறபடியாலும் அதில் தனிமையாக இருக்க அவள் அதிக இளந்தையாய் இருக்கிறபடியாலும் அவைகளை உங்களுக்குத் தருகிறேன்; என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் அதைக் கையாண்டு கொள்ள விரும்புவீர்கள் என்று எண்ணுகிறேன். மேரியுடைய நாமத்தில், அவள் அதற்காக உங்களிடத்தில் வாடகை வாங்கமாட்டாள் என்றும் வாக்குத்தத்தம் பண்ணுகிறேன். நீங்கள் அங்கே உங்களுக்கு வேண்டியமட்டும் புஷ்பங்களின் இன்பத்தை அனுபவிப்பதும் அல்லாமல், உங்கள் பழைய இஷ்டனாகிய ஜேம்ஸ் என்பவனையும் நினைத்துக்கொள்வீர்கள்' என்றார்.

ஏற்கனவே இவர்கள் கொடுஞ்சூரியாகிய தங்கள் மருமகளைவிட்டுப் போக ஆசையாய் இருந்தபடியால் இதற்காக சந்தோஷப்பட்டுக் கனவான்களை ஸ்தோத்திரித்தார்கள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அவர்கள் மருமகள் அவர்கள் தன்னைவிட்டுத் தொலைந்துபோவதிலே சந்தோஷப்பட்டு தன் பயத்தை மறந்து இது விஷயத்தில் தன் கருத்தையும் தெரியப்படுத்த முன்னேறிவந்தாள். மேரி பிரபுவோடே பேசுகையில் பேசும் சரியான மாதிரியை அறிந்துகொண்டாள் என்று எண்ணிக்கொண்டு, தன் மாமனார் மாமியாருக்குச் சொன்னது: இது ஒரு நல்ல உபகாரம். அதை அங்கிகரியாமல் போவது மூடத்தனம்; அது கனவான்களுக்கும் வருத்தமாய் இருக்கும் என்றாள்.

வயலில் இருந்து அப்போது வந்த அவள் புருஷன் இதைக் கேட்டு சந்தோஷப்பட்டு, இனிமேலாவது தன் தாய்தகப்பன் ஆறுத

Koviloor Academy

லோடு இருப்பார்கள் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு கனவான்களுக்கு நன்றிவந்தனம் சொல்லி தன் பெண்சாதியை நோக்கி: 'கர்த்தருடைய ஏழைகளுக்கு நன்மை செய்தல் ஆசீர்வாதத்தைக் கூடக் கொண்டுவருகிறது; நீ என்னை அப்போது நம்பாதே போனுய், ஆனுல் அதை இப்போது உன் கண்களாலே பார்க்கிருய்' என்று சொன்னுன். அதற்கு அந்தக் கொடுஞ்சூரி கோபத்தால் நிறைந்து கனவான்களுடைய சமுகத்தில் பேச பயந்து கடுமையான பார்வையாய்த் தன் புருஷனைப் பார்த்துப் போய்விட்டாள். கவுண்ட் பிரபுவானவர் அந்தக் குடியான விருத்தாப்பியரை அழைத்து அனுப்பும்படியான ஆயத்தங்களை ஐஸ்பர்க் ஊரில் செய்தபின், அவர்களை அழைப்பிப்போம் என்று வாக்குக் கொடுத்து அவர்களை மினவிக் கொண்டு ரதத்தில் ஏறி துரிதமாய்ப் போய்விட்டார்கள்.

நேசா! கர்த்தருடைய செயல்களை ருசித்துப்பார். அது தேனிலும் தேன்கூண்டொழுகலிலும் மதுரமானது. நீ கர்த்தருடையவனுய் இருந்தால், இப்பூமியில் உனக்கு யார் அவர் உத்தரவில்லாமல் ஒரு அணுவத்தனைத் தீங்கைச் செய்யக்கூடும்? இட்டாருக்கு இட்ட பலன் அவர்கள் மடியிலே திரும்பக் கொடுக்கப்படும். நமது இயேசு இரட்சகரும், மிகவும் சிறியரான இந்த என் சகோதரரில் ஒருவனுக்கு ஒருவன் ஒரு கலயம் குளிர்ந்த தண்ணீர் குடிக்கக் கொடுத்தால், அதின் பலனை இழந்துபோகான் என்று உரைத்திருப்பதை நினைவு கூரு.

21. அதிகாரம்

பேராசைக்கு வந்த தண்டனை. கோடுமைக்குக் கடுமையும் கோடுமை நீங்கப் போதனையும்

கவுண்ட் பிரபுவானவர் தாம் குடியானவர்களுக்குக் கொடுத்துப் போன வார்த்தையை நினைத்திருந்தார். இலையுதிர்காலம் முடியுமுன் குடியானவர்களை அழைத்துப்போக 'பையின் பார்ம்' என்ற இடத்துக்கு ஒரு வாகனம் அனுப்பப்பட்டது. அவர்கள் பிரிந்து போகும் நேரம் சமீபித்துவந்ததைக் கண்ட அவர்கள் மகன் தான் பின்னும் அதிக கஸ்தியைத் தன் பெண்சாதியால் அடையவேண்டியதாய் இருக்குமே என்று நினைத்து மிகவும் துக்கித்தும் அவர்கள் அவள் கொடுமைக்கு நீங்கிச் சுகமாய்த் தங்கள் மீதிகாலத்தைப் பின்னிடுவார்கள் என்று ஆறுதலடைந்தான். அவன் பெண்சாதியோ அவர்கள் தொலைந்துபோவதிலே அதிக சந்தோஷங்கொண்டும், பிரபு அனுப்பிய கட்டளையால் துக்கம் அடைந்தாள். அந்தக் கட்டளை எழுதி அனுப்

Koviloor Acadamy

பப்பட்டது. அதென்னவெனில், குடியானவனின் மகன் வயல் வெளி முதலியவைகளைத் தன் வசத்தில் பெற்றுக்கொண்ட காலத்தில் அவன் சம்மதித்துக்கொண்ட ஏற்பாட்டின்படி சமீபத்திலுள்ள திரவிய சாலையில் அவர்கள் ஜீவனும்சத்துக்குச் செல்லும் செலவை மூன்று மாதத்துக்கு ஒருதரம் செலுத்திவிடவேண்டும் என்பதே. அவர்களுக்குச் செல்லும் செலவு கொஞ்சம் அதிகமாகவே கணக்கிடப்பட்டு இருந்தது. அவள் இதைச் செலுத்தத் தவறக்கூடாது என்பதைப் பற்றி அதிக கோபாவேஷங்கொண்டு சொன்னது: 'நமக்கு அப்புறம் மீதி என்ன! அவர்கள் இங்கே இருந்தால் நாம் செலுத்தவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிற தொகையில் அரைவாசிதானும் அவர்களுக்குச் செல்லாதே' என்றாள். அவள் புருஷன், தன் உள்ளத்திலே தான் இப்போது தன் பெண்சாதியின் தொல்லையில்லாமல் தன் பெற்றாருக்காக பணம் அனுப்ப ஏதுவான பிரபுவின் எழுத்துக் கட்டளைக்காக சந்தோஷங்கொண்டான்.

இவனுடைய பெற்றார் வாகனத்தின்மேல் ஏறி புறப்பட்டுப் போய் விட்டார்கள். இவன் கண்ணீர்களோடு அவர்களை வழி அனுப்பினான்; இவன் பெண்சாதியோ தன் பாட்டிலிருந்து விட்டாள். இந்தப் பொல்லாத ஸ்திரீயின் பேராசைக்குப் பின்னும் சீக்கிரத்தில் பலன் கிடைத்தது. அவள் புருஷன் அவளுக்குச் சொன்னபடி அவள் பணத்தை நியாயமான வட்டிக்கு யோக்கியமான வியாபாரியிடத்தில் கொடாமல், ஒரு போக்கிரியிடத்தில் நூற்றுக்குப் பத்து வீதம் வட்டிக்கு விட்டாள். அவன் சொன்னது எல்லாவற்றையும் இவள் நம்பி தன் பணத்துக்கு இவ்வளவு வட்டி கூடினால்தான் பெரிய பணக்காரி ஆகலாம் என்று உள்ளத்தில் எண்ணங்கொண்டு சந்தோஷித்தாள். ஆனால் அவள் சீக்கிரத்தில் தன் பொன்னான சொப்பனங்களில் நின்று விழித்தெழும்பும் வேளை வந்தது. அவளிடத்தில் பணம் வாங்கினவன் ஒன்றும் இல்லாதவன் ஆனான். இதை அவள் கேட்டமாத்திரத்தில் அநேக மாதங்களாய் அவள் தூங்கவும் இல்லை, இளைப்பாற்றியை அடையவும் இல்லை. அவள் புருஷனையும் இளைப்பாற விடவில்லை. அவள் ஓயாமல் பட்டணத்துக்குள் போகிறதும் வருகிறதுமாய் இருந்து வக்கீல்களையும் மற்றும் பெரிய மனிதர்களையும் கண்டு, தன் பணம் தனக்குக் கிடைக்கவும் அந்தப் போக்கிரி தண்டனை அடையவும் வழி வகைகளைக் கண்டுபிடிக்க அவர்களிடத்தில் ஆலோசித்துவந்தாள். கடைசியாய் அவளுக்குக் கிடைத்த பணம் அவள் இழந்துபோன பணத்துக்காகச் செலவழித்து வியாச்சியம் பண்ணின தொகைக்குத் தானும் ஈடாகாமற்போயிற்று. தன் பணத்தை மோசம்பண்ணினவனைப் பழிவாங்க ஆவேஷங்கொண்டு திரிந்ததிலேதான் இவ்வளவு செலவழிக்கிறாள் என்று எண்ணாதே போனாள். அவள் பணவெறி

Koviloor Academy

யால் அடைந்த துக்கத்தால் வியாதிக்கு உள்ளானுள். அவள் புருஷன் வைத்தியனை அழைத்துவர அவளைக் கேட்டபோது செலவின் நிமித்தம் வேண்டாம் என்று சொல்லி உபயோகமில்லாத மருந்தை விற்கிற எத்தன் ஒருவனிடத்தில் சுளுவில் மருந்து வாங்கிச் சாப்பிட நோவு அதிகரித்தது. அவள் பணம் அவளைவிட்டுப் பறந்துபோன பின்பு வீட்டுக்கு எஜமானுன அவள் புருஷன் அவள் சம்மதியில்லாமல் ஒரு வைத்தியனை அழைப்பித்தான். அவன் கொடுத்த மருந்தைக் கோபமாய் எறிந்துபோட்டு தன் முந்தின மருந்தையே சாப்பிட்டுவந்தாள். எர்லென் பிரீனென் என்ற இடத்துப் போதகர் அவள் வியாதியாய் இருக்கிறதைக் கேள்விப்பட்டு அவளைப் பார்க்கவந்து அவள் தூங்குகிற மனச்சாட்சியை உசுப்பிடவும் அவள் இருக்கும் மோசத்தை அவளுக்குத் தெரியக்காட்டவும் பூமிக்கடுத்த பொருளின்பேரில் நிலைகொண்டிருக்கிற அவள் மனதை உயர எழுப்பவும் அவள் மனந்திரும்பி வெகுகாலமாய் மறந்துபோன தன் கர்த்தரண்டைச் செல்லவும் தம்மால்கூடிய எல்லாவற்றையும் சொல்லிப் பார்த்தார். ஆனுல் போதகருடைய வார்த்தைகள் எல்லாம் அவளைக் கோபப்படுத்திற்றே அல்லாமல் வேறு பயன் உண்டாக்கவில்லை. அவர் அவளுடைய துர்க்குணங்களைத் தெளிவாய் எடுத்துக் காட்டினதிலே அவள் உக்கிரமாகி தன் அயலாரிடத்தில் சொன்னது: 'மெய்யாகவே இந்தப் போதகர் நான் குணப்படும்படியாய்ப் போதிக்கிற போதகம் எனக்கு விளங்கவில்லை. இவை எல்லாவற்றையும் என்னை மோசப்படுத்தின போக்கிரிக்குச் சொன்னுல் தகும். அவன்தான் மெய்யாகவே பாவி. அவன் குணப்படவேண்டியது அவசியந்தான். அவகேடானதொன்றும் செய்யாதிருக்கிற எனக்கு இவைகளைச் சொல்லுகிறதென்ன? குற்றம் இல்லாத ஜீவனம் பண்ணிவருகிறேனே, நான் சிறு பிள்ளைமுதலே தடைகள் உண்டானுலே அன்றி மற்றப்படி கோவிலுக்குப் போகாதிருந்ததில்லையே. ஒவ்வொருநாளும் ஜெபம்பண்ணி வருகிறேன். நான் சுறுசுறுப்புள்ளவளும் வீட்டுக்கு நல் முதலாளியுமாய் இருக்கிறேன். நான் ஒருவரையும் ஒரு காசுதானும் ஏய்த்தது இல்லை. என் வீட்டுக்கு வருகிற ஒரு ஏழையையும் நான் வெறுமையாய் அனுப்பினது இல்லை. இன்னம் நான் என்ன செய்யவேண்டியது? நான் குற்றஞ் சாட்டப்படத்தக்கவள் அல்ல. ஊரிலுள்ள மிகப் பக்தி உள்ளவர்களில் என்னை ஒருத்தியாக எண்ணி போதகர் என்னை மதிக்கவேண்டியதாமே' என்றுள். அவள் அடுத்தவர்களிடத்தில் பேசின அவ்வளவு தாராளமாய் போதகர் இடத்தில் பேசாதிருந்தாலும், அவள் அவரிடத்தில் பேசிய சில வார்த்தைகளால் அவள் இன்னம் நல்லுணர்வு அடையவில்லை என்று அறிந்துகொண்டு, அவளை எப்படியாவது நல்லுணர்வுக்குக் கொண்டுவரவேண்டியது தமது

Koviloor Acadamy

கடமை என்று எண்ணி, கர்த்தரையும் பிறனையும் சிநேகிக்கவேண்டிய இரண்டு கற்பனைகளை அவளுக்கு நினைப்பூட்டி, அவள் இருதயத்தை விரும்புகிற கர்த்தரின் சிநேகத்துக்குத் தூரமாக தன் பணத்தை மட்டு மிஞ்சி நேசித்து பொன்னைத் தனக்குத் தெய்வமாக்கிக்கொண்டு இருக்கிறதையும் சுறுசுறுப்பும் வீட்டுக்கு நல் முதலாளியுமாய் இருக்கிருள் என்று தன்னைப் புகழ்ந்துகொள்ளுகிற தற்புகழ்ச்சியானது தன் விக்கிரகத்துக்குச் செலுத்தும் வணக்கத்தின் ஓர் பாகம் என்றும் அவள் மற்றவர்களை நேசிக்கும் நேசத்தைப்பற்றி அவள் தன் புருஷனுக்குச் செய்துவந்த நிந்தனைகளையும் அவன் பெற்ருருக்கு அவள் செய்துவந்த கொடுமைகளையும் அந்த எளிய தாய்தந்தையற்ற பெண்ணுக்கு நடப்பித்துவந்த நிஷ்டூரங்களையும் தன் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை அற்பமாய் எண்ணி அசட்டைசெய்து வருவதையும் அவளுக்கு எடுத்துக்காட்டி, அவள் ஏழைகளுக்கு இரங்கினுள் என்று சொல்வதெல்லாம் தன் மனச்சாட்சி தன்னை வாதிக்காமல் அமர்ந்திருக்கச்செய்த காரியம் என்றும் அவள் கோவிலுக்குப் போய்வந்தாலும் அவள் இருதயத்தில் வேறெரு தெய்வம் குடிகொண்டு இருப்பதால் அது மெய்யாராதனை அல்லவென்றும் அவள் இருதயம் விக்கிரகாராதனைக்கு இடங்கொடுக்குமட்டும் அவள் செய்யும் ஜெபங்களும் தருமங்களும் அவள் குற்றத்தை அதிகரிக்கச் செய்யுமே ஒழிய வேறில்லை என்றும் அவளுக்கு அறிவித்து, பரிசேயன் ஆயக்காரனுடைய காரியத்தை விவரித்து, ஆயக்காரனுடைய ஆவியோடு கர்த்தரண்டைக்கு வரும்படியாய் ஏவிவிட்டார். அவள் மனச்சாட்சியை எழுப்பிவிட இவ்வளவெல்லாம் பேசினதோடுகூட கிறிஸ்துவின் அன்பையும் அவர் பாவிகளுக்காகப் பட்ட பாடுகளையும் அவர்கள் எத்தனை பெரிய பாவிகளாய் இருந்தாலும் அவர்கள் அவரண்டை வந்து மன்னிப்புக்காகக் கெஞ்சினுல் வெகு மனப்பூர்வமாய் மன்னிப்பை அருளுவார் என்றும் இப்படித் தம்மால் ஆனமட்டும் பலவிதமாய் அவளுக்கு உணர்வு உண்டாக பிரயாசப்பட்டுவந்தார். அவள் மனச்சாட்சி கடினப்பட்டுப் போனதால் இவைகளுக்கெல்லாம் அவள் செவிகொடாமல் தனக்காக ஒருவரும் இரக்கம் பாராட்டவில்லையே, தன் நிர்ப்பந்த நிலைமைக்காக ஒருவரும் பரிதாபப்படவில்லையே, தன்னைப்போல அபாக்கியமான ஸ்திரீ உலகத்தில் இல்லை என்று அழுது புலம்பினுள். போதகர் தானும் தன்னை ஆற்றித் தேற்ருமல் தன்னை மிகவும் பொல்லாதவள் என்று சொல்லுகிருரே என்று சொல்லி வேறெரு வார்த்தைக்கும் செவிகொடாமல் விம்மி விம்மி அழுதாள். நல்ல போதகர் தமது பிரயாசம் எல்லாம் வீண் என்று அறிந்து அவளைவிட்டு எழுந்து அவள் தனக்காக ஜெபம்பண்ணுதேபோனுலும் அவளுக்காக அவர் ஜெபம் பண்ணிக்கொண்டே புறப்பட்டார். புறப்படுகையில் ஐசுவரியங்களை

Koviloor Acadamy

உடையவர்கள் கர்த்தருடைய ராச்சியத்தில் பிரவேசிப்பது எத்தனை வருத்தமான காரியம் (மாற். 10: 23) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தையைத் தியானித்துக்கொண்டுபோனார். பண ஆசை மனதில் குடிகொள்ளும்போது அது எல்லாப் பொல்லாப்புக்கும் வேராய் இருக்கிறதென்பது எத்தனை திட்டமான சத்தியம். இந்த ஸ்திரீ தான் கோவிலுக்குப் போய்வந்தால் கர்த்தருக்குரிய கடமைகளையும், தன் வீட்டண்டை வரும் ஏழைகளுக்கு ஒரு துண்டு ரொட்டி அல்லது ஒரு கை அன்னம் கொடுப்பதால் பிறர்க்குரிய கடமைகளையும் செய்தாயிற்று என்று எண்ணினாள். பின்னும் அவள் பணம் சேர்க்கும் ஆசையைக்கொண்டு வெகு சுறுசுறுப்பாய் உழைத்தது புண்ணியங்களில் ஒன்றென்று நினைத்தாள். போதகர் ஜேம்ஸ் இருந்த இடத்தைக் கடந்துபோகையில் தமக்குள்ளே சொல்லிக்கொண்டது: ‘ஆ! ஐசுவரியம் உள்ளவர்கள் தங்களைப் பாக்கியவான்கள் என்று எண்ணி தங்களை வஞ்சிக்கிறார்களே, இவள் இகழ்ந்து அசட்டை செய்த ஜேம்ஸ் மேரி என்றவர்கள் இந்தத் தோட்டத்திலே இருந்தபோது அனுபவித்த மெய்யான சந்தோஷத்தை இவள் ஒரு மணிநேரமாவது அனுபவிக்க இல்லையே’ என்றார்.

இவளுக்கு இருமல் அதிகரித்து நாளுக்கு நாள் பலவீனப்பட்டாள். அப்படி இருந்தும் தன்னைச் சுகப்படுத்திக்கொள்ள யாதொன்றைச் செலவழிக்க அவள் பேராசை இன்னும் பெரிதாய் இருந்தது. அவள் சரீரத்துக்காவது ஆத்துமத்துக்காவது யாதொரு ஆறுதல் இல்லாமல் மிகுந்த கஸ்தியடைந்திருந்தாள். அவள் உயிரோடிருந்த வரையில் நல்ல போதகர் அடிக்கடி அவளண்டை வந்து அவள் குணப்படுவாள் என்ற நம்பிக்கையோடு அவளை இரட்சகரண்டைக்கு இழுக்கப் பிரயாசப்பட்டு அவளுக்காக ஜெபம்பண்ணிக்கொண்டுவந்தார். கடைசியாய் அவள் தன் நல்ல இளவயதில் குணப்படாத நிலைமையிலே இருந்து இறந்துபோனாள்.

நேசா! நாம் இவ்வுலகின் பொக்கிஷங்களில் பாக்கியத்தைத் தேடினால் நாம் அடையக்கூடாதென்றும் இச்சீவனுக்குரிய பொருட்கள் நம்மை வேதனைக்கு உள்ளாக்குமே ஒழிய வேறில்லை என்றும் மேலே சொல்லிய பேராசைக்காரியின் காரியங்களைப் பார்ப்பதில் அறிந்து கொள்ளலாம். அவளுக்குப் போதகர் சொன்ன அருமையான போதகங்களை உன் ஞாபகத்தில் வைத்து மேலான மெய்ப்பொருளில் உன் மெய்ச் சந்தோஷத்தை அடைய வகைபார்ப்பாயாக.

Koviloor Academy

22. அதிகாரம்

பதிற்பலன், கெட்ட மார்க்கம், கெட்ட முடிவு

மேரி கவுண்ட் பிரபுவின் வீட்டாரோடு தலைநகரிக்குப் போனாள். ஒருநாள் காலமே ஒரு விருத்தாப்பிய குரு மேரியைப் பார்க்க விரும்பினதாக அவளுக்கு அறிவிக்கப்பட்டது. அவள் அவரிடத்தில் போக, அவர், 'மிகவும் மோசமான வியாதிக்கு உட்பட்டிருக்கிற ஒரு ஸ்திரீ உன்னோடு பேச விரும்பி என்னை உன்னண்டைக்குப் போய் உன்னை அழைத்துவரக் கேட்டுக்கொண்டாள். அந்த ஸ்திரீ சாவுக்கு ஏதுவான நிலைமையில் இருக்கிறாள். அவள் தன் பேரையாவது தனக்கு வேண்டியது இன்னதென்பதையாவது எனக்குச் சொல்லாமல் உனக்குமட்டும் அறிவிக்க விரும்புகிறாள். ஆதலால் நீ என்னோடு கூட வர உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்' என்று சொல்ல, பிரமித்து அவள் சீமாட்டியண்டைபோய்க் காரியத்தைச் சொன்னாள். சீமாட்டி அந்தக் குருவை நல்ல உத்தமர் என்று அறிந்திருந்தபடியால் அவரோடுகூடப் போக மேரிக்கு உத்தரவுபண்ணி அவள் திரும்புகையில் பத்திரமாய் வந்து சேர ஒரு வேலைக்காரனையும் கூட அனுப்பினாள். அவள் தான் முன் அறிந்திராத வீதிகள் மார்க்கமாய் அவரோடு சென்று பிறகு அழுக்கான முடுக்குகள் வழியாய்ப் போய்க் கடைசியாய் மிக நிர்ப்பந்தமான வீடுகளுள்ள ஓர் இடத்தில் சேர்ந்தாள். குரு ஒரு உயரமான ஐந்தடுக்கு மெத்தை வீட்டுக்குள் பிரவேசித்து மேரிக்கு முன்னாக ஏறிப்போனார். இவளும் கூடத் தொடர்ந்து கடைசியான மேலிரண்டு மெத்தையும் மிகவும் பாழாய் இருக்கக் கண்டு நடுக்கத்துடனே ஏறிப்போனாள். அங்கே உடைந்த துண்டு துண்டு பலகைகளால் பொருதப்பட்டிருந்த ஒரு கதவண்டை சேர்ந்தார்கள். குரு அங்கே நின்று சொன்னது: அந்த ஸ்திரீ இதற்குள் தான் இருக்கிறாள். நீ அங்கே புகுமுன் இது உனக்குத் தேவை என்று சொல்லி வாசனை வீதர் ஒன்றை எடுத்து மேரியினுடைய கைலேஞ்சியில் வார்த்து நாற்றம் உனக்கு அடிக்காதபடிக்கு இதை முகத்தில் பிடித்துக்கொள் என்று கற்பிக்க உடனே இருவரும் உட்புகுந்தார்கள். அந்த இடம் மேரி தான் ஒருபோதும் பார்த்திராத அவ்வளவு நிர்ப்பந்தமாயும் இருட்டும் அழுக்குமாயும் ஜன்னல்களின் கண்ணாடிகள் உடைந்து அழுக்குக் கந்தைகளால் திணிக்கப்பட்டதாயும் இருந்தன. அதில் இருந்த சாமான்களோ ஒரு பரிதாபமான கட்டிலும் அதில் ஒரு அழுக்கும் பீற்றலுமான போர்வையும் ஒரு உடைந்த நாற்காலியும் கைப்பிடியில்லாத ஒரு கூஜாவும் இருந்தன. ஆனால் அங்கே ஏழைச் சிருஷ்டி கால் நீட்டிப் படுத்திருந்ததே இவை

Koviloor Acadamy

கள் எல்லாவற்றிலும் பயங்கரமான கண்காட்சியாய் இருந்தது. அவள் சத்தம் மெத்த மெதுவும் தடித்ததுமாய் இருந்தது. அவளைப் பார்க்கையில் ஒரு எலும்புக்கூடு பேசுகிறதுபோல் அவ்வளவு மெலிவாய் இருந்தாள். மேரி முந்தி இப்படிப் பரிதாபக் கோலமாய்க் கிடக்கிற ஸ்திரீ யார் என்று அறிந்துகொள்ளக்கூடவில்லை. அப்புறம் ஒரு காலத்தில் வசந்தகால புஷ்பமலர்போல் இருந்த மார்கரெட் என்ற சீமாட்டியின் தாதிதான் இங்கே கிடக்கிற நிர்ப்பந்த ஜெந்து என்று வெகு கடினத்தோடு நம்பிக்கைகொண்டாள். மரணப் படுக்கையில் மிகக் கேவலக் கோலமாய்க் கிடக்கிற இந்த ஸ்திரீ மனவேதனை அடைந்து மேரி என்பவள் கவுண்ட் பிரபுவின் வீட்டாரோடு பட்டணத்தில் வந்திருக்கிறாள் என்று கேள்வியாகி அவளைப் பார்க்கவும் அவளுக்கு மோதிர விஷயத்தில் செய்த துரோகத்துக்கு மன்னிப்புக் கேட்கவும் விரும்பி தன் பேரை மேரி அறிந்தால் பழிவாங்கும் சிந்தையால் தன்னை வந்து பார்க்கமாட்டாள் என்ற எண்ணங்கொண்டு தன் பேரை அறிவிக்காமல் யாரோ ஒருவர் அழைக்கிறதுபோல அறிவிக்க தன்னைப் பார்க்க வந்த குருவைக் கேட்டுக்கொண்டாள். மேரி அதிக ஆழமாய் ஆலோசித்து என்ன பேசுவதென்று அறியாமல்போய்ப் பிறகு தான் அவளுக்கு வெகு நாளுக்குமுன்னே அவள் செய்த துரோகத்தை மன்னித்துவிட்டதாகவும் யாதொரு விசனமும் தனக்கு அதின் பிறகு அவள்பேரில் இல்லை என்றும் அவளுக்கு உண்மையாய்ச் சொல்லி, தான் அவளுக்கு மன்னித்ததற்கு அத்தாட்சியாக அவள் பாவங்களைக் கர்த்தர் அவளுக்கு மன்னிக்கவேண்டும் என்றும் மெய்யான இரட்சிப்பை அவள் அடைய கர்த்தர் அவளுக்கு இரக்கம் பாராட்டவேண்டும் என்றும் அவளுக்காக ஜெபம் பண்ணிவந்ததை அறிவித்து, கெட்ட குமாரனைப்போல் இப்போது அவள் தன் பாவங்களை அறிக்கையிட்டு மெய்மனஸ்தாபத்தினால் அவருடைய புண்ணியங்களைப் பற்றிப் பிடிக்க அவளுக்கு வெகுநேரமாய்ப் புத்தி சொன்னாள். அவள் அவநம்பிக்கையில் ஆழ்ந்துபோனபடியால் மேரியின் வார்த்தைகள் பலிதப்படவில்லை. மார்கரெட் அரமனையிலிருந்து தள்ளப்பட்டபின் கெட்டமார்க்கமாய் ஜீவனம்பண்ணி இப்படிப்பட்ட துயர நிலைமைக்குட்பட்டாள். அந்த நல்ல குரு தன் சபையாரை விசாரித்துக்கொண்டு வருகையில் இவளைக் கண்டுபிடித்து இவள் மனவேதனையைப் பார்த்து மேரியை இவள் படுக்கையண்டைக்கு அழைத்துவந்தார். மேரி வெகுநேரமாய் அவளிடம் இருந்து அவள் ஆறுதல் அடைந்துகொள்ளும்படியான அநேக காரியங்களை அவளுக்குச் சொல்லிக்காட்டினாள். அதற்குமேல் நாழிகை ஆனபடியால் அவளிடத்தில் போக விடைபெற்றுக்கொண்டு அவள் தனக்குச் செய்த எல்லாவற்றையும் அவளுக்கு மனப்பூர்வமாய் மன்னித்துவிட்டதை

Koviloor Acadamy

மறுபடியும் நிச்சயமாய் அறிவித்துப் புறப்பட்டுப் போய்விட்டாள். அரமனே சேர்ந்தவுடனே மார்கரெட்டுக்காக சீமாட்டி இடத்தில் பரிந்து பேசினதின்பேரில் சீமாட்டி சுத்தமான மெல்லிய வஸ்திரங்களையும் ருசிகரமான போஜன பதார்த்தங்களையும் பின்னும் அவளுக்கு வேண்டியவைகளையும் கொடுத்தனுப்பினுள். ஆனுல் மார்கரெட் இந்தச் சிலாக்கியங்களுக்கு அதிக நாள் பாத்திரமாய் இருந்ததில்லை. அவள் 23-ம் வயதில் மரித்து பாவ மார்க்கமானது தன்னேடு நிர்ப்பந்தத்தைக் கொண்டுவருகிறது என்கிற துக்கமான திருஷ்டாந்தரத்தைப் பின்வைத்துப்போனுள். அவள் தன் மரணத்தில் குணப்பட்டாள் என்பதற்கு யாதொரு நம்பிக்கையும் இல்லை.

பிரிய நேசா! மார்கரெட்டை மறக்காதே. பாவத்தை அமிர்தமாக ருசித்து திரிகிறவர்கள் தப்பாமல் மார்கரெட் என்பவளுடைய நிலைமைக்கு வருவார்கள். மேரியைப்போல் மன்னிக்கிற சுபாவம் உனக்குண்டா? கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த ஆவியின்படி ஜீவனம் பண்ணுகிறவர்களுக்கு மாத்திரம் இந்த சுகிர்த இலட்சணம் உண்டு. நீ பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு நடக்கிருயா? அல்லது லோகத்துக்குமட்டும் வெளிவேஷத்தில் கிறிஸ்தவனுய்த் தோன்றுகிருயா? காலம் போகுது. நேசா! புத்திமானுய் நடந்துகொள்.

23. அதிகாரம்

மேரி என்பவள் ஐஸ்பர்க் ஊருக்குப் போன சங்கதி. அங்கே மேரிக்கு நடந்த மிக மேன்மையான விவாகம்

மிகவும் இன்பமான ஒருகாலத்தில் கவுண்ட் பிரபுவும் அவர் வீட்டார் அனைவரும் பட்டணத்தை விட்டு ஐஸ்பர்க் ஊருக்குப் போனுர்கள். மேரியும் அவர்களோடு வழக்கத்தின்படி ரதத்தில் ஏறி எமிலியாவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு போனுள். சூரிய அஸ்தமனமான வேளையில் அவ்வூரில் சேர்ந்தார்கள். மேரி தான் அறிந்திருந்த இடங்களை ஒன்றின்பின் ஒன்முய்ப் பார்த்துக்கொண்டே போனுள். ஒருகாலத்தில் தான் அவைகளை அழுகையோடு விட்டுப்போன சங்கதியை அப்போது நினைவுகூர்ந்து, கர்த்தர் அதற்குப்பின் நடத்திவந்திருக்கிற சகல ஆச்சரியமான விஷயங்களுக்காகவும் அவரை முழுமனதோடு ஸ்தோத்திரித்துக்கொண்டே போனுள். அவள் தான் விட்டுப்போன வீட்டை மறுபடியும் பார்ப்பாள் என்று நினைத்ததே இல்லை. மேலும் தனக்கு இப்படிப்பட்ட ஆச்சரியமான மாறுதல் உண்டாகி சீமாட்டி புத்திரியின் பக்கத்தில் உட்கார்ந்து சவாரிமார்க்கமாய்த் தன் பிறந்த ஊருக்கு வருவாள் என்று அவள் கனவுதானும்

Koviloor Academy

கண்டதில்லை. மிகவும் அபாத்திரப் பாவியாகிய தனக்குக் கர்த்தர் செய்து வந்திருக்கிற ஆச்சரியமான இத்தனை ஏராள நன்மைகளுக்கெல்லாம் தான் எந்த ஈட்டைக் கொடுக்கலாம், எவ்விதமாய் அவரை ஸ்தோத்திரிக்கலாம் என்று சிந்தித்து, ஓ என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டாள். ரதமானது கோட்டை வாசற்படியிலே போய் நின்றமாத்திரத்தில் வேலைக்காரர் எல்லாரும் தகுந்த மரியாதை வணக்கத்தோடு வந்து ஆகவேண்டியவைகளை நடப்பித்தார்கள். மேரியை அறிந்தவர்கள் எல்லாரும் அவளை மகா பிரியமாய் மினவி அவளுக்குக் கிடைத்த நல்ல அதிஷ்டத்திற்காக அவளை வாழ்த்தினார்கள். கவுண்ட் பிரபுவும் அவர் வீட்டார் அனைவரும் வந்த செய்தியை நியாயாதிபதியானவர் கேள்வியாகி கவுண்ட் பிரபுவை மினவிக்கொள்ளவும் மேரியைப் பார்த்து அவளுக்கு அவள் பாத்திரமாய் இராத அநேக கஸ்திபாடுகளுக்குத் தாம் காரணமாய் இருந்ததற்காக தாம் அடைந்த துக்கத்தை அவளுக்கு அறிவிக்கவும் வந்தவர்களில் அவர் முந்தினவராய் தீவிரித்து வந்தார். அன்றிரவு மேரிக்குத் தூக்கம் இல்லாமற்போயிற்று. சந்தோஷம் துக்கத்தைப்போல் தூக்கத்தை அகற்றிப்போடுகிறது இயல்புதான். அதிகாலமே கோட்டையில் உள்ளவர்கள் எழுந்திருக்குமுன் மேரி எழுந்து தனது பழைய வீட்டை நோக்கிச் சென்றாள். அந்நேரத்திலும் அவளைப் பார்க்க வாஞ்சையாய் இருந்த அநேக சிநேகிதர்களையும் பிள்ளைகளையும் கண்டாள். அவர்களைக் கடந்து தனது தோட்ட வாசற்படியில் விருத்தாப்பிய குடியானவனையும் அவன் பெண்சாதியையும் கண்டு அவர்களால் சந்தோஷமாய் மினவப்பட்டு அவர்களுடன் வீட்டுக்குப் போனாள். விருத்தாப்பியன், 'நீ முந்தி வீடில்லாமல் இருந்தபோது நாங்கள் எங்கள் இருப்பின் நிழலிலே உன்னை ஏற்றுக்கொண்டோம்; இப்போது நாங்கள் வீட்டைவிட்டுத் தள்ளுண்டபோது இந்த நல்ல வீட்டை எங்களுக்குக் கொடுத்தாய், எங்களுடைய எந்த முதிர்வயதிலே நாங்கள் இங்கே சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடைந்தவர்களாய்க் காலந்தள்ளுகிறோம்' என்றான் அவன் பெண்சாதி சொன்னது: 'ஆம் ஆம், ஒருவன் பின் ஒருவனுக்குச் செய்யும் நன்மைக்கு அவன் அடையும் பதிற்பலன் ஏதென்று யார் அறியக்கூடும்' என்றாள். விருத்தாப்பியன், 'நாம் பதிற்பலன் அடைவோம் என்று எண்ணி நன்மை செய்ததில்லையே, ஆகிலும் அந்நியர்களைச் சேர்த்துக் கொள்ள மறவாதேயுங்கள் (எபி. 13: 2) என்ற எச்சரிப்பு நமது விஷயத்தில் எவ்வளவு உண்மை உள்ளதாய் இருக்கிறது. மேரிப் பெண்ணே, நீ எங்களுக்கு மெய்யாகவே இரக்கத்தின் தூதனாய் இருந்தாய். முறுமுறுப்பில்லாமல் ஒருவருக்கொருவர் இனபட்சமாய் இருங்

Koviloor Acadamy

கள் (1 பேது. 4: 9) என்ற கட்டளையை நாம் ஒருபோதும் மறக்க வொண்ணுது' என்ருன். மேரி குடியானவர்களுடன் வீட்டுக்குள் போனுள். தான் சிறுவத்தில் அந்த வீட்டில் இருந்ததையும் தன் தகப்பன் உட்கார்ந்திருந்த மூலையையும் இன்னும் அந்த வீட்டில் புழங்கினதான அநேக பொருட்களையும் பார்த்து துக்கம் அடைந்து தோட்டத்திற்குள் சென்று தன் தகப்பன் பிரீதியாய் வைத்திருந்த மரங்களைப் பார்த்து அங்கே அழுதுகொண்டாள். கடைசியாய் அவள் தகப்பன் தன்னேடு உட்கார்ந்து அநேகமான விலையேறப்பெற்ற போதகங்களைப் போதித்த இடத்திலே உட்கார்ந்து அவைகளை நினைவுகூர்ந்து தனது நித்திய வீடாகிய பரமண்டலத்தை நோக்கி தன் இருதயத்தை எறெடுத்தாள். ஆனல் அவள் தன் தகப்பன் இவ்வுலகை விட்டு பரமண்டலத்துக்குப் போக எத்தனை வாஞ்சையாய் இருந்தான் என்பதை நினைத்து அவனுக்காக அழாமல் தாங்கள் இருவருங்கூடி ஜெபம்பண்ணிவந்த அந்த இடத்தில் தான் இப்போ தனியே தன் உள்ளத்திலே பெருமூச்சுவிட்டு ஜெபம்பண்ணி விருத்தாப்பியரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு கோட்டைக்குத் திரும்பினுள். அப்புறம், சொல்வதற்கு எதுவான யாதொரு விசேஷ சங்கதிகள் இல்லாமல் சில வருஷங்கள் கடந்தன.

கவுண்ட் பிரபுவும் அவர் வீட்டார் அனைவரும் வருஷத்துக்கு ஒரு முறை அந்த இடத்துக்குச் சவாரி வந்து சிலகாலம் தங்கி இருந்து போவது வழக்கமாய் இருந்தது. மேரி தான் பிரியம் வைத்திருந்த ஊர்ப்பிள்ளைகளை மறந்ததில்லை. சீமாட்டி எமிலியா மேரியோடு அநேகந்தரம் போய் ஊர்ப்பிள்ளைகளுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து வந்ததும் அன்றி அவர்களுக்குப் புஸ்தகமும் கொடுத்து பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியும் தாங்களே அங்கிருக்குந்தனையும் படித்துக்கொடுத்தும் வந்தார்கள். வஸ்திரம் வேண்டியவர்களுக்கு மேரியும் எமிலியாவும் தங்கள் கைகளால் சிறுசிறு உடுப்புகளை உண்டுபண்ணிக் கொடுத்து வந்தார்கள்.

ஒருகாலையில் அவர்கள் ஒரு அங்கியைத் தைத்துக்கொண்டிருக்கையில் மேரியை ஊரைவிட்டு ஒட்டும்படி தீர்ப்பிட்ட நியாயாதிபதியானவர் வந்து மேரியோடு சில நிமிஷங்கள் பேசக் கேட்டுக்கொண்டார். எமிலியா பிரமித்து மேரியைத் தனியேவிட்டு வெளியே போய்விடவே, அவர் மேரியுடனே 'என் குமாரன் உன்னை விவாகம் பண்ணிக்கொள்ள விருப்பமாய் இருக்கிருன். நீ சம்மதித்தால் உனக்கு இப்போது போஷகர்களாகிய கவுண்ட் பிரபுவிடத்திலும் அவர் பத்தினியிடத்திலும் பேசிக்கொள்ளுகிறேன்' என, மேரி முந்திக் கூச்சத்தால் பிரதியுத்தரம் சொல்லப் பின்வாங்கி அப்புறம் அவள்: சீமாட்டி

Koviloor Academy

அவர்கள் இஷ்டப்படி ஆகவேண்டும் என்று வாய்க்குள்ளே சொன்ஞள். இதைப்பற்றி அவள் சங்கதி என்னவென்ருல், அவள் அவர் குமாரன் பிரெதரீக் என்பவனை அதிகமாய் மதித்துவந்தாள். அவன் உண்மையாகவே ஒரு நல்ல மனுஷனும் அழகிய புருஷனுமாய் இருந்தான். அவர்கள் இந்த இடத்துக்கு வரும்போதெல்லாம் அவனைக் காணும் சமயங்கள் அவளுக்கு உண்டாய் இருந்தது. முதலிலே அவனேடுகூடி சம்பாஷிக்க விரும்பினுள். ஆனல் அவன் தன் பேரிலே பிரியங்கொண்டிருக்கிருன் என்று அறிந்தபோது தான் அப்படிக்கொத்த சம்பந்தத்துக்குப் பாத்திரமான புத்திரி அல்ல என்று எண்ணிக்கொண்டு அதுமுதலே தன்னை அவன் சங்காத்தத்தினின்று விலக்கிக்கொண்டாள். அவன் தகப்பனுகிய நியாயாதிபதி வந்து தன்னிடத்தில் சங்கதியைச் சொல்லும்வரையில் நாள் வட்டத்திலே அந் நினைப்பைக் கட்டோடே மறந்திருந்தாள். இப்போது நியாயாதிபதியானவர் அவள் குறிப்பை அறிந்துகொண்டு அவளிடத்தில் விடைபெற்று பிரபு தமது பத்தினியோடிருக்கையில் தாம் வந்த சங்கதியை அறிவிக்கவே, இருவரும் அவர் கேட்டுக்கொள்ளுதலுக்கு இணங்கிச் சொன்னது: 'மேரி பிரெதரீக்குக்குச் சரியான ஜோடிதான். அவனும் அவளுக்கேற்ற புருஷன்தான். நாங்கள் இதைப்பற்றி ஏற்கனவே பேசிக்கொண்டிருந்தோம்; ஆனல் நாங்களாய் முதல் பேச்சுவிடுவது மரியாதை அல்ல என்று எண்ணி அமர்ந்திருந்தோம். நீர் இப்போது சொல்லுகிற காரியம் எங்களுக்கு மெத்த சந்தோஷம்' என்ருர்கள். பின்னும் சீமாட்டி சொன்னது: 'என் நல்ல சிநேகிதரே, நான் உமக்கு மனதார நன்றிவந்தனஞ் சொல்லுகிறேன், மெய்யாகவே மேரி பெண் சாதிகளுக்குள்ளே மிக உத்தமியானவள், அவள் இதற்குச் சம்மதிப்பாளானல் நல்ல அதிஷ்டந்தான், மேரி தரித்திரம் என்னும் பள்ளிக்கூடத்தில் நன்ருய்ப் படித்துத் தேறியிருக்கிருள். அவள் எங்களிடத்திற்கு வருகிறதற்கு முன்னமே நல்ல குடித்தனக்காரியும் பட்சமும் சாந்தமும் அமரிக்கையுமான ஸ்திரீ. இப்போது எங்களுடன் கூடியிருப்பது முதலே சகலவித மேரை மரியாதைகளையும் அறிந்துகொண்டாள். அவள் சீமாட்டிமார்களில் ஒருத்தியாக அழைக்கப்படபாத்திரியான நல்ல யோக்கிய ஸ்திரீ, உமது குமாரன் நல்ல அதிஷ்டமுள்ளவன்தான்' என்ருள்.

மேரியுடைய சம்மதத்தை அறிந்தவுடனே சீமாட்டி அதற்கான பிரயத்தனங்கள் செய்யக் கட்டளை பிறப்பித்தாள். கலியாணவஸ்திரம் தயாரானது, கலியாணத்துக்கு வேண்டிய காரியங்கள் எல்லாம் வெகு தாராளமாய் சவதரித்துக் கொடுக்கப்பட்டது. வெகு பாடுகளுக்குக் காரணமாய் இருந்த வயிரமோதிரத்தையே விவாக மோதிரமாகத் தீர்மானித்து ஏர்லென் பிரீனென் என்ற ஊரின் நல்ல போத

Koviloor Acadamy

கரை அழைப்பித்து விவாக முறைமையை நிறைவேற்றி விவாகத்தை முடித்தார்கள்.

விவாகநாள் வெகு சிறப்பாய் இருந்தது. இதைக்குறித்து நாம் அதிகமாய்ப் பேசவேண்டியதில்லை. மேரி தன் விவாக உடையோ டிருக்கையில் மிக அழகியாய்க் காணப்பட்டாள். நல்ல குணசாலி யாகிய எமிலியா சீமாட்டி மேரியுடைய பெண்தோழி. மேரியால் உதவிபெற்ற அநேகர் அப்போது அங்கே கூடியிருந்தார்கள். அவர் களில் காட்டுக்கார அந்தோனி கிழவனும் இருந்தான். அவள் அவன் பழைய சிநேகிதனின் மகள் ஆகையால் இந்த விவாகவிஷயத்தில் அதிக சந்தோஷங்கொண்டாடினன். போதகரும் மிக எழுப்புதலான ஆராதனையைச் செய்துமுடித்தார். விவாகத்தின் காலை போஜனம் எமிலியா சீமாட்டிக்கே செய்ததுபோல ஆயத்தமாய் இருந்தது. கலி யாணவிருந்து மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த எல்லா அலங் கரிப்பையும்விட புஷ்பக் கூடையையே எமிலியா தன் சொந்தக் கைகளால் புஷ்பங்களைக்கொண்டு அலங்கரித்து எல்லாருடைய கண் களுக்கும் தைக்கும்படியாய் வைக்கப்பட்டிருந்தது. காலைபோஜனத் துக்குப்பின் போதகர் புஷ்பக்கூடையைத் தொட்டுக்காட்டி மேரிக்குச் சொன்னது: 'இந்தப் புஷ்பக்கூடை உன்னுடைய எல்லாப் பாடுகளுக் கும் உனக்கு இப்போது உண்டாகிய எல்லாப் பாக்கியங்களுக்கும் காரணமானதால் அதை உனக்குச் சந்தானபரம்பரை ஞாபகக்குறிப் பாக வெகு பதனமாய்ப் பத்திரப்படுத்திவை' என்றார்.

அருமை நேசா! காரியமாறுதல்களைப் பார்த்தாயா? ஆச்சரியமான வர் என்பது கர்த்தருடைய திருநாமங்களில் ஒன்றல்லவா? ஆச்சரிய மானவர் அதிசயமானவைகளை நடப்பிப்பது அருமையோ? அவர் வெட்டாந்தரைகளை நீரூற்றாகவும் தண்ணீர்த் தடாகங்களை வறண்ட தலமாகவும் மாற்றுகிறவர். ஆதலால் அவருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக சமுத்திரம் பொங்கிக் கொந்தளித்தாலும், பூமி அவர்களை விழுங்கப்பார்த்தாலும், பருவதங்கள் அவர்கள்மேல் சாய்ந்தாலும், லுத்தர் என்பவர் சொன்னதுபோல உவர்ம்ஸ் பட்டணத்தின் வீடுகளி லுள்ள ஓடுகளெல்லாம் பிசாசாய்த் திரண்டு கூடினாலும் நாம் பயப் படோம். ஏனெனில் சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக் கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் என்று தைரிய மாய் வரும் துன்பங்களையெல்லாம் பொறுமையுடன் அனுபவித்து கர்த்தருடைய காலம் வரும்மட்டும், அடிக்கும் அவரது பட்சமுள்ள கையை முத்திசெய்து அவர் கையின்கீழ் தாழ்ந்திருக்கிறார்கள். அவ ருக்குச் சித்தமானால் இம்மையிலும் அவர்களை அவர்கள் சத்துருக்கள் நடுங்கிப் பின்வாங்கித் தரையில் விழ அவர்களை இந்த மேரியைப்

Koviloor Academy

போல் உயர்த்துவார். ஆனதால் நேசா! துன்பம் வந்தால் முறுமுரு மல் சாந்தமான மனதுடனே சகித்துக்கொள். ஏனெனில் பட்டயம் வெட்டினாலும் பட்டயத்தின் பிடி கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது.

24. அதிகாரம்

ஞாபகக் கட்டிடம். மேரியின் தகப்பன் கல்லறை கட்டப்பட்டது. மேரியின் கடைசி முடிவு

எமிலியா தான் மேரிக்குச் சொல்லியிருந்த வார்த்தையை மறந்து போனதில்லை. அவள் கல்லறையைக் கட்டும்படியாக ஏற்படுத்தின திட்டம் சுளுவானதாய் இருந்தாலும் மிக அலங்காரமாய் இருந்தது. அது ஒரு கருங்கல். அதில் அந்த நல்ல மனிதனுடைய பேரும் வயதும் வெட்டப்பட்டு பொன் எழுத்தாய் இடப்பட்டது. அதின் கீழ் 'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன், என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் மரித்தும் பிழைப்பான்' (யோவா. 11: 25) என்ற இயேசு சுவாமியின் வார்த்தைகளும் மேரி முதல்முதல் சிங் காரித்திருந்த வண்ணமாய் புஷ்பக் கூடையையும் அதின் கீழ் 'எல்லா மாமிசமும் புல்லும், மனுஷனுடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலும் இருக்கிறது. புல் உலர்ந்து பூ உதிரும். கர்த்தரு டைய வசனமோ என்றைக்கும் நிலைநிற்கும்' (1 பேது. 1: 24, 25) என்ற சத்திய வார்த்தைகளும் வெட்டப்பட்டது.

ஏர்லென் பிரீனென் என்ற ஊரின் போதகர் இப்படி வேலை செய் யப்பட்ட கல்லைப் பார்த்து சந்தோஷப்பட்டு தாமே அதை ஜேம்ஸ் சேமிக்கப்பட்டிருந்த சரியான இடத்தின்மேல் வைத்துக் கட்டிமுடித் தார். கல்லறையானது மரங்களால் நிழலிடப்பட்டும் மேரி என்பவ ளால் வைக்கப்பட்ட ரோஜாச் செடியால் சூழப்பட்டதுமாய் இருந் தது. போதகர் தம்மண்டைக்கு வந்துபோன எல்லாரையும் இந்தக் கல்லறையண்டைக்கு அழைத்துப்போய்க் காண்பித்தார். அவர்களில் சிலர் புஷ்பக்கூடை வெட்டப்பட்டிருப்பது நல்ல கருத்துதான் என் றார்கள். போதகர் இந்தக் கூடை மகிமையான ஞாபகக்குறியும் ஆழ மான கருத்துமுள்ளது என்று சொல்லி, நடந்த மேற்படியாருடைய விருத்தாந்தங்களை எல்லாம் விவரிப்பார். அதைக் கேட்டவர்களில் நல்லெழுப்புதலும் உணர்வும் அடையாதவர்கள் இல்லை.

மேரி கர்த்தர் தனக்குக் கிடைக்கப்பண்ணின நல்ல புருஷனோடு பாக்கியமாய் வாழ்ந்து மகிமையான முடிவை அடைந்து தன் இரட்சக ரண்டைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

Koviloor Acadamy

எனக்கு அருமையான நேசர்களே! மேற்படி போதகரைக் கேட்டவர்களில் உணர்வு அடையாதவர்கள் ஒருவரும் இல்லாததுபோல, நான் இப்போது என் லௌகீக ஊழியத்தின் நடுவிலே வெகு பிரயாசத்தோடு மொழிபெயர்த்து எழுதின இந்தச் சிறிய கதையை நீங்களும் உங்கள் நித்திய நன்மைக்கென்று ஜெபத்தோடு கையாடி பிரயோஜனப்பட சிலுவையில் அறையுண்ட இயேசு சுவாமியை முன்னிட்டு உங்களை மிகத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறேன். ஒரே ஒரு ஆத்துமாவாவது இதினால் பிரயோஜனம் அடைந்தால் என் பிரயாசம் விருதாவாய் இராது.

Koviloor Acadamy

ஞானப்பாட்டு. L. M.

1. யேசு உத்தம மித்திரர்
பாவஞ் சாபஞ் சுமந்தவர்
அவர்க்கு எல்லாம் சொல்வது
ஆதாயம் தானே நமக்கு.

2. நாம் அமைவற்றிருப்பதேன்?
எடா துக்கம் எடுப்பதேன்?
நேசர்க்கறிவியாததே
அதற்கெல்லாம் காரணமே.

3. துக்கஞ் சோதனைகள் உண்டோ?
உனக்கு வேறுவதுண்டோ?
சோர்வடையாதவை எல்லாம்
நேசர்க்குச் சொல்ல லாபமாம்.

4. நம் பாவஞ் சாபம் அனைத்தும்
சுமந்த நம் நல் மீட்பரும்
பத்தா கர்த்தாவும் சொல்வதை
உணர்தலே நம் கடமை.

5. நாம் பலவீனம் உள்ளோரோ?
கவலைகொண் டலைவோரோ?
அவர் நம் பதிலாள் சொல்வோம்
அவர் அடைக்கலம் என்போம்.

6. இஷ்டர் உன்னை இகழ்ந்தாரோ?
நேசர் உன்னைப் பிரிந்தாரோ?
அதெல்லாம் அவர்க்கறிவி.
அவர் உன் தஞ்சம் என்றறி.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1940. B 2582

Koviloor Acadamy

Koviloor Acadamy

சி. எல். எஸ். வெளியிட்டுள்ள சில கதைகள்

		ரூ.	அ.	பை
கிறிஸ்மஸ் கரல். **Christmas Carol** ...	...	0	12	0
ராபின்ஸன் குறூஸோ. **Robinson Crusoe**	...	1	0	0
பால வியாபாரிகள். **The Little Merchants.** By Maria Edgeworth	...	0	8	0
பொன்மணிக் கதைகள். **Golden Tales.** By M. L. Christlieb	...	0	6	0
இயேசுநாதரின் இனிய சரிதை. **The Story of Jesus.**		0	2	0
சங்கீதமணி தாவீதரசன். **The Story of David**	...	0	2	0
தறுகண்மை வாய்ந்த தானியேல் வீரன். **The Story of Daniel**	...	0	2	0
சற்குணம் வாய்ந்த தனயன் யோசேப். **The Story of Joseph**	...	0	2	6
பிரிஸ்கில்லாளும் அவள் தோழர்களும். **Priscilla and her Companions**	...	0	3	0
அன்பு வெற்றியடைந்த கதை. **The Strength of Love**	...	0	5	0
ஜோதிக்கிரீடம். **The Crown of Light**	...	0	2	6
யோவேல். **Joel, a Boy of Galilee** ...	...	0	14	0
ஹரிதாசி அல்லது மதுபானத்தால் நாசம் அடைந்த ஓர் குடும்பம். **Haridasi**	...	0	4	6
இரண்டு எருசலேம் பிரயாணிகள். **Two Pilgrims to Jerusalem**	...	0	2	0
நான்காம் சாஸ்திரி. **The Fourth Wise Man**	...	0	1	0

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

Post Box 501, Park Town, Madras

9 E. 1½ M. T. 15½ M.